


KALKI
3.5.87
ரூ. 1.50
கல்கி
தலையில் சூடும் மல்லி;
தரையில் துவளும்
விவசாயி!



வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.
அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரோடின் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழநதைகளுககுத் தேவை காம்ப்ளான்— இப்போது. காம்ப்ளான் சிறந்த புரோடின் கொண்டுள்ளது— பால் புரோடின் (20%). அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
Complan
COMPLETE PLANNED FOOD
STRAWBERRY FLAVOUR
23
மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்த்திடத் தேவையில்லை.
காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு
GX/19/203 TML

காற்றுக்குப் புதிய திசைகாட்டு



இளைஞனே!

வீட்டுக்கு உயிர் வேலி;
வீதிக்கு விளக்குத்தூண்;
நாட்டுக்குக் கோட்டைமதில்;
நடமாடும் கொடிமரம் நீ!

வானுக்கும் பூமிக்கும்
வைக்கப் பட்டிருக்கும்
ஏணி உன்மேனி;
இளைப்பறியா நீ தேனீ!

பொழுதைப் போக்குவதே
பொழுது போக்கென்றெண்ணி
வழிதவறிப் போவதற்கா
வையத்தில் பிறப்பெடுத்தாய்?

திசைகாட்டத் தெரியாத
திண்ணைப் பேச்சுகளை
அசைபோட்டுக் கொண்டிருக்கும்
அஃறிணையாய் மாறாதே!

உன்னுடைய தேசத்தின்
உறுப்புகளை வளர்க்கும் நீ
உன்னுடைய தேசத்தின்
உயர்வுக்குச் செய்ததென்ன?

சோற்றுக்கா உன்னுடம்பு?
சோம்பலுக்கா நீயிருந்து?
காற்றுக்குப் புதியதிசை
காட்டலாம் வாஎழுந்து!

விதிக்கு விடிவிங்கே
வேர்விட்டுக் கிளைபரப்பும்
சாதிக் கொடுமரத்தைச்
சாய்க்க வரும் கோடரி நீ!

தேசியக் கொடி விற்றுத்
தின்பண்டம் திரட்டுகிற
மோசடியை முறியடிக்க
முழங்கிவா இளம்புயலே!

'செவ்வாயி'ல் செங்கரும்பு
சீக்கிரமாய் முளைக்கச் செய்!
எவ்வாய்க்கும் 'நிலா'ச் சோறு
இன்றைக்கே கிடைக்கச் செய்!

உன்னுயரம் தெரியாமல்
உணர்வின்றிக் கிடப்பதனால்
மண்ணுயரம் அதுகூட
மலையுயரமாய்த் தெரியும்!

என்னுயரம் இதுவென்று
எழுந்துநில்; அப்போது
விண்ணுயரம் கூட உன்
விலாவுக்குக் கீழேதான்!

திசைகளுக்குக் கொஞ்சம்
தன்மானப் பயிற்சி கொடு;
திசைகளைத் திருத்தித்
தேசத்தைப் புதிதாக்கு!

—தாரா பாரதி

தலையில் சூடும் மல்லி;



• ஒரு சேர் பறித்தால் முப்பது பைசா கூலி.

"**ம**ல்லிகைப்பூ என்ன விலைங்க...?''

''ரூபாய்க்கு இரண்டு முழம்!''

''கொஞ்சம் குறைச்சுக்கலாமே...''

''மல்லி சேர் மூணரை ரூபாய்க்கு வாங்கி உனக்கு முழம் முப்பது பைசான்னு குடுக்க முடியும்? பூ என்னு அடர்த்தியா இருக்கு பாரு. ஒரே விலைதான். வேணுமானு வாங்கிக்க இல் லைன்னு போய்க்கினே இரு...!''

— மாம்பலம் பஸ் ஸ்டாண்டு அருகே பூ விற்றுக் கொண் டிருந்த பெண் பொரிந்து தள்ளிவிட்டார்.

அவர் சொன்னது முற்றிலும் உண்மையில்லை என்பது அன்று காலை பூக்கடைக்குப் போய் வந்திருந்த எங்களுக்குத் தெரிந்திருந்தது.

பூக்கடை பஸ் ஸ்டாண்டில் அணிவகுத்து நின்ற பஸ்களி லிருந்து சிறியதும் பெரியதுமான மல்லிகைப்பூ மூட்டைகளை அலட்சியமாக உருட்டி விட்டுக்கொண்டிருந்தார்கள் கூலிக் காரர்கள்.



• ராமலிங்க ரெட்டியார்

பிரதான கடைக்கு வெளியே இருந்த பெட்டிக் கடைகளில் வாழை நார் வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. அன்றைய மல்லி மார்க்கெட் நிலவரத்தை நாடிபிடித்த படி நின்ற சில சில்லறை வியாபாரிப் பெண்களை அணுகிக் கேட்டோம்:

''இன்னைக்குப் பூ என்ன விலைங்க?''

''இப்ப இரண்டு ரூபாய் விக்குதுங்க. இன்னும் நிறைய பூ வந்து இறங்குகிறதைப் பார்த்தா விலை குறையும்னு தோணுது. ஒரு சேர் ஒண்ணரை ரூபாய், ஒரு ரூபாய்க் கூட வரும்னு நினைக்கிறோம்.''

''ஒரு சேர்ல எத்தனை முழம் கட்டுவீங்க?''

''பத்து, பன்னிரண்டு முழம் வரைக்கும் கட்டலாங்க. ரொம்ப நெருக்கமாக் கட்டினு எட்டு முழம் கட்டலாங்க.''

''இன்னைக்கு எவ்வளவு லாபம் வரும்னு நினைக்கிறீங்க?''

''இன்னைக்கு வெள்ளிக்கிழமைங்கறதால பூ நிறைய விக் குங்க. இப்ப விக்கிற இரண்டு ரூபாய் விலைக்கே வாங்கினுக் கூட கட்டுற வங்க கூலியும், பஸ் சார் ஜும் போக இரண்டு ரூபாய்க்கு இரண்டு ரூபாய் முழுசா லாபம் வரும்ங்க.''

பூக்கடை மார்க்கெட்டுள் நடந்தோம். இரண்டு பக்கத்திலும் இருந்த மொத்த வியாபாரக் கடைகளில் மல் லிகைப்பூக் குவியல்கள் அரிக்கேன் விளக்கு வெளிச் சத்தில் புழுங்கிக் கொண் டிருந்தன. மொத்த வியா பாரிகள் கைலிகளை மடித் துக் கட்டிக் கொண்டு, சேர் சேராக (மூன்று சேர் = ஒரு கிலோ) அலுமினியத் தரா சுத்தட்டுக்களில் மல்லிகைப் பூவை நிறுத்து, எதிரே நீட்டப்பட்ட விதவிதமான பைகளில் கொட்டிக் கொண்டிருந்தார்கள். அருகே இருந்த தகர டப் பாக்கள் அழுக்கு அழுக் கான ரூபாய் நோட்டுக்க ளால் வேகமாக நிரம்பிக் கொண்டிருந்தன. சில உதவி



• சாரங்கன்

யாளர்கள் பூக்குன்றுகளைச் சிறுக்க அனுமதிக்காமல், புதிய மூட்டைகளை அவ்வப் போது பிரித்துக் கொட்டி, தண்ணீர் தெளித்து, லாவக மாகக் கிளறிவிட்டார்கள்

''எல்லாக் கடைகள்லை யும் மல்லிகைப்பூவுக்கு ஒரே விலைதானுங்களா?''

''ஆமாம்! இரண்டு ரூபாய்'' — கருமமே கண் ணாக இருந்த ஒரு வியாபாரி

தரையில் துவளும் விவசாயி



* பூக்கடையில் கருகருப்பாக வியாபாரம்

வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டே பதில் சொன்னார்.

"விலையை யார் நிர்ணயம் பண்றது? சங்கம் ஏதாவது இருக்குங்களா?"

"சங்கம் இருந்தது. தகராறு ஏற்பட்டு இப்ப அதைக் கலைச்சுட்டாங்க. அன்னன்னைக்குப் பூ விளைஞ்சு வர்றதைப் பார்த்து நாங்களே விலையைக் குறைச்சுக்குவோம் இல்லே கூட்டிக்குவோம்."

"இங்கேயிருந்து பம்பாய் டெல்லி போன்ற இடங்களுக்கெல்லாம் மல்லி அனுப்பறதுண்டா?"

"எப்பவாவது போகுமுங்க."

"மதுரை மல்லி எங்கே வந்து இறங்கும்?"

"அது இப்ப வர்றதில்லீங்க. பிளேன் வர்ற நேரம் மாறிட்டதாலே பூ வரரொம்ப பத்தாமதுமாயிடுது. தோதுப் படலேன்னு விட்டுட்டோமுங்க. இப்ப வர்றதெல்லாம் அக்கம் பக்கத்துல விளைஞ்சு வர்ற பூதான்."

"தொழில்ல லாபமெல்லாம் எப்படி?"

"மல்லி சீசன்ல ஏதோ பரவாயில்லீங்க."

"நீங்க சொந்தமாத் தோட்டம் வச்சிருக்கீங்களா?"

"ஐயோ! இல்லேங்க. ஆனா ரொம்ப நாளா தொழில்ல இருக்கறதுனால தோட்டக்காரங்களைத் தெரியும்."

"எத்தனை நாளா இந்த வியாபாரம் பண்றீங்க?"

"சுமார் இருபது வருஷமா எங்க குடும்பம் இந்தத்தொழில்ல ஈடுபட்டிருக்குங்க."

"தொழிலைப் பற்றியும் தோட்டத்தைப் பற்றியும் கொஞ்சம் சொல்லுங்களேன்."

"பெருங்களத்தூர்ல ராமலிங்க ரெட்டியார்னு எங்க அப்பா இருக்காருங்க. அவரைக் கேட்டீங்கன்னா விவரமாச் சொல்லுவார். அங்கேயே தோட்டமும் இருக்கு. நீங்க பார்க்கலாம்.



* முக்கு முத்தாக...



* துரைசாமி

• • •

பெருங்களத்தூருக்கு எங்களை வழிகாட்டி அழைத்துச் சென்றவர் சாரங்கன். மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் அருகே பூக்கடை வைத்திருக்கிறார். வேனில் ஏறும்போது, "கவிதாலயா வேலையைக் கவனிங்க தம்பி" என்று தமது உதவியாளருக்கு நினைவூட்டி விட்டு ஏறினார்.

"கவிதாலயாவில் என்ன வேலைங்க?"

"பாலசந்தர் சார் படத்துல ஒரு flower shot வருதுங்க— அதுக்கு அலங்காரம் பண்ணணும்."

"அப்ப உங்க மெயின் பிசினஸ் சினிமாக் காட்சி அலங்காரம்தானா? அதுல நிறையப் பணம் வருமே?"

"ஓஹோன்னு பெரிசா லாபம் வந்துடாதுங்க. ஆனால் இப்ப என் குடும்பம் பசியில்லாம சாப்பிட முடியுது. ஒரு சராசரி கல்யாணத்துக்குப் பூக்குடுத்தாக் கூட 750 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை ஆகுது. பூவுக்கு ஆயிரம் ரூபா



* மூட்டை மூட்டையாக மல்லிகைப்பூ......

யா'ன்னு கல்யாண வீட்டுல அங்கலாய்ப்பாங்க. இந்தக் காலத்துல, பொன்னை வைக்கிற இடத்துல பூவை வச்சேன்னு சுலபமாச் சொல்லிட முடியாது!''

''அப்ப உங்களுக்குத் தொழில்ல நல்ல லாபம் வரணுமே?''

''அப்படித்தான் பார்க்கிறவங்களுக்குத் தோணும். கல்யாணங்கள்லயும் சரி, சினிமா ஷூட்டுக்கும் சரி, அலங்காரம் பண்றதுக்குத் தேர்ந்த ஆட்களைக் கூட்டிட்டுப் போகணும். அவங்களுக்கும், மாலை கட்டறவங்களுக்கும் பூத் தொடுக்கிறவங்களுக்கும் கூலி, தவிர காப்பி, டிபன், சாப்பாட்டுச் செலவுன்னு இழுத்துக்கிட்டே போகும். நாங்க அட்வான்ஸ் வாங்கறப்ப பூ ஒரு குறிப்பிட்ட விலை விக்கும்னு உத்தேசத்துலதான் வாங்குவோம். ஆனால் வாங்கற தினத்துலே அதிக விலை வித்தா நஷ்டம் எங்களுக்குத்தான். அந்தச் சமயத்துல நாங்க எங்க 'ரேட்டை' ஏத்த முடியாதே!''

பெருங்களத்தூரில் தம் வீட்டை ஒட்டிய தமது காலி மனையில் காமாக்ஷி அம்மனுக்கு ஒரு கோயில் கட்டிக் கொண்டிருக்கிறார் ராமலிங்க ரெட்டியார்.

''இருபது வருஷங்களுக்கு மேல் இந்தத் தொழில்ல இருக்கீங்க. உங்க அனுபவத்துல இது லாபகரமான தொழில்னு நினைக்கிறீங்களா?''

''தோட்டக்காரர்களிடம் பூ வாங்கி விற்றுத் தர பன்னிரண்டு பர்சன்ட் கமிஷன் வாங்கறோம். ஆனால் தோட்டக்காரங்க எங்ககிட்டே முன்பணம் வாங்கித்தான் செடி வாங்கி நட்டுச் சாகுபடி பண்றாங்க. முதல் ஒரு வருஷத்துக்கு வருமானத்தையே பார்க்க முடியாது. அதுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமா முன் பணத்தைக் கழிச்சுக்குவோம். இடை இடையே திரும்பவும் கடன் குடுக்க வேண்டியிருக்கும். உரம், பூச்சி மருந்து, மோட்டார் ரிப்பேர்னு ஏதாவது ஒரு செலவு வரும். தோட்டக்காரருக்கு என்னென்ன பிரச்னை வருகிறதோ அந்தப் பிரச்னைகளெல்லாம் எங்களையும் பாதிக்கும். அதனாலே இதுல பிரமாதமா லாபம் இருக்குன்னு சொல்லிட முடியாது.''

''மல்லிகைப்பூத் தொழில்லே யாருக்குமே லாபம் இல்லேன்னா எப்படி நம்புவது? இத்தனை நாட்களாக அந்தத் தொழில் அழிஞ்சு போயிருக்கணுமே?'' என்று கேட்ட போது சாரங்கன் குறுக்கிட்டார்:

''லாபமே கிடையாதுன்னு சொல்லலே. கஷ்டங்கள், ரிஸ்க் அதிகம்னு சொல்றோம். மல்லிகைப்பூவோட வாழ்வு ஒருநாள்தானே. காலை பன்னிரண்டு அல்லது ஒரு மணிக்குள் அதன் தலையெழுத்து நிர்ணயமாகிவிடும். ஆனால் எங்கள் எல்லாரையும் விட அதிகமாகப் பாதிக்கப்படறது தோட்டம் வைச்சிருக்கிற விவசாயிதான்.''

இந்தக் கருத்தை ரெட்டியாரும் ஆமோதித்தார்.

துரைசாமி இரண்டு ஏக்கரில் மல்லி பயிரிட்டிருந்தார். பெருங்களத்தூர் எல்லையில் இருந்த அவர் தோட்டத்தில், இளம் பச்சைப் புதர்கள் ஈன்ற வெண் முத்து மல்லிகை அரும்புகள் அறுவடையாகிக் கொண்டிருந்தன.

''ஒரு சேர் பூ பறித்தால் முப்பது பைசா கூலி கிடைக்கும். காலை நாலு மணிக்கு ஆரம்பிச்சு ஒன்பது மணிக்குள்ள எல்லாப் பூவும் பறிச்சுடுவோம்'' என்று விளக்கினார் அந்த வேலையில் ஈடுபட்டிருந்த சரோஜா.

''பூ பறிக்கறது அவ்வளவு சுலபமான வேலையில்லே,'' — சாரங்கன் இன்னும் விரிவாகச் சொன்னார். ''அதிகாலை இருட்டுக்குக் கண் பழகணும். வெயில் வந்துட்டா சூரிய வெளிச்சம் வெள்ளைப் பூ மேல் பட்டுக் கண்ணில் 'பூச்சி பறக்க'ச் செய்யும். போகப் போகப் பூ இருக்கிறது தெரியாதே கஷ்டமாயிடும்.''

இதற்குள், செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த துரைசாமி வந்தார்.

''மல்லிகைச் செடியை ஒரு குழந்தை மாதிரி வளர்க்கணும்னு சொல்லுவாங்க. அது உண்மையா?'' என்று அவரைக் கேட்டோம்.

''நூத்துக்கு நூறு உண்மைங்க. இந்தத் தோட்டத்துச் செடிங்களைப் பத்து வருஷமா நான் அப்படித்தான் வளர்த்துக்கிட்டு வர்றேன். நாத்துகளை மண்டபத்திலிருந்து (ராமேஸ்வரம்) ஆயிரம் ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கினேன். ஆறடி இடைவெளிக்குக் குழி வெட்டி, குழிக்கு இரண்டு, மூன்று நாத்து நடுவோம். ஒண்ணு இல்லேன்னாலும் ஒண்ணு பிழைச்சுக்கும். மாட்டுச் சாணம் தவிர இப்போ பொட்டாஷ் டி. ஏ. பி. மாதிரி உரங்களும் போடறோம். மழைக் காலத்துல நல்ல மழையும் வெயில் காலத்துல நிறைய வெயிலும், மல்லிக்குத் தேவை. பூமி சதும்ப ஈரமாகிக் காயணும். காய்ஞ்ச பூமியைத்

* இரண்டு ரூபாய்க்கு இரண்டு ரூபாய் லாபம்.



மணமான ஒரு தொழில்

* தமிழ்நாட்டில் மல்லிகைப்பூ பயிரிடப்படும் பகுதிகள் சேலம், மதுரை, அண்ணா, வடஆற்காடு, தஞ்சை, செங்கல்பட்டு மாவட்டங்கள். இவற்றில் பெரும் பகுதி பயிரிடப்படுவது மதுரை, அண்ணா மாவட்டங்களில்தான்.
* மல்லியிலிருந்து எடுக்கப்படும் திரவமான கான்கிரீட் ஒரு அவுன்ஸ் சுமார் 25,000 சொட்டுகள் கொண்டது. ஒரு சொட்டு கான்கிரீட்டைக் கொண்டு சுமார் இருபதாயிரம் சோப்புக் கட்டிகளுக்கு வாசனையூட்ட முடியுமாம்!
* மல்லிகைப் பூவில் வைட்டமின் A உள்ளதால், சில மருந்துப் பொருட்கள் தயாரிப்பிலும் இது பயன்படுகிறது.
* தினமும் மலேசியா, சிங்கப்பூர் இவற்றுக்கு விமானம் மூலம் மல்லிகைப்பூ ஏற்றுமதி செய்யப்படுகிறது.
* கான்கிரீட் அதிகப்படியாய் ஏற்றுமதி ஆவது அரபுநாடுகளுக்குத்தான். அவர்களுக்குத்தானே வாசனைத் திரவியங்கள் மீது அலாதிப் பிரியம்!
* மல்லிகை கான்கிரீட் தயாரிப்புக்கென அரசு ஆதரவுடன் ஒரு கூட்டுறவுத் தொழிற்சாலை மேட்டுப்பாளையத்தில் செயல்பட்டு வந்தது. அதையும் மூடிவிட்டார்கள்.
* இப்போதுள்ள சில மல்லிகை கான்கிரீட் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தனியார் வசமே உள்ளன. அவை மிகச் சிறப்பாய்ச் செயல்பட்டு, லாபகரமாய் நடக்கின்றன.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி.

திரும்ப நாலு நாள் கழித்து ஈரமாக்கணும். அப்பத்தான் பூ நிறையப் பூக்கும். செம்மண் பூமியா இருந்தால் ரொம்ப நல்லது. பூத்து ஓய்ந்த பிறகு இலைகளையெல்லாம் உருவி விட்டுடணும். சில நேரங்கள்ல ஆடுகளை மேய விட்டு இலைகளை அடியோட நீக்கிடுவோம்."

"பூவுக்கு நல்ல விலை கிடைக்குமா?"

"அது சொல்ல முடியாதுங்க. மொத்த வியாபாரிங்க பூவை எங்ககிட்டேயிருந்து எடுத்துக்கிட்டு, அன்னன்னைக்கு விக்கிற விலைப்படிதான் பணம் தருவாங்க."

"லாபம் எவ்வளவு வரும்?"

"அட என்னங்க நீங்க. வரவுக்கும் செலவுக்கும் சரியாப் போயிடுது. அப்புறம் எங்கேயிருந்து லாபம் வரும்? நாத்து நட்டு முதல் ஒரு வருஷத்துக்குப் பூ இருக்காது. இதுல நாங்க வாங்கின கடனையெல்லாம் அடைக்கணும். அதோட செடிங்கள்ல பூச்சி வர்ற ஆபத்து வேற இருக்கு. நல்லா வளர்ந்துக்கிட்டே வர்ற செடியிலே மயிரிழையைவிட மெல்லிசாய், கண்ணுக்கே தெரியாத பூச்சி வந்துச்சுன்னு அதோட செடி பாழ்தான்."

"பூச்சிக்கு மருந்து எதுவும் அடிக்கறதில்லையா?"

"கையில காசிருந்தா வாங்கி அடிப்போம்."

"இவங்களுக்கு அரசாங்கம் கடனுதவி செய்ய முன்வரணுங்க" என்று சாரங்கன் சிபாரிசு செய்தபோது, "இவங்க கடன் கேட்க முயற்சி பண்ணியிருக்காங்களா?" என்று விசாரித்தோம்.

சாரங்கன் சொன்னார்: "என் வியாபாரத்துல மட்டும் வருஷத்துல ஒன்றரை லட்சம் ரூபாய் புரளுதுங்க. ஆனால் எனக்கே ஒரு பாங்குல இரண்டாயிரம் ரூபாய் கடன் குடுக்க இரண்டாயிரம் யோசனை பண்றாங்க. இந்த நிலையிலே இவருக்கு எப்படிக் குடுப்பாங்கன்னு நினைக்கிறீங்க? அரசாங்கம் இந்த விஷயத்துல தீவிரமா நடவடிக்கை எடுக்கணும். மல்லிகைப்பூ சாகுபடியையும், வியாபாரத்தையும் முறைப்படுத்தணும். கடனுதவியைச் சுலபமாக்கணும், உற்பத்தியை அதிகப்படுத்தணும்."

"நீங்களே சொன்னீங்க. மல்லிகைப்பூவுக்கு ஒருநாள் வாழ்வுதான்னு. அப்படியிருக்கும்போது உற்பத்தி பெருகிட்டா அதற்கேற்ப வாங்கும் சக்தியும் பெருக வேண்டாமா? இல்லாவிட்டால் திரும்பவும் விவசாயி தானே பாதிக்கப்படுவார்?"

"அதுவும் வாஸ்தவம்தான்" என்று ஒப்புக் கொண்டார் சாரங்கன்.

நிலைமை இப்படி இருக்க மல்லிகைப்பூ விவசாயியின் வாழ்க்கையில் மணம் வீச என்னதான் வழி?

இப்போதைக்கு மல்லிகைப்பூ பூஜைக்கும் தலையில் சூடுவதற்கும் மட்டுமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும், பெண்கள் சிக்கனம் கருதித் தினமும் பூ வாங்குவதில்லை. இளையதலைமுறையோ நவீனமாகத் தலை மயிரைக் கத்திரித்துக் கொண்டு பூச்சூடாத ஒரு நாகரிகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

எனவே மல்லிகைப்பூ ஒரு வெறும் அலங்காரப் பொருளாக இருக்கும் நிலை மாறி, ஒரு தொழிலுக்கு மூலப்பொருளாக விளங்கும் அந்தஸ்தைப் பெறவேண்டும். மல்லிகைப் பூவிலிருந்து அதன் மணத்தைத் தேக்கும் 'கான்க்ரீட்' என்ற மெழுகு போன்ற திரவத்தைத் தயார் செய்ய முடியும். இந்தத் திரவத்துக்கு அயல் நாடுகளில் வரவேற்பு இருப்பதால் அந்நியச் செலாவணி பெற்றுத் தரும் ஒரு சிறந்த தொழிலாக இது விளங்கக் கூடும்.

அரசின் கவனம் இந்தப் பக்கம் இதுவரை திரும்பாததில் அதிசயமில்லை. ஒருவேளை அது நல்லதுக்காகக் கூட இருக்கலாம்! ஆனால் தனியார் துறை இதில் இன்னும் அதிக அளவில் ஈடுபாடு காட்டாதது வியப்புக்குரியது.

— எஸ்ஸார்

மேலட்டையில்: சித்ரா, சசிகலா

வண்ணப்படம்: யோகா

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்

ஆஸ்திக அன்பர்களுக்கும் சமுதாயப் பணி செய்பவர்களுக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஒரு வேண்டுகோள்:

இந்து சமயத்தில். பல இறைவழிபாட்டு ஸ்தலங்களும், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் போன்ற பலவிதமான தெய்வீக சமூகநலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், அவைகளெல்லாம் தனிப்பட்ட டிரஸ்டு, கமிட்டி மூலம் நடைபெற்று வருவதால், ஹிந்து ஸ்தாபனம் என்று சுலபமாக அறிந்து கொள்ள முடியவில்லை. அதேபோல் மேற்படி ஸ்தாபனங்களில் ஏதாவது பிரச்னைகள், சிரமங்கள் ஏற்பட்டாலும் அதைப் பகிர்ந்து கொள்வதற்கு யாரும் முன்வரவில்லை. ஸ்தாபனங்கள் ஆரம்பித்தாலும் ஆரம்பித்தவர்களாலேயே தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டு அதனால் பலவித சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் கோயில்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற தனியார் ஸ்தாபனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் ஹிந்து தர்ம அண்டு சாரிடபிள் டிரஸ்டு என்று ஏற்படுத்தப்படுகிறது. அதன் மூலம் தனியார் ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றும் தங்கள் தங்களை நடத்திக் கொண்டு இந்த டிரஸ்டுடன் இணைந்து, இந்த டிரஸ்டின் பெயரில் கொடுக்கப்படும் நம்பரைப் பதிவு செய்து கொண்டு இந்தப் பணிகளைத் தொடர்ந்து அந்தந்த ஸ்தாபனங்கள் நடத்தி வந்தால் ஹிந்து ஸ்தாபனங்களிடையே ஒருங்கிணைந்த பணியும், பணியில் ஒற்றுமையும், பிரச்னைகள் ஏதாவது வந்தால் அதைத் தீர்ப்பதற்கும் மற்றும் ஒரு ஸ்தாபனத்துடன் தொடர்ந்து நடத்துவதற்கு ஆசியும் ஆலோசனையும் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே ஒவ்வொரு தனியார் ஸ்தாபனங்களும் ஜூன் 7 ந்தேதிக்குள் இந்த டிரஸ்டுடன் இணைந்து செயல்பட இருக்கிறோம் என்று காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் மடத்திற்குத் தகவல் எழுதினால், தகுந்த பிரதிநிதியைப் பிறகு அனுப்பி வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். இது சம்பந்தமாக டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் விலாஸமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

Lt: Col: R: V: Subramaniam.
Plot : 842 — 91 — Street.
Sector — 13, K: K: Nagar.
Madras — 78.

Sri: S: Krishnamurthy.
58, IV Trust Cross Street.
Mandavallipakkam. Madras — 28.

"ஸ்ரீ காமாக்ஷி கல்யாண மண்டபம்,
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்,
திருமலா, திருப்பதி.


இப்பவும் திருப்பதியில் திருமலையில் பகவான் ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி க்ஷேத்திரத்தில் பல பேர் பிரார்த்தனைக்காக கல்யாணம், உபநயனம் போன்றவைகள் நடத்துகிறார்கள். இதற்கென ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் "ஸ்ரீ காமாக்ஷி கல்யாண மண்டபம்" என்று திருமலையில் மைசூர் சத்திரத்துக்கு சமீபத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்த இடத்திலிருந்து மூலஸ்தான ஸ்வர்ண விமான தரிசனம் கிடைக்க வாய்ப்பாக அமைந்துள்ளது. குறைந்த வாடகையில் சுபகாரியங்கள் செய்வதற்கும், யாத்திரிகர்கள் தங்குவதற்கும் எல்லா வசதியுடனும் கூடிய அறைகள் அமைந்துள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Manager. "ஸ்ரீ காமாக்ஷி கல்யாண மண்டபம்,"
Sri Kanchi Kamakoti Peetam.
Tirumala. Tirupathi.
Chithoor Dist: (Andhra Pradesh).

ஆஸ்திக அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்:

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம், காஞ்சிபுரம்.

பாரத தேசத்தில் பலபுண்ணிய க்ஷேத்ரங்களுக்கும் பலபுண்ணியதீர்த்தங்களுக்கும் ஆஸ்திக அன்பர்கள் சென்று வருகிறார்கள். இவர்களெல்லாம் தங்குவதற்கு வசதியாக ஸ்ரீ மடத்தின் சார்பில் பூரி, காசி, கயா, அலகாபாத், ஹரித்வார் ஆகிய இடங்களில் ரூம்கள் கட்டப்பட இருக்கின்றன. ரூ. 25,000/—க்குக் குறையாமல் நன்கொடை கொடுப்பவர்களுக்கு அவர்கள் பெயரிலேயே ரூம் ஒன்று கட்டப்படும். அதற்குக் குறைந்து நன்கொடை கொடுப்பவர்களுக்கு அவர்களுடைய பெயர்கள் எழுதி வைக்கப்படும். யாத்திரை செய்யும் சமயத்தில் ஸ்ரீ மடத்திற்கு எழுதினால் அந்தச் சமயத்தில் தங்குவதற்கு இடவசதி அளிக்கப்படும். இதுசம்பந்தமாக நன்கொடை அளிப்பவர்கள் அந்தந்த ஊரைக் குறித்து எழுதி நன்கொடையை Manager. Sri Kanchi Kamakoti Peetam. 1, Salai Street. Kanchipuram — 2. என்ற விலாசத்திற்கு அனுப்பினால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.





காலனுக்கு மறுபெயர் காமா கோதுமை!

உணவு தானியங்களைப் பூச்சிகள் அழித்து விடாமல் இருக்க நமது அணுசக்தித் துறை, கதிர்வீச்சை (Gamma ray Irradiation) உபயோகிப்பதை வெகு நாட்களாக வற்புறுத்தி வந்துள்ளது. அதற்கு இப்போது நமது மத்திய அரசு பச்சைக்கொடி காட்டி விட்டது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னாள் தலைவரும் புகழ்பெற்ற உணவுச் சத்து நிபுணருமான டாக்டர் ஸி. கோபாலன் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது பொது மக்களின் உடல் நலத்துக்கு மாபெரும் தீங்கு விளைவிக்கும் என்கிறார் இவர். காமா கதிர்களைக் கோதுமையில் பிரயோகிப்பது கோடிக் கணக்கான ஏழை மக்கள் சாப்பிடும் கோதுமை உணவு மூலம் அவர்கள் உடல் நலத்தைப் பாதிக்கும் என்கிறார். அரசு நெருப்புடன் விளையாடுகிறது.

கதிர்வீச்சின் மூலம் தானியங்களைப் பாதுகாக்கும் முறை சென்ற ஆறு வருஷங்களாகப் பெரும் சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது. கதிர்வீச்சுக்குள்ளான புதிய கோதுமைத் தானியம் அதை உட்கொள்வோர்க்கு ரத்தத்தின் சிவப்பணுக்களில் க்ான்சரை உண்டாக்க வல்லது.

உணவு தானியங்களின் மீது கதிர் வீச்சைப் பிரயோகிப்பது காலஞ்சென்ற பிரதமர் இந்திராகாந்தியால் அனுமதிக்கப்படவில்லை. விஞ்ஞானிகளிடையே இவ்விஷயத்தில் கடுமையான கருத்து மாறுபாடுகள் இருப்பதால் மக்களின் உடல்நலத்தில் 'ரிஸ்க்' எடுத்துக் கொள்ள இந்திராகாந்தி தயாராக இல்லை என்பதை நினைவு கூர்கிறார் டாக்டர் கோபாலன். நமது அணுசக்தித் துறை 1976 முதல் உணவு தானியங்களின் மீது கதிர்வீச்சைப் பிரயோகிப்பதை அனுமதிக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தி வந்துள்ளது. அவர்களது வாதம், உடல் நலத்தைப் பாதிக்கக் கூடிய ரசாயனப் பொருள்களை உபயோகித்து உணவு தானியங்களைப் பாதுகாப்பதை விடவும், கதிர்வீச்சு 'மலிவு விலையில்' பூச்சிகளை அண்டவொட்டாமல் செய்கிறது என்பதுதான்.

திரு. கோபாலன், "கோதுமையைப் பாதுகாக்கவும், சேமித்து வைக்கவும் நடைமுறையில் நன்கு பரிசீலிக்கப்பட்ட, பாதுகாப்பானதென்று நிரூபிக்கப்பட்ட, சிக்கனமான பல வழிகள் இருக்கின்றன. அவ்வழிகள் தான் இப்போது நடைமுறையில் விவசாயிகளால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் கதிர்வீச்சைக் கோதுமை மணிகள் மீது பிரயோகிப்பது பற்றின முடிவு தேவையற்றதும் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதுமாகும்," என்கிறார்.


கதிர்வீச்சைப் பிரயோகித்த பின்னும் பன்னிரண்டு வாரங்கள் முழுமையாகச் சேமித்து வைத்து அதன் பின்பே பொது மக்களுக்குக் கதிர்வீச்சுக்குள்ளான கோதுமையை விநியோகிக்க வேண்டும் என்பது விதிமுறை. "இதற்கு யார் பொறுப்பாக இருக்கப் போகிறார்கள்? இதில் தவறு நேர்ந்து விட்டால் என்ன செய்வது?" என்று கேட்கிறார் திரு. கோபாலன்.

எவ்வளவோ முன்னேற்றமடைந்த கனடா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிலேயே கதிர்வீச்சைப் பிரயோகித்த தானியம் பற்றிக் கடும் சர்ச்சையும் எதிர்ப்பும் இருந்து வருகிறது.

பிரிட்டிஷ் மருத்துவ ஆலோசனைக் கழகம் கதிர்வீச்சை உணவுதானியங்களின் மீது பிரயோகிப்பது பற்றித் திட்டமிடுதலைக்கூட சில ஆண்டுகள் தள்ளிப் போடும்படி பிரதமர் திருமதி தாட்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆதாரம்: **ஹிந்து**

கட்டுரை: **அனந்தராமன்**


எங்க ரெக்கார்டை எல்லாம்
தூக்கி அடிச்சுட்டடே!
ஈழத் தமிழர் மீது
விமானத் தாக்குதல்
முசோலினி
ஹிட்லர்
ஸ்வீடன் நாட்டு
ரேடியோ, டி.வி,
பத்திரிகைகள்
ஆயுத
பேரத்தில்
பெருத்த ஊழல்
குற்றச்
சாட்டு
இந்திய
அரசு
மறைப்பு
அறிக்கை
-கள்
(கேடயம்)
பாண்டியன்
நகர்வாலா வழக்கு



கல்கி

1987 மே 3
மலர் 45 இதழ் 40
பிரபவ சித்திரை 20



நடுங்குவார்சிங்கைப் பின்பற்றுங்கள்!

நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் அகில இந்திய (இ) காங்கிரஸ் கமிட்டி கூடி, நாளெல்லாம் விவாதித்து மகத்தான முடிவுகளுக்கு வந்திருக்கிறது! அது என்னவெல்லாம் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறது என்று பார்த்தால் நாம் மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயிக்கப் பத்து விரல்கள் காணாது! ஒரு மூக்கும் போதாது!

மத்திய அரசின் ஸ்திரத்தன்மையைக் குலைத்துப் பலவீனப்படுத்த முயற்சி நடக்கிறதாம்! அதுமட்டுமல்ல, ராணுவத்தின் முப்படைகளையுமே நிலைகுலைந்து போகச் செய்யத் திட்டமிட்ட சதி நடக்கிறதாம்! பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நவீன யுத்த தளவாடங்களைத் தந்து கொண்டிருக்கும்போது இந்தியாவில் இத்தகைய சூழ்ச்சிகள் நடப்பது பேராபத்தானதாம்! போதாக்குறைக்குப் பிரதமரைவிட ஜனாதிபதியே மேலானவர் என்பதாக அரசியல் சாசனத்தைத் திரித்துக் கூறும் வேஷதாரிகள் வேறு வலைய வருகிறார்களாம்! இதற்கெல்லாம் சாதகமாகப் பல கட்டுக் கதைகள் அவிழ்த்து விடப்படுகின்றனவாம்!

யார் இந்தச் சதிகாரர்கள்? சூழ்ச்சியாளர்கள்? வேஷதாரிகள்? கோயபெல்சுகள்? — வேறு யார்? தேர்தலில் தோற்றபின் தந்திரத்தால் ஆட்சியைக் கவிழ்க்க முயலும் வலது சாரி எதிர்க்கட்சியினரே!

ராஜீவின் தலைமையில் நாளெல்லாம் யோசித்து இப்படி ஓர் அதிமேதாவித்தனமான தீர்மானத்தை நிறைவேற்றிய அ. இ. கா. க. அங்கத்தினர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை! அவர்களுடைய கற்பனை சக்தியையும் எழுத்தாற்றலையும் பாராட்டி ராஜராஜன் விருதே தரலாம் என்று தமிழக முதல்வருக்குச் சிபாரிசு செய்கிறோம்!

அ. இ. கா. க. இப்படித் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு பிரதமர் இதைவிட ஒரு படி மேலே சென்று எதையாவது கூற வேண்டாமா? எனவே அவர் நாடாளுமன்றத்தில் ஒரு மாபெரும் சவாலை வீசினார்! எதிர்க்கட்சிகளைப் பார்த்து, "சகட்டுமேனிக்குக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தாதீர்கள்! சாட்சியங்களைக் கொண்டு வாருங்கள்! குற்றச்சாட்டுக்களை நிரூபியுங்கள்! அப்புறம் நான் நடவடிக்கை எடுக்காவிட்டால் கேளுங்கள்!" என்றார். சிலிர்த்துப் போனோம்!

ஸ்வீடிஷ் நாட்டு போஃபோர் பீரங்கிகள் லஞ்ச ஊழல் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கும் போது, ஸ்வீடிஷ் ரேடியோ, டீ. வி. நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு புது அதிர்ச்சியை அளித்துக் கொண்டிருக்கும்போது, மேற்கு ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் பேரம் அமுங்கிக் கிடக்காமல் மேல் மட்டத்தில் மிதந்து, அகில உலகத்தின் பார்வையில் இந்தியாவின் நற்பெயரைப் புழுதியில் புரட்டி எடுத்துக் கொண்டிருக்கும் போது, அமெரிக்க ஃபேர்ஃபேக்ஸ் விவகாரம் பூதாகாரமாக வளர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும்போது, பிரதமரும் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இப்படியெல்லாம் பேசவும் தீர்மானங்கள் நிறைவேற்றவும் எவ்வளவு துணிச்சலும் சாதுர்யமும் சாமர்த்தியமும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணிப் பிரமித்துப் போகிறோம்!

யுத்த தளவாட சப்ளையில் லஞ்ச ஊழல் தாண்டவமாடினால் அது ராணுவத்தை நிலைகுலையச் செய்யாது! ஆனால் அதுபற்றிப் பேசினாலோ, உண்மைகளைக் கண்டறிய முயன்றாலோ, அல்லது குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க முற்பட்டாலோ ராணுவத்தின் முப்படைகளும் நிலைகுலைந்து போகும்! என்னே அரிய பெரிய தத்துவம்!

சாட்சியம் இல்லாவிட்டாலும் எழும் சந்தேகங்களைப் பேசத்தானே நாடாளுமன்றம் இருக்கிறது? அதற்காகவேதானே சட்டமன்ற உரிமைகள் வழங்கப்பட்டு உள்ளன! நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் சந்தேகங்களை ஆய்ந்தறிந்து உண்மைகளைக் கண்டு பிடித்துக் கூற வேண்டியது அரசின் கடமையல்லவா?' என்றெல்லாம் யாரும் அப்பாவித்தனமாகக் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது! இத்தகைய சந்தேகங்கள் உள்ளவர்கள், நட்வார் சிங்கைப் பின்பற்றுவார்களாக! நட்வார்சிங், அமெரிக்கா சென்று தலைவர்களிடம் அளந்து கொட்டிய போதிலும் பத்திரிகை நிருபர்கள் பேட்டி என்றதும், வேங்கடேசுவரனுக்கும் வேறு பல அதிகாரிகளுக்கும் வி. பி. சிங்குக்கும் இதர பல அமைச்சர்களுக்கும் நேர்ந்த கதி நினைவுக்கு வர, நடுங்குவார்சிங்காக மாறி, வாய் மூடி மௌனியாகி விடவில்லையா? அவரைப் போல் விளங்கப் பழகிக் கொள்வார்களாக!

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுத சப்ளை செய்வதே, இந்தியாவில் ஒருவர் பாக்கியின்றி அனைவரும் ஒருமுகமாக ராஜீவின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த, உன்னதமான நோக்கத்துக்காகத்தான் என்பதைப் புரிந்து கொண்டு அதன்படி நடப்போமாக!

ஜிங் சக்கே சுகம்! ஜிங் சக்கே சுபம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

மாதம் ஒரு மாவட்டம்

வடாற்காடு

மாவட்டத்திற்கு வரப்போகிறோம்!



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

அமைதியின் உருவமாகத் திருவண்ணாமலையில் அமைந்திருக்கும் ரமணர் ஆசிரமத்தை நாம் எப்படி மறக்க முடியாதோ, அதேபோல், திருப்பத்தூரில் நடந்த தீவிரவாதிகளின் போராட்டங்களையும், அதை அடக்கும்போது நடந்த மனித உரிமை மீறல்களையும் நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. இந்த முரண்பட்ட முகங்களுக்கும் செயல்களுக்கும் என்ன காரணம்? சந்தேகமென்ன, பிரச்னைகள்.... பிரச்னைகள்.... பிரச்னைகளேதான் காரணம்.

அதனால்தான், கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில், பதினைந்தாவது மாவட்டமாக வடாற்காடு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எனவே, வடாற்காடு மாவட்டம் முழுவதிலுமுள்ள பிரச்னைகள் அல்லது அவரவர் ஊர்ப் பிரச்னைகள், இல்லையெனில், தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் சமூக விரோதிகளுடைய அட்டகாசங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இவற்றோடு உங்கள் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் சேர்த்தே எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, ஜூன் மாத மத்தியில், நமது கல்கி பிரதிநிதிகள் வடாற்காடு மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப் பயண முடிவில், கல்கி பிரதிநிதிகள், வடாற்காடு மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைகளுக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசி — விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் ஜூலை மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும், புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் பிரசுரித்து விட முடியாது என்பது உண்மையே என்றாலும் நியாயமான பிரச்னைகள் அத்தனையும் மாவட்டக் கலெக்டரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லப்படும். அதன் மூலம் அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்ப முடியும். இவற்றோடு, வாழ்க்கையின் அன்றாட அவலங்களையும், சமூக விரோதிகளின் மோசடிகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம் நமது சகோதர மக்களிடத்திலும் ஓர் ஒட்டு மொத்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியுமல்லவா! உடனடியாக எழுதியனுப்புங்கள்.

வடாற்காடு மாவட்டம் பற்றிய பிரச்னைகள், அநீதிகள் தவிர, சாதனைகளும் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.5.87.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம்' — வடாற்காடு' என்று அவசியம் குறிப்பிடுதல் வேண்டும்.

— ஆசிரியர்

பி.கு.: இப்போது நமது பிரதிநிதிகள் திருச்சி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சேகரித்து வரும் பரபரப்பூட்டும் செய்திகள் மே 24, 31 தேதியிட்ட கல்கி இதழ்களில் வெளி வரும்.

தராசைச் சிறை வைத்திருந்தால்...?



* பஸ்ஸில் படம்?





* பீஷ்ம சபதம்!



* சினிமாக் கருத்து

நீங்கள் கேட்டவை — தராசு

* கே. ரமேஷ், சென்னை — 4.

? 'ஆவதும் பெண்ணாலே மனுஷன் அழிவதும் பெண்ணாலே' என்ற வைரமுத்துவின் இந்தப் பாடலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறேன்...

! நீங்கள் மட்டுமென்ன; சிந்திக்கத் தெரிந்த எந்த மனிதனும் ஒப்புக் கொள்ளத் தான் மாட்டான். இது வைரமுத்துவின் சொந்தக் கருத்தாக இருக்கும் என்று தோன்றவில்லை. சினிமாக் கதைக்கு ஏற்ப எத்தனையோ எழுதுகிறார்கள். அந்த அபத்தங்களில் ஒன்றாகத்தான் இருக்கும்.

* டி. கே. வசந்தன், சென்னை — 14.

? கருணாநிதியின் தமிழை நீர் நேசித்தால் அது ரசனை! எம். ஜி. ஆரின் நற்பண்புகளைப் பிறர் நேசித்தால் அது அறிவிலித்தனம்! இது எந்த ஊர் நியாயமுங்க?

! ஒரு விசாரணை கமிஷன் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். முதல்வரின் கொள்கைகளில் உள்ள குறைபாடுகளையும் திட்டங்களில் உள்ள ஓட்டைகளையும் செயல் முறையில் உள்ள மெத்தனங்களையும் தவறுகளையும்தான் கல்கி விமர்சிக்கிறதே தவிர எம். ஜி. ஆரின் நற்பண்புகளை என்றுமே குறை கூறியதில்லை. அப்படியிருக்க நீங்க இப்படி ஒரு கேள்வி கேட்பது எந்த ஊர் நியாயமுங்க?

* பூந்தை பாலு, சென்னை — 4.

? அனைத்துப் போக்குவரத்துக் கழக பஸ்களிலும் பஸ் நிலையங்களிலும் எம். ஜி. ஆர். படத்தை வைக்க வேண்டும் என்று சட்ட சபையில் ஓர் எம். எல். ஏ. பேசியிருக்கிறாரே?

! ஆகா! அருமையான யோசனை! திருவள்ளுவர் படம் இருந்த இடத்தில் எம். ஜி. ஆர். படத்தை வைப்பதுடன் திருக்குறள் இருந்த இடத்தில் எம். ஜி. ஆர். திரைப்படப் பாடலையும் எழுதி வைக்கலாம். 'மெதுவா, மெதுவா, தொடலாமா?' என்பது போல் எத்தனையோ அற்புதமான பாடல்கள் உள்ளன. பயணிகள் கிளுகிளுத்துப்போவார்கள்!

* எஸ். வி. ரமணன், தஞ்சை.

? எதிர்க்கட்சிகள் மாநாட்டுக்கு எம். ஜி. ஆருக்கு அழைப்பு வராதது எதைக் காட்டுகிறது?

! மாநிலத்தில் அ. தி. மு. க. ஆளும் கட்சி; மத்தியில் அது ஜால்ரா கட்சி என்பதைத் தான்.

* இதயஜீவி, திட்டச்சேரி.

? அரசியல் சாசனச் சட்டத்தின் ஒரு பகுதியை எழுதிஎரித்ததற்காகச் சட்டசபையி

விருந்து பத்து தி. மு. க. எம். எல். ஏக்கள் நீக்கப்பட்டது சரி என்று உயர்நீதிமன்றம் அறிவித்து விட்டதே?

! இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. 'சட்டசபை விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிடலாமா?' என்பது ஒன்று. 'அரசியல் சாசனத்தில் ஒரு பகுதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க, அந்த ஒரு பகுதியை மட்டும் வேறு தாளில் எழுதி எரித்து, எதிர்ப்பை உணர்த்துவது குற்றமா?' என்பது மற்றொன்று. பின்னதில் நான் தெளிவாக இருக்கிறேன். முன்னதில் தெளிவு பிறக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட் என்ன சொல்கிறதோ, பார்ப்போம்.

*** இந்திரா கோபாலன், திருச்சி.**

? 'இனி எந்த ஒரு அரசு பதவியும் எதிர்காலத்தில் வகிக்க மாட்டேன்' என்ற வி.பி சிங்கின் பீஷ்ம சபதம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

! அவருடையது பீஷ்ம சபதம் என்பதை ஏற்றுக் கொண்டால் ஆட்சியில் இருப்பவர் துரியோதனாதியர் என்று ஒப்புக் கொள்வதாகிறது. புராண கௌரவர்கள், பீஷ்மரின் அறிவுரைகளை ஏற்காது போனாலும் சகித்துக் கொள்ளவாவது செய்தார்கள். இன்றைய துரியோதனாதியர் அந்தச் சகிப்புத்தன்மை கூட இன்றி வி. பி. சிங்கை ஆட்சியிலிருந்து மட்டுமின்றி கட்சியிலிருந்தே விரட்டி விடத் துடிக்கிறார்களே!

*** பி. எஸ். வெங்கடேசன், சென்னை.**

? அரசியல்வாதிகள் தோளில் எப்போதுமே துண்டு போட்டுக் கொள்வதின் அர்த்தமென்ன?

! அகப்பட்டவரை சுருட்டிக் கொள்ள; மாட்டிக் கொண்டால் தலையில் போட்டுக் கொள்ள!

பி. பி. குமார், விருத்தாசலம்.

? இலங்கைத் தமிழர் பிரச்னை இப்போது எப்படியுள்ளது?

! இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சோகமாக விசுவரூபம் எடுத்திருக்கிறது. அங்கு நிலவும் இனப் பிரச்னையும் அன்றாடம் நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் பலியிடப்படுவதும் அநாகரிகத்தின் எல்லை. ஐ. நா. சபையில் ஓர் அவசரத் தீர்மானம் நிறைவேறி, அனைத்து நாடுகள் பங்கேற்கும் ஓர் அமைதிப்படை அனுப்பி வைக்கப்பட்டு, முதலில் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பிறகு பேச்சு வார்த்தைகளுக்குச் சம்பந்தப்பட்ட அனைவரையும் ஐ. நா. நிர்ப்பந்திக்க வேண்டும். இதைச் செய்யாத ஐ. நா. இருந்தென்ன பயன்?

*** பி. எம். பிரபாகரன், திருமருகல்.**

? தலைவர், தொண்டர் விளக்குங்களேன் — பிளீஸ்...

! ஸ்விஸ் பாங்கில் கணக்கிருந்தால் தலைவர்; லோக்கல் பாங்க் என்றால் தொண்டர்.

*** எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

? தாயின் பரிவு, நண்பனின் ஆறுதல், காதலியின் அரவணைப்பு — துன்பம் நேர்கையில் மனத்தை அமைதிப்படுத்தும் ஆற்றல் எதற்கு அதிகம்?

! இந்த மூன்றுமே ஒன்றாகக் கலந்திருப்பது மனைவியின் அரவணைப்பில்தான், சுவாமி!

*** க. சங்கர், முசிறி.**

? விகடன் ஆசிரியரைச் சிறைப்படுத்தியது போல், தமிழக சட்டசபை ஏதோ ஒரு காரணத்தால் உங்களையும் சிறை வைத்திருந்தால்...?

! எனக்கும் சிறை வாழ்க்கை என்ற புது அனுபவம் கிடைத்திருக்கும். 'நான் கருணை மனு கொடுக்கவில்லை; குற்றச்சாட்டையும் தண்டனையையும் ரத்து செய்தாலொழியச் சிறையை விட்டுத் தண்டனைக் காலம் முடியும் வரை வெளியேற விரும்பவில்லை' என்று கூறி, பின்விளைவுகளைப் பரிசோதித்துப் பார்க்க ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

*** ஆர். திருநீலகண்டன், வேப்பத்தூர். ***

? தமிழக முதல்வர் செயல்படுத்தும் பொன்னான திட்டங்களை எதிர்க்கட்சியினர் ஏன் எதிர்க்கிறார்கள்?

! எதிர்க்கட்சிகளின் முதல் கடமை, எதிர்ப்பது என்பது ஜனநாயகத்தின் பாலபாடம். திட்டத்தின் நோக்கம் பொன்னானதானாலும் திட்டத்தின் அம்சங்களை ஆழ்ந்து ஆராய்ந்து, பல்வேறு பிரிவுகளின் சாதக பாதகங்களை எடுத்துக் காட்ட வேண்டும்; பின் விளைவுகளை யோசித்துத் தேவையான முன் எச்சரிக்கைகளைச் செய்ய வேண்டும்; அமுலாக்கத்தில் ஏற்படக் கூடிய தவறுகளையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

ஆர். திருநீலகண்டன்,
24. வெள்ளாளர் தெரு,
வேப்பத்தூர்,
612 105.
தஞ்சை மா. வ.

வறட்சியும் புரட்சியும்

* ராமநாதபுரத்து அமைச்சரை நீங்கள் அம்மாவட்ட வறட்சி குறித்துப் பேட்டி கண்டிருக்கிறீர்கள். ஆனால் அவரோ, புரட்சித் தலைவரின் புகழுக்கு 'வறட்சி' ஏற்படா வண்ணம் பதில் தந்திருக்கிறார். அமைச்சர் பெருமகனாருக்கு எனது 'வறட்சி' — ஸாரி — 'புரட்சி' வாழ்த்துக்கள்..

அய்யநேரி, வெ. ஸ்ரீனிவாசன்

* வேதனை கலந்த வாக்கியங்களில் ஒரு சோகக் கவிதையின் நயத்தோடு எழுதப்பட்ட அணிக்கனேந்தல் கிராமத்து அவலம் மனத்தை வேதனைப்படுத்தியது. இந்தக் கட்டுரையைப் படித்த பிறகு, இந்தியா முன்னேற்றப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுவதை எப்படி நம்புவது?

விருத்தாசலம், கி. நாகராஜன்.

* 'பள்ளிக்கூடம் நானறியேன்; பாதையிலும் நடந்தறியேன்!' — அடேயப்பே, நெஞ்சை ஒரு கணம் உலுக்கி விட்டது! ஒவ்வொரு வரியிலும் சோகம் இழையோடிய உருக்கமான கட்டுரை!

குத்தாலம், எஸ். ராஜா.

* 'வரம் கேட்டு நிற்கும் கோயில்கள்' கட்டுரை படித்தேன். ஒன்று மட்டும் உறுதி: அந்த இறைவனே மனு போட்டாலும் கண்டு கொள்ளாத அரசு நமது தமிழக அரசு!

மதுரை, ஞானசேகரன்.

* 19.4.87 இதழில் வெளியான எல்லா ஜோக்குகளையும் விட, அமைச்சரின் பதில்களே எனக்கு அதிகச் சிரிப்பூட்டின! வாழ்க! அவரது நகைச்சுவை உணர்வு!

ஈரோடு — 1, இரா. செல்வமணியன்.

* அமைச்சர் டி. இராமசாமியின் பேட்டியைப் படித்த போது தமது மாவட்டத்தின் முன்னேற்றத்தை விடத் தம் பதவியைக் காத்துக் கொள்வதில்தான் குறியாக இருக்கிறார் என்பது புரிந்தது.

ஓசூர், எஸ். சூரியன்.

* 'படுதலம் சுகுமாரா' பலே ஆளய்யா!' என்ற தலைப்பில் எழுதப்பட்ட தலையங்கம் கண்டேன். அருமையிலும் அருமை!

இளையான்குடி, கே. கே. எம். ரபியுல்லாக்கான்.

* இவ்வார கார்ட்டூன், வி. ஆர். கிருஷ்ணய்யர், வழக்கறிஞர் வானமாமலை ஆகியோரின் கருத்தாய்வு— போதாக் குறைக்குத் தலையங்கம்... தலையங்கத்தில் மற்றுமொரு சிறப்பு என்னவெனில் அந்தப் பிரச்னைக்குரிய துணுக்கை எழுதி அனுப்பிய வாசகர் படுதலம் சுகுமாரனை மனதார வாழ்த்தியிருந்ததுதான் — ஆனந்த விகடன் விவகாரத்தை நன்றாகவே அலசிவிட்டீர்.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

* எம். ஜி. ஆரிடம் கேட்க வேண்டியதைப் போய் என். டி. வானமாமலையிடம் கேட்டால் எப்படி? விகடன் மீதுள்ள வடு நீங்க எம். ஜி. ஆருக்கு அல்லவா இரண்டாவது முறையாகப் பெருந்தன்மை ஏற்பட வேண்டும்!

திருமுதுகுன்றம், வி. செ. தமிழ்நேசன்.

* இவ்வாரச் சிறுகதைகள் தரமிக்கவையாய் இருந்தன. குறிப்பாக மும்தாஜ் யாசீனின் 'அம்மா எப்படிச் சம்மதித்தாளோ'ச் சொல்ல வேண்டும்.

நீடாமங்கலம், ஜி. ராஜேஷ்.

* முதல் பக்கத்திலேயே அரசியல் கலந்த ஜோக் கண்டு, படித்து ரசித்தோம்.

பெங்களூர் — 21, குழற்கோமான்.

* நாற்பதாண்டுக் கால சுதந்திர இந்தியாவில் ஓட்டு வாங்குவதற்குக் கூட வர இயலாத ஒரு நாதியற்ற ஊருக்கு வந்து சிறப்புக் கட்டுரையும் வெளியிட்ட கல்கியின் நினைவாக, எங்கள் ஊரின் பெயரை ''கல்கியூர்'' என்று மாற்றலாம் என்று உள்ளோம்.

அணிக்கனேந்தல், ஜி. சுப்ரமணியம்.

* ஒரு பெண் ஃபோனில் அரைமணி நேரம் பேசி விட்டு ஃபோனை வைத்தாள். அவள் தாயார் யாரிடம் பேசினாய்? என்று கேட்க, பெண்ணோ அது ராங் நம்பர் என்றாள். இதைப் போலிருக்கிறது நீர் வேலைக்காரன் படத்திற்கு விமர்சனம் எழுதியது. கதையே இல்லாத படத்துக்கு ஒரு பக்கம் என்றால் தப்பித் தவறிக் கதையிருந்துவிட்டால் கல்கி முழுதும் விமர்சனம்தானோ?!

விருத்தாசலம் — 1, தஞ்சாவூரான்.

* என்ன சார்! வர, வர, கல்கியில் அரசியல் நெடி அதிகமாகிறது. முழுக்க முழுக்க அரசியல் பத்திரிகையாகிவிடுமோ என்று பயமாய் இருக்கிறது!

சென்னை — 2, பி. உதயகுமார்.

* அட்டைப்படத்தில் உள்ள பெண் சற்றே புன்முறுவல் செய்தாலும் என் மனவேதனைகளை உள்ளே கட்டுரையில் படியுங்கள் என்று சொல்லாமல் சொல்கிறார் போலும்!

பே. தாதம்பட்டி, பி. கோவிந்தசாமி.

* ''விகடன் ஆசிரியர் கைது பற்றி எழுத்தாளர் சங்கங்கள் கண்டனத் தீர்மானம் கூட வெளியிடவில்லை'' என்று 'தராசு' எழுதியிருப்பது முற்றிலும் தவறு. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலர் இரா. கதிரேசனும் தலைவர் கே. முத்தையாவும் கண்டனத் தீர்மானம் போட்டுள்ளனர்.

தேனி, ஏ. வி. செம்மேனிராஜ்.

* 9.4.87 இல் நடைபெற்ற பாரதத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் செயற் குழுக் கூட்டத்தில் விகடன் ஆசிரியர் கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சென்னை — 83, பெ. சு. மணி,
பொதுச் செயலாளர்.

11 வயதினிலே உங்கள் மகன், பள்ளிக்கூட ஹோம் ஒர்க், கிரிக்கெட் மேட்ச், சண்டைப்படம் இவற்றிலேதான் ஆர்வமாயிருப்பான். 'பொக்கிஷம் போன்ற 32 பற்களைப்' பற்றி அவன் எங்கே சிந்திக்கப் போகிறான்?



ஆகவே, போர்ஹென்ஸ் பல்பராமரிப்பு அவனைக் கவனிப்பதில் மிகவும் அக்கறை காட்டுகிறது.

அன்றாடம் பள்ளிக்குச் செல்லும்போது உங்கள் மகன், 'என் ஈறுகளும் பற்களும் உறுதியாக உருவாகின்றன' என்று எண்ணிச் செல்லமாட்டான். அவனுடைய ஆர்வமெல்லாம் விளையாட்டிலும் டைனட் சினிமாவிலும்தான் இருக்கும். டூத்பேஸ்ட் ருசியா இருந்தா போதும் அதோட அவன் மகிழ்ச்சியாயிடுவான்.

ஆனால் அவனுடைய ஈறுகளுக்கும் பற்களுக்கும் வலுவான அஸ்திவாரத்திற்கான உறுதிக்கு ஆபத்து நிச்சயம். அவனுடைய 32 பற்களும் என்றும் பத்திரமா இருந்து அவன் ஸூப்பர் ஸ்டைட்டரா வளரணும்னு நீங்க விரும்புறீங்க!

விஷ: அவனுடைய டூத்பேஸ்ட் பற்களை மட்டும் சுத்தப்படுத்துகிறதா அல்லது ஈறுகளையும் கெட்டிப் படுத்துகிறதா? மூச்சிலே புத்துணர்ச்சியை மட்டும் அளிக்கிறதா அல்லது ஈறுகளையும் உறுதிப்படுத்துகிறதா?

போர்ஹென்ஸ் தன் பல்வகைப் பல் பராமரிப்புகளால் இத்தகைய விஷயங்களைக் கவனிப்பதில் அக்கறை காட்டுகிறது.

உதாரணமாக, போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் டூத் பவுடர் ஒப்பற்ற அஸ்ட்ரிஞ்ஜெண்ட் கொண்டவையாகும். இது பற்களுக்கு உறுதியான அஸ்திவாரம் அளிப்பதற்கு ஈறுகளை வலுப்படுத்துகிறது. ஆகவே அவை நீடித்த ஆயுளைப் பெறுகின்றன. ஈறுகள், பற்களுக்கு பாதுகாப்புப் பிடிமானம் அளித்து துர்நாற்றம் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் உருவாக இடமளிப்பதில்லை. அதாவது சுவாசத்தில் துர்நாற்றத்தை தடுக்கிறது.

இதுமட்டுமா, ஸூப்பர் ஸ்டைட்டர் போர்ஹென்ஸ் ஃப்ளோரைட், அமிலத் தாக்குதலைத் தடுத்திட பல் எனாமலை ஆற்றலுடன் கெட்டிப்படுத்துகிறது.

போர்ஹென்ஸின் டூத்பிரஷ் கூட இரட்டைச் செயல் கொண்டதாகும். பற்களுக்கு பளிச்சிடும் வெண்மையூட்டி ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கிறது.

நாங்கள் சொல்வதை நீங்கள் அப்படியே ஏற்க வேண்டுமென்பதில்லை. போர்ஹென்ஸை உபயோகித்துப் பார்த்தபின்பே அதன் உண்மை மதிப்பை அறியமுடியும் என்பது உங்களுக்குத் தெரியும்.

போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட்

போர்ஹென்ஸ் ஃப்ளோரைட் டூத்பேஸ்ட்,

போர்ஹென்ஸ்

பராமரிப்பு

32 என்றும் பத்திரம்

போர்ஹென்ஸ் டூத்பவுடர்,

போர்ஹென்ஸ் டூத்பிரஷ்.

GM-101/86 Tam

4

அருண் கடிகாரத்தைப் பார்த்தான். மணி 11.40. காலையில் வீட்டில் அவனுக்குப் பிடிக்காத டிபன்! ரவா பொங்கல். வெறும் வயிற்றோடு ஆபீசுக்கு வந்து விட்டதால் இப்போது பசி வயிற்றில் விஷமம் செய்தது.

லஞ்ச் நேரத்துக்கு இன்னும் ஒரு மணி இருபது நிமிடம் இருந்தது. அதுவரையில் எப்படிப் பொறுத்துக் கொள்வது?

'வேலையில் மூழ்கு. பசி, தாகம் எதுவுமே தெரியாது' என்று எப்போதோ படித்த அறிவுக் கட்டுரை வாசகம் நினைவுக்கு வந்தது. 'தூ! வேலையா இது!' என்று வாய் விட்டுச் சொல்லி, தன் வெறுப்பை மேலும் விளம்பரப்படுத்தி, மேஜை மீதிருந்த நாலைந்து காகிதங்களை எடுத்து அவை என்னவென்று கூடப் பார்க்காமல் கசக்கிப் பந்துகளாக்கி, குப்பைக் கூடையில் விசிறியெறிந்தான்.

தனக்கு விற்பனை, கணக்கு அல்லது விநியோகப் பிரிவில் வேலை போடுவார்கள் என்றுதான் நினைத்திருந்தான் அருண். அந்த நினைப்பில், ஆறு லாரி லோடு அளவுக்கு, தரமான ஆற்று மணலை அள்ளிப் போட்டார் சராகா மானேஜர்.

அந்த முதல் நாள்....

"இதுதான் உங்க ரூம் மிஸ்டர் அருண்!" என்று மானேஜர் ஒரு தனி அறையைச் சுட்டிக் காட்டியபோது ஏற்பட்ட சந்தோஷம், அறைக்குள் எட்டிப் பார்த்ததும் தரை முதல் ஸீலிங் வரையில் அடுக்கப்பட்டிருந்த காகிதக் குவியலைக் கண்டதும் கரைந்தே போயிற்று.

"இதுதான் உங்க ஸீட். நீங்கள் ஃபைலிங் எக்ஸிக்யூட்டிவ். இந்தக் காகிதங்களெல்லாம் லெட்டர்ஸ், காப்பிகள் ....எல்லாவற்றையும் சப்ஜெக்ட்படி பிரித்து, ஒழுங்காக ஃபைல் செய்து வைக்க வேண்டியதுதான் உங்கள் வேலை. தட்ஸ் ஆல்!"

'தன் குவாலிபிகேஷன் எதுவுமே தேவைப்படாத ஒரு வறட்டு வேலையில் வந்து சிக்கிக் கொண்டதற்குத் தன் புத்தியை எதைக் கொண்டு அடிப்பது?' என்று ஒருகணம் யோசித்துவிட்டு, அருண் கேட்டான்:

"சார், ஒரு சந்தேகம்...."

"இன்னும் ஸீட்டிலே உட்காரக் கூட இல்லை. அதற்குள்ளே சந்தேகமா?"

"ஆமாம். இந்தக் கம்பெனி ஆரம்பித்ததிலிருந்து யாரும் ஃபைலிங் வேலையே பார்க்கல்லியா?"

"பார்க்காமலென்ன? செங்கல்ராவ் என்று ஒருத்தர்தான் நீ வர்றதுக்கு முன்னாலே இருந்தார். அவர் ரிடையர் ஆகிவிட்டதாலே கொஞ்சம் போலப் பேப்பர்கள் சேர்ந்து போயிட்டுது...."

"அவர் எப்ப சார் ரிடையர் ஆனார்?"

"ஜஸ்ட் பதினெட்டு மாசம் முன்னாலேதான்!"

அருண் பற்களை நறநறத்தான். ஆனால் கூடவே ஓர் ஆறுதலும் பிறந்தது. ஒன்றரை வருடக் குப்பை லேசில் தீராது. தவிர, அன்றாடம் வேறு புதிது புதிதாகப் பேப்பர்கள்



சேரும். குறைந்தபட்சம் இரண்டு வருஷங்களுக்காவது இந்த வேலை நிலைக்குமே!

மானேஜர் வெளியேறியதும் சில பேப்பர்களையாவது எடுத்து, தேதி வாரியாக அடுக்கி வைக்கலாமென்று முனைந்தான். நாலைந்து கற்றைகளை உருவியதுமே, சினிமாக் கனவு காட்சிகளில் வருவது போலப் புகைப்படலமாகத் தூசி கிளம்பி, மூக்கில் நுழைந்து, ராட்சசத் தும்மல்களை வெளியேற்றவே, சட்டென்று அறையைவிட்டு வெளியே வந்தான்.

டாய்லெட் பக்கம் போய் நின்று ஒய்வாகச் சிகரெட் பிடிக்க ஆரம்பித்தான் அருண். நாலு இழுப்பு இழுத்ததும் அந்தப் பக்கமாக வந்த ஓர் அட்டெண்டர், "இன்று சார்! வேலையை வுட்டுட்டீங்களா?" என்று அபசகுனமாக விசாரித்தான்.

"வேலையை விடறதாவது! இன்னிக்குத் தானேய்யா சேர்ந்திருக்கேன்...."

"தைரியமா ஆபீசுக்குள்ளே தம் அடிக்கிறீங்களேன்னு கேட்டேன்...."

"ஏன்? சிகரெட் பிடிக்கக் கூடாதா?

"எம்.டி.க்குத் தெரிஞ்சதுன்னு சீட்டுக் கிழிஞ்சிடும் சார்! ஆபீஸ்லே இதெல்லாம் வச்சுக்கக் கூடாது!"



முகுந்தன்

"வேறே என்னென்ன செய்யக் கூடாது, சொல்லு!"

"நோட்டீஸ் போர்ட்லே விலா வாரியா போட்டிருக்கு. போய்ப் படிச்சுக்க சார்!"

சிகரெட்டை வாயில் பொருத்தியபடியே ஆபீஸ் முழுவதும் வலம் வந்து, அப்படியே அந்த எம்.டி. பாணியின் அறையிலும் போய்த் தலையைக் காட்டி, முதல் நாளன்றே இந்த மகா மகா மட்டமான வேலைக்குத் தலை முழுகினாலென்ன என்ற வேகம் பிறந்தது அருணுக்கு.

ஆனாலும் தவிர்த்தான்.

சத்யாவுக்காக.

அவனுக்கு உதவுவதாக வாக்கு கொடுத்திருக்கிறோம். அதற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் எதுவும் செய்யக் கூடாது. அன்றைக்குச் சத்யா இந்தச் 'சராகா' பற்றிக் கூட ஏதோ சொல்ல வந்தான். அது என்னவென்பதைத் தெரிந்து கொள்ளாமலே சத்யாவின் வீட்டிலிருந்து அவசரமாக வெளியேற வேண்டியதாகிவிட்டது.... சத்யா மேற்கொண்டிருக்கிற மகத்தான பணியை முன்னிட்டாவது இந்த வேலையில் ஒட்டிக் கொண்டு இருந்தேயாக வேண்டும்.....

சிகரெட்டைத் தூக்கியெறிந்துவிட்டு, நோட்டீஸ் போர்டைப் போய்ப் பார்த்தான். அதில்:

அலுவலர்கள் கவனத்திற்கு

1. அரசியல், சினிமா, நாடகம், ரேடியோ, டீ.வி., பத்திரிகைச் செய்தி – இவை பற்றி ஆபீசுக்குள் விமரிசனம் செய்யக் கூடாது.

2. வெற்றிலை பாக்கு, பொடி, சிகரெட், சுருட்டு, பீடி, பைப் – உபயோகிக்கக் கூடாது.

3. ஆபீஸ் ஸ்டேஷனரிப் பொருட்கள் ஆபீஸ் உபயோகத்துக்கே. சொந்த வேலைக்குப் பயன்படுத்துவதற்கோ வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கோ அல்ல.

4. பர்ஸனல் போன் கால்கள் கூடிய வரையில் தவிர்க்கப்பட வேண்டும்.

5. குண்டூசியை வைத்துப் பல் குத்துவதும், ஜெம்கிளிப்பினால் காது குடைவதும் முறையல்ல.

6. தாமதமாக வருவது, லீவ், கடன் ஆகியவை உட்பட, ஊழியர்கள் தமது சொந்த விஷயங்களில் பொய் சொல்லக் கூடாது. இவ்விதியை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். (பிஸினஸ் விஷயமாகப் பொய் பேசுவது முறையானதே.)

முக்கிய குறிப்பு: இந்த அறிவிப்பு களைக் கேலி பேசக் கூடாது.

அருண் தன் சட்டைப்பையிலிருந்து பேனாவை எடுத்தான். அக்கம்பக்கம் யாருமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர், அந்த அறிவிப்பின் கடைசியில் இரண்டு வரிகளை எழுதினான்.



யானை விலை...!

"நம் நாட்டு மன்னர், விலைவாசியைக் குறைப்பதற்கு ஒரு அபாரமான யுக்தி பண்ணிட்டார் பார்த்தாயா....?"

"எப்படி?"

"எல்லாப் பொருளும் யானை விலை, குதிரை விலை என்று ஏறிட்டதனாலே... ஒரு உத்தரவு போட்டு, யானை விலையையும், குதிரை விலையையும் படு பாதாளத்துக்கு இறக்கிவிட்டுட்டார்....!"

— பெ. கலாசாமி

அதிமுக்கிய குறிப்பு: ஊழியர்கள் மூச்சு விட அனுமதி உண்டு. பெருமூச்சு விட வேண்டுமானால் எம்.டி.யிடம் முன் அனுமதி பெற வேண்டும்.

நோட்டீஸ் போர்டைப் பார்வையிட்டு விட்டுத் திரும்புகையில் அந்தப் பெரிய ஹால் வழியாக வந்தான் அருண். எல்லா ஆபீஸ்களையும் போலவே இங்கும் கால்வாசிப் பேர் மும்முரமாக வேலை செய்து கொண்டும், முக்கால்வாசிப் பேர் வேலை செய்வது போலப் 'பாவ்லா' காட்டிக் கொண்டும் இருந்தார்கள். பார்த்துக் கொண்டே வந்தபோது ஒரே ஒரு முகம் மட்டும் பரிச்சயமானதாகத் தென்பட்டது.

டைப்ரைட்டர் முன்பு அமர்ந்திருந்தாள் அந்தப் பெண். நல்ல எலுமிச்சை நிறம். அவள் உட்கார்ந்திருந்த தோரணையும், முகத்தில் காட்டிய இறுக்கமும், 'இவள் கர்வக்காரி; யாரையும் லேசில் மதிக்கமாட்டாள்' என்று விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. இருந்தபோதிலும் அவளைக்கண்டவுடன் அருணின் மனசில் ஒரு குறுகுறுப்பு ஏற்படவே செய்தது.

கூடவே அந்தக் கேள்வியும் எழுந்தது. இவளை எங்கோ பார்த்திருக்கிறோமே! எங்கே? எங்கே?

வீட்டுக்குத் திரும்பி, காகிதங்களைப் பிரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த நேரத்திலும் அந்தக் கேள்வியே மனத்தில் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தது. ஒரு சிகரெட் பிடித்தால் ஆட்டோ ரிக்ஷா மீட்டர் போலச் சிந்தனை வேக வேகமாக ஓடும் என்றது அனுபவ அறிவு. அதற்கு வழியில்லாததால், ஒரு பாக்குப் பொட்டலத்தைப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டான்.

அறைக்கு வெளியே அட்டெண்டர்கள் யாரையோ காரசாரமாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். "அவன் சில்லறை புத்திக்காரன்னு நான்தான் அப்பவே சொன்னேனே!" என்ற வரி காதில் விழவும், நிமிர்ந்து உட்கார்ந்தான் அருண்.

சில்லறை!

வலசரவாக்கம் சென்று கொண்டிருக்கும் போது, அவனைச் சந்தித்துப் பஸ் சார்ஜுக்குச் சில்லறை கேட்ட அதே பெண்தான் இவள். அட! அவள் இங்கேயா வேலை பார்க்கிறான்!

ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் அவள் தன்னை அடையாளம் கண்டு கொள்கிறாளா என்று பார்க்கும் ஆவலும் பிறந்தது.

லஞ்ச் இடைவேளைக்குப் பிறகு, சொல்லி வைத்தாற் போல, அந்தப் பெண்ணே அவனைத் தேடிக் கொண்டு வந்தாள். "ஹலோ!" சொன்னாள். போனால் போகிறதென்று கொஞ்சம் புன்னகை காட்டினாள். "நீங்கள்தான் புது ஃபைலிங் எக்ஸிக்யூடிவ்வா? கிளாட் டு மீட் யூ!" என்றாள்.

"ஆம் அருண். வாட்ஸ் யுவர் குட் நேம் ப்ளீஸ்!"

"லேகா."

"சந்திரலேகாவா, சித்திரலேகாவா?"

"வெறும் லேகா!"

"வெறும் லேகா என்ற பெயர் ரொம்பப் புதுமையாக இருக்கிறது...."

"நோ நோ.... என் முழுப் பெயரே லேகாதான்!"

"நீங்கள் ஸ்டெனோவா?"

"வேலை என்னவோ அதுதான். டெஸிக்னேஷன்: கரஸ்பாண்டென்ஸ் எக்ஸிக்யூடிவ்!"

"நானே கேட்க வேண்டுமென்று நினைத்தேன் — அதென்ன எல்லாருக்கும் 'எக்ஸிக்யூடிவ்' என்று ஒரு வால் சேர்த்திருக்கிறார்கள்?"


"நம்ம எம்.டி. மிஸ்டர் பாணி இருக்கிறாரே — அவரது பாணியே அலாதி! இங்கே அட்டெண்டருக்குக் கூட அட்டெண்டிங் எக்ஸிக்யூடிவ் என்று பெயர் கொடுத்திருக்கிறார்.... குப்பை கூட்டுகிறவன் ஸ்வீப்பிங் எக்ஸிக்யூடிவ்!"

"அது எப்படியோ போகட்டும்... என்ன விஷயம், சொல்லுங்கள். அந்த ஒரு ரூபாயைத் திருப்பிக் கொடுக்க வந்தீர்களா?"

"எந்த ஒரு ரூபாய்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"போன வாரம் ஒரு நாள் சாயந்தரம், ஹைரோடிலே போய்க்கொண்டிருந்த என்னிடம் வந்து பஸ்ஸுக்குச் சில்லறை கேட்டீர்களே, மறந்துவிட்டீர்களா?"

புருவங்களை நெரித்து யோசித்த லேகாவின் முகம் திடீரென இருண்டு, நொடிப் பொழுதில் பழைய நிலைக்கு வந்தது.



BIRTH — A happy Occasion!

Start planning for a prosperous future — with KCUB. At KCUB — we ensure your savings yield rich returns!

We offer;

- Monthly savings.
- Cash Certificates.
- Vamana Viswarupa Deposit.
- Fixed Deposit.

KCUB

THE KUMBAKONAM CITY UNION BANK LTD.,

Registered Office: Kumbakonam-612 001

KCUB — The Bank that's committed to growth — your growth!

MCS/KCUB/222

"ஓ! நீங்கள்தானா அது! உங்களை இங்கே சந்திப்பேன் என்று நினைக்கவே இல்லை..."

"நானும்தான்!"

"வந்த விஷயத்தை மறந்துவிட்டேனே! ஆறு மாசம் முன்னாலே குஜராத் வல்லப் கம்பெனிக்கு ஒரு லெட்டர் எழுதினாராம் நம்ம மானேஜர். அதைக் கொண்டு வா என்கிறார். தேடலாமென்று...."

"இந்தப் பேப்பர் காட்டிலா?" இம்பாஸிபிள்!

"நான் ஒரு டெக்னிக் வைத்திருக்கிறேன். கண்ணை மூடிக் கொண்டு ஒரு காகிதக் கட்டை எடுப்பேன். நான் தேடுகிற பேப்பர் அதில் இருந்தால் சரி. இல்லை என்றால், 'சார்! அந்தக் கம்பெனிக்கே லெட்டர் எழுதி நம்ம லெட்டரின் காபியை அனுப்பச் சொல்லலாம்!' என்று சொல்லி, ரெடியாக டைப் பண்ணி வைத்திருக்கிற லெட்டரையும் நீட்டுவேன்.... 'ஸ்மார்ட் ஒர்க்' என்றபடி, கையெழுத்துப் போட்டு விடுவார் மானேஜர்...!"

அவளது சாமர்த்தியத்தைப் பாராட்டத் தோன்றிய அதே நேரத்தில், 'இவளிடம் எச்சரிக்கையாகப் பழக வேண்டும்' என்றும் ஏனோ தோன்றியது அருணுக்கு.

தொடர்ந்த சில நாட்களில் தன்னைப் பற்றிய சில தகவல்களை லேகாவே அருணிடம் சொன்னாள்.

அப்பா — அம்மா ஊரில் இருக்கிறார்களாம். இரண்டு தம்பிகள் படிக்கிறார்களாம். வானம் பார்த்த சொற்ப பூமி. அதுவும் கடனில் மூழ்கும் நிலை. இவள் இங்கு லேடீஸ் ஹாஸ்டலில் தங்கி வேலை பார்த்து ஊருக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறாள். தம்பிகள் படித்துச் சம்பாதிக்க ஆரம்பிக்கும் வரையில் இவள் சுமைதாங்கியாக இருந்தாக வேண்டிய நிர்ப்பந்தம். கல்யாணம் பற்றியெல்லாம் அப்புறம்தான் யோசிக்க வேண்டும்....

லேகா சொன்னது அருணின் மனத்தில், அளவுக்கு மீறிய பாதிப்பு ஏற்படுத்தவே, புதுக் கவிதை ஒன்று குதித்து வந்தது பேனாவிலிருந்து:

பூஜையறைக் குத்துவிளக்கு
மேஜையடியில் உழைப்புச் சிந்தி
உருக்குலையும் கல்யாணக் கனவுகளைக்
கருக் கொண்டு மனமொடியும்
தூண்டி விட வேண்டிய துஷ்யந்தர்கள்
சீர் வரிசை வேலுக்கும் வரதட்சணை
வாளுக்கும்
கூர் பிடித்துக் காத்திருப்பார்கள்.

கவிதை பிறந்த அந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நண்பர்களுடன் சினிமா பார்த்துவிட்டு ஜாலியாக அரட்டை அடித்தபடியே வந்து கொண்டிருந்த அருண், எதிர்பாராத அதிர்ச்சிக்கு ஆளானான்.

அவனைக் கடந்து வேகமாகச் சென்றது ஒரு புத்தம் புதிய மாருதி கார். அதை டிரைவ் செய்தவள் லேகா!

(தொடரும்)


ஓர் வேண்டுகோள்

சிவானந்த குருகுலம் காட்டாங்கொளத்தூரில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளின் நலம் நாடும் நன்கொடையாளர்கள் மனமுவந்து வரும் கல்வி ஆண்டில் அவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களோ, சீருடைகளாகவோ அல்லது பணமாகவோ நன்கொடையாக அளிக்க விரும்பும் அன்பர்கள் "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்" என்ற பெயருக்கு, காசோலையாகவோ, மணியார்டர் மூலமாகவோ அளித்தால் நாங்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நிர்வாகி, சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை— 600 059.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம்:

பழைய எண்.	மாற்றப்பட்ட எண்:
1. 48248	401078
2. 433384	402354


மேற்குறிப்பிட்ட புதிய எண்ணில் தொடர்பு கொள்ளவும்.



ஸன்ஃப்ளவர் இகானமி பேக். நீங்கள் இழப்பதோ சில சில்லறை காசுகளும் சில்லறை வனஸ்பதியும். பெறுவதோ அதி தூய்மை.

HTA 1033

உங்கள் குடும்பத்திற்கு, முற்றிலும் பாதுகாப்பானதையும், தூய்மையானதையும் கொடுங்கள்: ஸன்ஃப்ளவர் ப்ராண்ட் வனஸ்பதி. விட்டமின் A மற்றும் D செறிந்த, ஊட்டமிக்க, ஆரோக்கியமான வனஸ்பதி உங்களுக்குக் கிடைக்க, ஸன்ஃப்ளவர் பாதுகாப்பு கவசத்தால் ஸீல் செய்யப்பட்டு, பேக் செய்யப்பட்டு வருகிறது.



IS:10633
VANASPATI

கிலோ மற்றும் ½ கிலோ
பேக்குகளில் கிடைக்கிறது.

ஸன்ஃப்ளவர்

ப்ராண்ட் வனஸ்பதி

இதை விடச் சிறந்தது தூய நெய் மட்டுமே.

WIPRO LIMITED
Closer to the consumer

சமத்துவம்

நளினியின் கல்யாண ஏற்பாடுகள் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தன. சமையலறையில் நளினி ராகவன் என்று பெயர் எழுதப்பட்ட முறுக்குகள் எண்ணெயில் கொதித்துக் கொண்டிருந்தன. ஒரு மாமி, 'அதிரசத்திற்கு' மாவு பிசைந்து கொண்டிருந்தாள்.

நளினியைச் சுற்றி அவள் வயதையொத்த நான்கைந்து பெண்கள் கிண்டலும் கேலியுமாய்ப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒருத்தி, "நான்தான் அடிக்கடி சொல்வேனேடி, நம்ம நளினியோட அழகுக்கும் குணத்துக்கும் ஒரு ராஜகுமாரன்தான் கிடைப்பான்னு" என்றாள்.

"ஆமாமாம். நளினியோட 'வுட்பீ' அழகுலயும் ராஜாதான். அந்தஸ்துலயும் ராஜாதான்" — இன்னொருத்தி ஆமோதித்தாள்.

'மொத்தத்துல நளினி அதிர்ஷ்டசாலிடி. பாங்கல சாதாரண கிளார்க்கா இருந்தாலே பத்தாயிரம் வரதட்சணை, பதினைஞ்சு பவுன் நகை, இத்யாதின்னு மாப்பிள்ளைக்கு ரேட் ஃபிக்ஸ் பண்ணிடறாங்க. ஆனா நளினியோட 'வுட்பீ' பாங்குல ஆபீஸராயிருந்தும், 'வரதட்சணை வேண்டாம். நகை, சீர் வரிசை எல்லாம் உங்க சக்திக்கேற்றபடி செய்யுங்கன்னு, சொன்னது பெரிய ஆச்சரியமடி.' இன்னொருத்தி ஒரே மூச்சில் பொரிந்து தள்ளினாள்.

நளினியின் அப்பா முத்துவிற்கும், அந்தப் பெண் யதார்த்தமாகப் பேசியது மிகவும் பிடித்திருந்தது.

பாவம் முத்து! முதலிரண்டு பெண்களுக்கும் மனைவியின் நகைகளையும் வெள்ளிப் பாத்திரங்களையும் பங்கிட்டு விட்டார். இருந்த ஒரே வீட்டை விற்றுக் கல்யாணச் செலவும் செய்து விட்டார்.

மூன்றாவது பெண்ணிற்குத் திருமணம் என்று வந்தபோது முத்து ரிடையர் ஆகும் சமயம் நெருங்கி விட்டது. செய்வதறியாமல் அவர் தவித்துக் கொண்டிருந்த போதுதான் நண்பர் மூலமாக அந்தச் சம்பந்தம் கிடைத்தது.

முதலில் முத்துவிற்கும் ஆச்சரியமாகத்தானிருந்தது. பையனைப் பற்றிச் சந்தேகப்பட்டு, அவன் வேலை செய்யும் பாங்கில் மெள்ள விசாரித்துப் பார்த்தார். பையனுக்கு எந்தவிதக் கெட்டப்பழக்கமுமில்லை, தங்கமான குணம் என்றே எல்லோரும் சொன்னார்கள்.

எல்லாம் கடவுள் அருள் என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டார்.



"என்னங்க, இங்கே கொஞ்சம் வாங்களேன்" முத்துவின் மனைவி ஞானம் பதற்றத்துடன் குரல் கொடுத்தாள்.

"என்ன ஞானம் என்ன விஷயம்?"

"இங்கே பாருங்க. ஷோபாவும்,

மஞ்சுவும் வந்திருக்காங்க.''

''அட, இதுக்கா இவ்வளவு பதற்றப் பட்டே? அவங்கதான் இன்னிக்கு வர்றதா முந்தியே கடிதாசி போட்டிருந்தாங்களே!'' நிதானமாகக் கூறினார் முத்து.

ஞானம் தலையிலடித்துக் கொண்டாள்.

''மாப்பிள்ளைங்க வரலையே அதைக் கவனிச்சீங்களா?''

'அப்புறம் வருவார்களோ என்னவோ. இவள் ஏன் இப்படிப் புலம்புகிறாள்?' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்ட முத்து. ''மாப்பிள்ளைங்க ஏன் வரலை?'' என்று ஒரு வழியாகக் கேட்டார்.

அதற்குள் பெரிய மகள் ஷோபா, ''வந்துப்பா... நம்ம நளினி நிச்சயதார்த்தத்துக்கு நாங்க வந்திருந்தோமில்லையா?'' என்றாள்.

''ஆமாம்.

''நளினி வீட்டுக்காரர் கையில் மோதிரமும், கழுத்துல கெட்டியா, ஐந்து பவுனுக்குச் சங்கிலியும் போட்டிருந்தார் இல்லியா?''

''அதுக்கென்ன இப்போ?''

''அந்த மாப்பிள்ளை அவ்வளவு வசதியாயிருக்கிறப்ப உங்க முதல் மாப்பிள்ளை மட்டும் கழுத்துல ஒண்ணுமில்லாம இருக்கறது, அசிங்கமாயிருக்குப்பா. அதனால் அவருக்கு மூன்று பவுனுலயாவது ஒருமைனர் செயின் பண்ணிடுங்கப்பா. இல்லேன்னு அவர் கல்யாணத்துக்கே வரலேன்னுட்டார் அப்பா'' கண்ணைக் கசக்கினாள் ஷோபா.

''உங்க மூணாவது மாப்பிள்ளை கார்ல வந்திறங்குவாரு. உங்க இரண்டாவது மாப்பிள்ளை கிட்ட சைக்கிள்தானிருக்கு.அது உங்களுக்கே கௌரவமாயிருக்குமாப்பா? அதனால அவருக்கு ஒரு மொபெட்டாவது வாங்கிக் குடுத்துடுங்கப்பா,'' என்று தன் பங்குக்கு மஞ்சு கூறி முடித்தாள்.

முத்துவுக்கு லேசாக மயக்கம் வந்தது....

— லதா ராஜாராம்

பொன்மொழிப் போட்டி-5 முடிவு:

சரியான விடை:

பிளேட்டோ: இளையவர் மூத்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் இளைஞர்கள் கற்பதற்கு ஆர்வமாகவும் மூத்தவர் கற்பிப்பதற்கு ஆர்வமாகவும் இருக்கும்போது அறிவு வெளிப்படுகிறது.

மார்க்டுவெய்ன்: உங்கள் இலட்சியங்களை இளக்காரம் செய்வோரை ஒதுக்குங்கள். அவர்கள் அற்ப மனிதர்கள். பெரிய மனிதர்கள், நீங்களும் பெரிய மனிதனாகலாம் என்ற எண்ணத்தையே உங்களிடம் தோற்றுவிப்பார்கள்.

சத்யசாயி பாபா: நீ சந்தோஷமாக இருந்தால் உலகமே சந்தோஷமாக இருப்பதாக எண்ணுகிறாய். நீ அமைதியற்று இருந்தால் உலகமே உபயோகமற்றதாய்த் தோன்றுகிறது. எனவே அன்பு, அமைதி ஆகிய குணங்களை இளைஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்: பிரபஞ்சத்தின் இசை நமது இதயத்தில் எதிரொலித்தால் அதுதான் கவிதை.

கீழ்க்கண்ட பதினேழு வாசகர்கள் சரியான விடையை எழுதியுள்ளார்கள். ரூ. 200/— பரிசைப் பிரித்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 12/— வழங்குகிறோம்.

1. எஸ். பத்மநாபன், சென்னை — 28. 2. என். டி. பூபதி, கட்டிமாங்கோடு, குமரி மாவட்டம்; 3. வி. மாலதி, கோயமுத்தூர் — 18; 4. ஏ. சுப்பிரமணியன், கோயமுத்தூர் — 22; 5. ஆர். கோபாலகிருஷ்ணன், சென்னை — 73; 6. ப. ரேவதி, தூத்துக்குடி — 2; 7. மா. இராசு, பரமக்குடி; 8. எஸ். சிவசுப்பிரமணியன், நெல்லிக்குப்பம்; 9. வி. ராம்ஜி, சென்னை — 20; 10. ஜி. ராஜேஸ்வரி, சென்னை — 88; 11. டி. அம்மையப்பா நாயகம், கோயமுத்தூர் — 30; 12. கே. பி. கமலாம்பாள், பவானி; 13. சங்கரி, சென்னை — 28; 14. கே. சவுந்தரவல்லி, சென்னை — 21; 15. கே. வெங்கடேசன், திருநெல்வேலி; 16. டி. டேவிட் ஜான் பிரிட்டோ, திருத்துறைப்பூண்டி; 17. எஸ். சரோஜா, சென்னை — 4.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 36

"ஞாபகம் இருக்கிறதா?"

லதா மண்டபத்தின் தோட்ட வாசலண்டை வந்து நின்ற நந்தினி மூன்று தடவை கையைத் தட்டினாள்.

அப்போது அவள் முகத்தில் படிந்திருந்தது பயத்தின் ரேகையா அல்லது மரங்களின் இருண்ட நிழலா என்று சொல்ல முடியாது.

தோட்டத்தில் சிறிது தூரம் வரையில் பெரிய பெரிய அடிமரங்களும் அவற்றைச் சுற்றிக் கொண்டிருந்த கொடிகளும் தெரிந்தன. அப்பால் ஒரே இருட் பிழம்பாயிருந்தது.

இருளைக் கீறிக் கொண்டு, கொடிகளை விலக்கிக் கொண்டு, மரம் ஒன்றின் பின்னாலிருந்து மந்திரவாதி வெளியே வந்தான்.

நந்தினி தன்னுடைய புஷ்ப மஞ்சத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவள் அழகிய முகத்தில் இப்போது அமைதி குடி கொண்டிருந்தது.

மந்திரவாதி லதா மண்டபத்துக்குள் நுழைந்தான். தங்க விளக்கின் சுடர் ஒளி அவன் முகத்தின் மீது விழுந்தது.

ஏற்கெனவே பார்த்த முகமாயிருக்கிறதே! யார் இவன்? ஆம்; திருப்புறம்பயம் பள்ளிப் படையினருகில் நள்ளிரவில் கூடியிருந்த மனிதர்களில் ஒருவன் இவன். பையிலிருந்து பொன் நாணயங்களைக் கல கலவென்று கொட்டியவன். "ஆழ்வார்க்கடியானைக் கண்ட இடத்தில் உடனே கொன்று விடுங்கள்!" என்று மற்றவர்களுக்குக் கூறிய ரவிதாஸன் இவன்.

வரும்போதே அவன் முகத்தில் கோபம் கொதித்தது. மலர்ப் படுக்கையில் சாந்த வடிவமாய் அமர்ந்திருந்த நந்தினியைக் கண்டதும் அவனுடைய பூனைக் கண்கள் வெறிக் கனல் வீசின.

மஞ்சத்தின் எதிரில் கிடந்த பலகையில் உட்கார்ந்து கொண்டு, நந்தினியை உற்றுப் பார்த்துக் கொண்டு, "ஹூம்! ஹ்ரீம் ஹ்ராம்! பகவதி! சக்தி! சண்டிகேசுவரி....!" என்று சில மந்திரங்களைச் சொன்னான்.

"போதும்! நிறுத்து! தாதிப் பெண்

அமரர் கல்கி

வாசற்படியில் உட்கார்ந்தபடி தூங்கித் தொலைத்துவிட்டாள் போலிருக்கிறது! சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்! அவர் கோட்டைக்குள் வந்துவிட்டார்!' என்றாள் நந்தினி.

''அடி பாதகி!'' என்று ரவிதாஸன் கூறியது, நாகப் பாம்பு சீறுவது போலத் தொனித்தது.

''யாரைச் சொன்னாய்?'' என்று நந்தினி சாந்தமாகவே கேட்டாள்.


''நன்றி கெட்ட நந்தினியைத்தான்! பழுவூர் இளைய ராணியைத்தான்! உன்னைத்தான்!'' என்று ரவிதாஸன் தன் ஒரு கை விரலால் அவளைச் சுட்டிக் காட்டினான்.

நந்தினி மௌனமாயிருந்தாள்.

''பெண்ணே! நினைவில் வைத்திருக்கவேண்டியசிலசம்பவங்களை நீ மறந்து விட்டாய் போலிருக்கிறது. அவற்றை உனக்கு ஞாபகப் படுத்துகிறேன்'' என்றான் ரவிதாஸன்.

''பழைய கதை இப்போது எதற்கு?'' என்றான் நந்தினி.

''இப்போது எதற்கு என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், முதலில் ஞாபகப்படுத்திவிட்டுப்பிற்பாடுசொல்கிறேன்'' என்றான் ரவிதாஸன்.



அவனைத் தடுப்பதில் பயனில்லையென்று கருதியவளைப் போல் நந்தினி ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

''ராணி! கேள்! மூன்று வருஷத்துக்கு முன்னால் ஒருநாள் நடு நிசியில் வைகை நதிக் கரையில் உள்ள மயானத்தில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது. சாஸ்திரப்படி புரோகிதர்களைக் கொண்டு, அந்திமக் கிரியை ஒன்றும் அங்கு நடக்கவில்லை. காட்டில் காய்ந்து கிடந்த கட்டைகளையும் குச்சிகளையும் இலைச் சருகுகளையும் கொண்டு வந்து அச்சிதையை அடுக்கினார்கள். மரத்துக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த ஓர் உடலைக் கொண்டு வந்து அந்தச் சிதையில் இட்டார்கள். பிறகு தீ மூட்டினார்கள். காட்டுக் கட்டைகளில் தீ நன்றாய்ப் பிடித்துக் கொழுந்து விட்டு எரிந்தது. அப்போது காட்டு நிழலிலிருந்து உன்னைச் சிலர் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார்கள். உன் காலையும் கையையும் கட்டிப் போட்டிருந்தது. உன் வாயில் துணி அடைத்திருந்தது. இன்று அழகாகப் பூ வைத்துக் கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறாயே, அந்தக் கூந்தல் விரிந்து தரையில் புரண்டு கொண்டிருந்தது. உன்னை



அம்மனிதர்கள் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த சிதையில் உயிரோடு போட்டுக் கொளுத்திவிட எண்ணியிருந்தார்கள். 'இன்னும் கொஞ்சம் தீ நன்றாக எரியட்டும்!' என்று அவர்களில் ஒருவன் சொன்னான். உன்னை அங்கேயே போட்டு விட்டு அந்த மனிதர்கள் தனித் தனியே ஒரு பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள். அதை நீ கேட்டுக் கொண்டிருந்தாய். உன் வாயை அடைத்திருந்தார்களே தவிர, கண்ணையும் கட்டவில்லை; காதையும் அடைக்கவில்லை. ஆகையால், பார்த்துக்கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தாய். அவர்கள் அனைவரும் சபதம் கூறி முடிந்த பிறகு உன்னை நெருங்கினார்கள். அதுவரை சும்மா இருந்தவள், கட்டுண்டிருந்த உன் கைகளால் ஏதோ சமிக்ஞை செய்ய முயன்றாய். உன் கண்களை உருட்டி விழித்துப் புருவத்தை நெரித்துக் கஷ்டப்பட்டாய். அவர்களில் ஒருவன், 'இவள் ஏதோ சொல்ல விரும்புகிறாளடா!' என்றான். 'பழைய கதையாகத்தான் இருக்கும். தூக்கிச் சிதையில் போடு!' என்றான் இன்னொருவன். 'இல்லையடா! தீயில் போடுவதற்கு முன்னால் என்னதான் சொல்கிறாள், கேட்டுவிடலாம்! வாயிலிருந்து துணியை எடு!' என்றான் மற்றொருவன். அவனே அவர்களுக்குத் தலைவன் ஆனபடியால் உன் வாயிலிருந்து துணியை எடுத்தார்கள். நீ அப்போது என்ன சொன்னாய் என்பது நினைவிருக்கிறதா பெண்ணே!'' என்று ரவிதாஸன் கேட்டுவிட்டு நிறுத்தினான்.

நந்தினி மறுமொழி சொல்லவும் இல்லை; அவனைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. நெஞ்சில் குடிகொண்டிருந்த அருவருப்பையும் பீதியையும் அதே சமயத்தில் பயங்கர சங்கல்பத்தின் உறுதியையும் அவள் முக மண்டலம் காட்டியது. அவளுடைய கரிய கண்களிலிருந்து இரு கண்ணீர்த் துளிகளும் ததும்பி நின்றன.

''பெண்ணே! பேசமாட்டேன் என்கிறாய்! வேண்டாம்! அதையும் நானே சொல்லி விடுகிறேன். அந்த மனிதர்களைப் போலவே நீயும் பழி வாங்கும் விரதம் பூணப் போவதாகச் சொன்னாய். பழி வாங்குவதற்கு அவர்களைக் காட்டிலும் உனக்கே அதிக காரணம் உண்டு என்று சத்தியம் செய்தாய். உன்னுடைய அழகையும் மதியையும் அதற்கே பயன்படுத்துவதாகக் கூறினாய். அவர்களுக்கு உன்னால் முடிந்த அளவு உதவி புரிவதாகவும் சொன்னாய். சபதத்தை நிறைவேற்றியதும் நீயே உன் உயிரை விட்டுவிடத் தீர்மா

னித்திருப்பதாகவும் ஆணையிட்டுச் சொன்னாய். உன்னை மற்றவர்கள் நம்பவில்லை. ஆனால் நான் நம்பினேன். நம்பி, உன்னைத் தீயில் போட்டுவிடாமல் தடுத்தேன். உன் உயிரைத் தப்புவித்தேன். இதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?'' என்று ரவிதாஸன் கூறி நிறுத்தினான்.

நந்தினி சற்றுத் திரும்பி அவனைப் பார்த்து, ''ஞாபகம் இருக்கிறதா என்று கேட்கிறாயே? என் நெஞ்சில் அவ்வளவும் தீயினால் எழுதியது போல் எழுதி வைத்திருக்கிறதே!'' என்றாள்.

''பின்னர் ஒரு நாள் நாம் எல்லாரும் அகண்ட காவேரிக் கரையோரமாகக் காட்டு வழியில் போய்க்கொண்டிருந்தோம். திடீரென்று பின்னால் குதிரை வீரர்கள் வரும் சத்தம் கேட்டது. அவர்கள் போகும் வரையில் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் காட்டில் ஒளிந்துகொள்ளத் தீர்மானித்தோம். ஆனால் நீ மட்டும் அத்தீர்மானத்தை மீறி வழியிலேயே நின்றாய். அந்த வீரர்கள் உன்னைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுடைய தலைவனாகிய பழுவேட்டரையன் உன்னைக் கண்டு மயங்கி உன் மோக வலையில் விழுந்தான். அவனை நீ மணந்தாய். என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் நான் ஏமாந்துவிட்டதாக என்னை இடித்துக் கூறினார்கள். நான் உன்னை விடவில்லை. எப்படியோ ஒரு நாள் உன்னைத் தனியே பிடித்துக் கொண்டேன். துரோகியாகிய உன்னைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட எண்ணினேன். மறுபடியும் நீ உயிர்ப் பிச்சை கேட்டாய். நம்முடைய சபதத்தை நிறைவேற்றுவதற்காகவே இங்கு வந்திருப்பதாகக் கூறினாய். இந்த அரண்மனையில் இருந்தபடியே எங்களுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்வதாகச் சத்தியம் செய்தாய். இதெல்லாம் உண்மையா இல்லையா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினான் ரவிதாஸன்.

''இதெல்லாம் உண்மைதான்; யார் இல்லை என்றார்கள்? எதற்காகத் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாய்? இப்போது நீ வந்த காரியத்தைச் சொல்லு!'' என்றாள் நந்தினி.

''இல்லை, பெண்ணே! உனக்கு ஞாபகம் இல்லை. எல்லாவற்றையும் நீ மறந்துவிட்டாய்! பழுவூர் அரண்மனையின் சுகபோகத்தில் அழுந்தி உன் சபதத்தை மறந்துவிட்டாய்! அறுசுவை உண்டி அருந்தி, ஆடை ஆபரணங்கள் புனைந்து, சப்ர கூட மஞ்சத்தில் பட்டு மெத்தையில் உறங்கி, தந்தப் பல்லக்கில் பிரயாணம் செய்யும் ராணி நீ! உனக்கு பழைய ஞாபகங்கள் எப்படி இருக்கும்?''

''சீச்சீ! இந்த மஞ்சமும் மெத்தையும் ஆடை ஆபரணமும் யாருக்கு வேண்டும்? இந்த அற்ப போகங்களுக்காகவா நான் உயிர் வாழ்கிறேன்? இல்லவே இல்லை!''

''அல்லது வழியில் போகிற வாலிபனுடைய சௌந்தரிய வதனத்தைக் கண்டு மயங்கிவிட்டாய் போலும்! புதிதாக கொண்ட மையலில் பழைய பழி வாங்கும் எண்ணத்தை மறந்திருக்கலாம் அல்லவா?''

நந்தினி சிறிது துணுக்கம் அடைந்தாள். அதை உடனே சமாளித்துக் கொண்டு ''பொய்! முழுப் பொய்!'' என்றாள்.

''அது பொய்யானால், நான் இன்று வரப் போவதாக முன்னதாகச் சொல்லி அனுப்பியிருந்தும், வழக்கமான இடத்துக்கு உன் தாதிப் பெண்ணை ஏன் அனுப்பி வைக்கவில்லை?''

''அனுப்பி வைத்துத்தான் இருந்தேன். உனக்கு வைத்திருந்த ஏணியில் இன்னொருவன் ஏறி வந்துவிட்டான். அந்த மூடப் பெண் அவனை நீதான் என்று எண்ணி அழைத்துக் கொண்டு வந்துவிட்டாள். அது என்னுடைய குற்றமா?''

''யாருடைய குற்றமாயிருந்தால் என்ன? இன்னும் ஒரு கணத்தில் என் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தது. அந்த வாலிபனைத் தேடி வந்த கோட்டைக் காவலாளர் என்னைப் பிடித்துக் கொள்ள இருந்தார்கள். இந்த அரண்மனைக்குப் பக்கத்துக் காட்டிலுள்ள குளத்தில் மூச்சுத் திணறும் வரையில்

முழுகியிருந்து அவர்கள் போன பிறகு தப்பித்து வந்தேன். சொட்டச் சொட்ட நனைந்து வந்தேன்....."

"உனக்கு அது வேண்டியதுதான். என்னைச் சந்தேகித்த பாவத்தை அந்த முழுக்கினால் கழுவிக் கொண்டாய்!"

"பெண்ணே! சத்தியமாகச் சொல்! அந்த வாலிபனுடைய அழகில் நீ மதி மயங்கிவிடவில்லையா?"

"சீச்சீ! இது என்ன வார்த்தை? ஆண்பிள்ளைகளின் அழகைப் பற்றி யாராவது பேசுவார்களா? இந்த வெட்கங் கெட்ட சோழ நாட்டிலே தான் 'அரசன் அழகன்' என்றுகொண்டாடுவார்கள். ஆண்பிள்ளைகளுக்கு அழகு உடம்பிலுள்ள போர்த் தழும்புகள் அல்லவா?"

"நன்றாகச் சொன்னாய். இதை நீ உண்மையாகச் சொல்லும் பட்சத்தில், அந்த வாலிப வழிப் போக்கன் இங்கு எதற்காக வந்தான்?"

"முன்னமே சொன்னேனே, நீதான் என்று எண்ணி வாஸுகி அவனை அழைத்துக் கொண்டு வந்தாள் என்று."

"என்னிடம் கூட நீ கொடுக்காத உன் முத்திரை மோதிரத்தை அவனிடம் ஏன் கொடுத்தாய்?"


"அவனை இவ்விடம் தருவித்துப் பேசுவதற்காகவே கொடுத்தேன். இப்போது அம்மோதிரத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு விடப் போகிறேன்....."

"எதற்காக அவனைத் தருவித்தாய்? அவனிடம் இவ்வளவு நேரம் என்ன சல்லாபம் செய்து கொண்டிருந்தாய்?"

"ஒரு முக்கியமான லாபத்தைக் கருதியே அவனுடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தேன். நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அவனால் பெரிய அனுகூலம் ஏற்படும்."

"அடி பாதகி! கடைசியில் உன் பெண் புத்தியைக் காட்டிவிட்டாயா? யாரோ முன்பின் தெரியாத வாலிபனிடம் நமது இரகசியத்தை...."

"வீணில் ஏன் பதறுகிறாய்? நான் ஒன்றும் அவனிடம் சொல்லிவிடவில்லை. அவனிடமிருந்துதான் ரகசியத்தை கிரஹித்துக் கொண்டேன்."



"என்ன கிரஹித்துக் கொண்டாய்?"

"இவன் காஞ்சியிலிருந்து பழையாறைக்கு ஓலை கொண்டு போகிறான். பழையாறையில் உள்ள பெண் புலிக்குக் கொண்டு போகிறான். அதை என்னிடம் காட்டினான். அவள் கொடுக்கும் மறு ஓலையை என்னிடம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்குள் நீ வந்துவிட்டாய்."

"ஓலையுமாயிற்று; எழுத்தாணியும் ஆயிற்று. இதனாலெல்லாம் நமக்கு என்ன உபயோகம்?"

"உன்னுடைய அறிவின் ஓட்டம் அவ்வளவுதான்! புலிக் குலத்தை அடியோடு அழிப்பது என்று நாம் விரதம் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் ஆண் புலிகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். பெண் புலியினாலும் குலம் வளரும் என்பதை மறந்து விட்டீர்கள். அது மட்டுமல்ல. தற்போது இந்தச் சோழ ராஜ்யத்தை ஆளுவது யார் என்று எண்ணியிருக்கிறாய்? பலமிழந்து செயலிழந்து நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் கிழவனா? காஞ்சியிலும் இலங்கையிலும் உள்ள இளவரசர்களா.....?"

"இல்லை; உன்னை ராணியாகப் பெறும் பாக்கியம் பெற்ற தனாதிகாரி பழுவேட்டரையர்தான். இது உலகம் அறிந்ததாயிற்றே!"

"அதுவும் தவறு. உலகம் அப்படி எண்ணுகிறது; இந்தக் கிழவரும் அப்படி எண்ணியே ஏமாந்து போகிறார். நீயும் அந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறாய். உண்மையில் பழையாறையில் உள்ள பெண் புலிக்குட்டிதான் இந்த ராஜ்யத்தை ஆளுகிறது. அரண்மனைக்குள் இருந்தபடி அந்த கர்வக்காரி சூத்திரக் கயிற்றை இழுத்து எல்லாரையும் ஆட்டி வைக்கப் பார்க்கிறாள்! அவளுடைய கொட்டத்தை நான் அடக்குவேன். அதற்காகவே இந்த வாலிபனை உபயோகப் படுத்திக் கொள்ளப் போகிறேன்....."




ரவி தாஸனுடைய முகத்தில் வியப்புக்கும் மரியாதைக்கும் உரிய அறிகுறிகள் தென்பட்டன.

"நீ பெரிய கைகாரி தான்; சந்தேகம் இல்லை! ஆனால் இதெல்லாம் உண்மை என்பது என்ன நிச்சயம்? உன்னை எப்படி நம்புவது?" என்றான்.

"அந்த வாலிபனை உன்னிடமே ஒப்புவிக்கிறேன். நீயே அவனைச் சுரங்க வழியில் கோட்டைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போ! கண்ணைக் கட்டி அழைத்துக்கொண்டுபோ! பழையாறைக்கு அருகில் சென்று காத்திரு! குந்தவை கொடுக்கும் மறு ஓலையுடன் இங்கே அவனை மீண்டும் அழைத்துக் கொண்டு வா! அவன் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாலும் உன்னை ஏமாற்றப் பார்த்தாலும் உடனே கொன்று விடு!" என்றாள் நந்தினி.

"வேண்டாம்! வேண்டாம்! நீயும் அவனும் எப்படியாவது போங்கள்! அவனைச் சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் கோட்டைக்குள் இப்போது தேடுகிறார்கள்; வெளியிலும் சீக்கிரத்தில் தேடப் போகிறார்







கள். அவனோடு சேர்ந்து போனால் எனக்கும் ஆபத்து வரும். நான் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லு!''

''வந்த காரியம் என்னவென்று நீ இன்னமும் தெரிவிக்கவில்லை....''

''காஞ்சிக்கும் இலங்கைக்கும் ஆட்கள் போக ஏற்பாடாகிவிட்டது. இலங்கைக்குப் போகிறவர்கள் பாடு ரொம்பவும் கஷ்டம். அங்கே வெகு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும்....''

''அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? இன்னும் பொன் வேண்டுமா? உங்களுடைய பொன்னாசைக்கு எல்லையே கிடையாதா?''

''பொன் எங்களுடைய சொந்த உபயோகத்துக்கு அல்ல; எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத்தான். பின் எதற்காக உன்னை இங்கு விட்டு வைத்திருக்கிறோம்? இலங்கைக்குப் போகிறவர்களுக்குச் சோழ நாட்டுப் பொன் நாணயத்தினால் பயன் இல்லை. இலங்கைப் பொன் இருந்தால் நல்லது......''

''இதைச் சொல்வதற்கு ஏன் இத்தனை நேரம்? நீ கேட்பதற்கு முன்பே நான் எடுத்து வைத்திருக்கிறேன்'' என்று நந்தினி கூறி, தான் இருந்த மஞ்சத்தின் அடியில் குனிந்தாள். ஒரு பையை எடுத்து ரவிதாஸன் கையில் தந்தாள். ''இது நிறைய இலங்கைப் பொற்காசு இருக்கிறது. எடுத்துக் கொண்டு போ! அவர் வரும் நேரமாகி விட்டது!'' என்றாள்.

ரவிதாஸன் பையை வாங்கிக் கொண்டு புறப்பட்டபோது, ''கொஞ்சம் பொறு! அந்த வாலிபனைக் கோட்டைக்கு வெளியிலாவது கொண்டு போய் விட்டு விடு! அப்புறம் அவன் வேறு பாதையில் போகட்டும்! சுரங்க வழியை அவனுக்குக் காட்டிக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை!'' என்று சொல்லிவிட்டு, எழுந்து நின்று இருண்ட மாளிகைப் பக்கம் பார்த்

தான்.

அங்கே ஒன்றும் தெரியவில்லை. விரல்களினால் சமிக்ஞை செய்தான்; இலேசாகக் கையைத் தட்டினான்; ஒன்றிலும் பலன் இல்லை.

அவளும் ரவிதாஸனும் லதா மண்டபப் பாதை வழியாகச் சிறிது தூரம் சென்றார்கள். அந்த பிரம்மாண்டமான இருள் மாளிகையில் அங்கிருந்து பிரவேசிக்கும் வாசலை நெருங்கினார்கள்.

ஆனால் வந்தியத்தேவனைக் காணவில்லை! சுற்றுமுற்றும் நாலாபுறத்திலும் அவனைக் காணவில்லை!

அத்தியாயம் 37

சிம்மங்கள் மோதின!

பழுவூர்ச் சகோதரர்கள் மீது தஞ்சைபுரிவாசிகள் தனிப்பட்ட அபிமானம் வைத்திருந்தார்கள். அந்தப் பழைய நகருக்குப் புதிய பெருமையும் செல்வாக்கும் அளித்தவர்கள் பழுவேட்டரையர்கள் அல்லவா?

யானை, குதிரை, ஒட்டகைகளுடன் பவனி என்றால், எந்த நாளிலும் ஜனங்களுக்கு வேடிக்கை பார்ப்பதில் குதூகலந்தான். அதிலும் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் தஞ்சையை விட்டு வெளியே போனாலும் சரி, வெளியே போயிருந்து கோட்டைக்குள் பிரவேசித்தாலும் சரி, வீதியின் இருபுறங்களிலும் ஜனங்கள் திரண்டு நின்று வேடிக்கை பார்ப்பார்கள்; ஜய கோஷம் செய்வார்கள்; வாழ்த்துக் கூறுவார்கள்; பூமாரியும், பொறி மழையும் பொழிவார்கள்.

சாதாரணமாய்ப் பெரிய சகோதரர் வெளியில் போய்விட்டு வந்தால் இளையவர் கோட்டை வாசலில் வந்து நின்று வரவேற்று அழைத்துச் செல்வார்.

அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் கண்டதும் தழுவிக் கொள்ளும் காட்சி நீலகிரியும் பொதிகை மலையும் ஆலிங்கனம் செய்து கொள்வது போலிருக்கும்.

இருவரும் இரண்டு யானைகள் மீதோ அல்லது குதிரைகளின் மீதோ ஏறிக் கொண்டு அருகருகே சென்றார்களானால், அந்தக் காட்சியைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்.

பழுவூர்ச் சகோதரர்களைச் சிலர் இரணியனுக்கும் இரண்யாட்சனுக்கும் ஒப்பிட்டுப் பேசுவார்கள். இன்னும் சிலர் 'சுந்தோப சுந்தர்கள்' என்பார்கள். இராமரையும் பரதரையும் ஒத்த அருமைச் சகோதரர்கள் என்றும், வீமனையும் அருச்சுனனையும் ஒத்த வீரச் சகோதரர்கள் என்றும் கூறுவோர் உண்டு.

ஆனால் இன்றைக்குப் பெரிய பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்தபோது அவருடன் வந்த பரிவாரங்கள் வழக்கமான முழக்கங்களைச் செய்தபோதிலும், வீதிகளில் குதூகல ஆரவாரம் இல்லை. ஜனக் கூட்டமும் அதிகமில்லை. சின்னப் பழுவேட்டரையர் கோட்டை வாசலுக்கு அண்ணனை வரவேற்பதற்காக வந்து காத்திருக்கவும் இல்லை.

ஆனால் தனாதிகாரி இதைப் பொருட்படுத்தாமல் நேரே தம்பியின் மாளிகையை நோக்கிச் சென்றார். ஏதோ ஒரு முக்கியமான காரியத்தில் இளையவன் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். ஒருவேளை சக்கரவர்த்தியின் உடல் நிலை ரொம்பக் கேவலமாகிவிட்டதோ, அல்லது.... அல்லது, 'பெரிய காரியம்' தான் நடந்துவிட்டதோ என்ற ஐயம் உண்டாயிற்று. ஆகையால், வழக்கத்தை விடத் துரிதமாகவே அவருடைய பரிவார ஊர்வலம் சென்று கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் மாளிகையை அடைந்தது.

மாளிகை வாசலுக்குத் தமையனை வரவேற்க வந்த தளபதியின் முகத்தில் பரபரப்பும் கவலை

யும் காணப்பட்டன. தமையனுக்கு வணக்கம் செலுத்திப் பிறகு மார்புறத் தழுவிக் கொண்டார். இருவரும் மாளிகைக்குள் சென்றார்கள். நேரே அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள்.

இருவரும் தனிப்பட்டதும், "தம்பி! காலாந்தகா! என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்? ஏதாவது விசேஷம் உண்டா? சக்கரவர்த்தி சுகமா?" என்று தமையனார் கேட்டார்.

சின்னப் பழுவேட்டரையராகிய காலாந்தக கண்டர், "சக்கரவர்த்தி எப்போதும்போல் இருக்கிறார். அவரது சுகத்தில் அபிவிருத்தியும் இல்லை; சீர்கேடும் இல்லை!" என்றார்.

"பின் ஏன் வாட்டம் அடைந்திருக்கிறது உன் முகம்? ஏன் கோட்டை வாசலுக்கு வரவில்லை? ஊரும் ஒரு மாதிரி சலசலப்புக் குறைந்திருக்கிறதே!" என்று பெரியவர் கேட்டார்.

"அண்ணா! ஒரு சிறு சம்பவம் நடந்திருக்கிறது. பிரமாதம் ஒன்றும் இல்லை. அதைப் பற்றிப் பிற்பாடு சொல்கிறேன். தாங்கள் போன காரியங்களெல்லாம் எப்படி?" என்று காலாந்தக கண்டர் கேட்டார்.

"நான் சென்றிருந்த காரியம் பூரண வெற்றிதான். அழைத்திருந்தவர்கள் அவ்வளவு பேரும் கடம்பூருக்கு வந்திருந்தார்கள். எல்லாரும் ஒரு முகமாக உன் மருமகன் மதுராந்தகனே அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று ஒப்புக் கொண்டார்கள். ஜயகோஷத்துடன் ஆமோதித்தார்கள். நியாயத்துக்குக் கட்டுப்படவில்லையென்றால், கத்தி எடுத்துப் போர் செய்து உரிமையை நிலைநாட்டவும் அவ்வளவு பேரும் சித்தமாயிருக்கிறார்கள். கொல்லி மழவனும், வணங்காமுடி முனையரையனும்கூட ஒப்புக் கொண்டார்கள் என்றால், நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தடை என்ன? சம்புவரையர் தம் கோட்டை, கொத்தளம், படை, செல்வம் எல்லாவற்றையும் ஈடுபடுத்தச் சித்தமாயிருக்கிறார். அவருடைய மகன் கந்தமாறன் மிகத் தீவிரமாயிருக்கிறான். நடு நாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் பற்றிக் கவலையேயில்லை. சோழ தேசந்தான் எப்போதும் நம் கையில் இருக்கிறது. வேறு என்ன யோசனை? திருக்கோவலூர் மலையமான், பல்லவன் பார்த்திபேந்திரன், கொடும்பாளூர் வேளான் இந்த மூன்று பேருந்தான் ஒருவேளை எதிர்க்கக் கூடும். அவர்களில் கொடும்பாளூரான் இங்கில்லை; இலங்கையில் இருக்கிறான். மற்ற இருவராலும் என்ன புரட்டி விட முடியும்? கூடிய சீக்கிரத்தில் சக்கரவர்த்தியிடம் சொல்லி, உடனே முடிவு செய்துவிட வேண்டியதுதான்!" என்றார் பெரிய பழுவேட்டரையர்.

"தலைவர்களைப் பற்றித் தாங்கள் சொல்வதெல்லாம் சரி; ஜனங்கள்? ஜனங்கள் ஆட்சேபித்தால்?" என்று கேட்டார் காலாந்தக கண்டர்.

"ஆகா! ஜனங்களை யார் கேட்கப் போகிறார்கள்? ஜனங்களைக் கேட்டுக் கொண்டா இராஜ்ய காரியங்கள் நடக்கின்றன? ஜனங்கள் ஆட்சேபிக்கத் துணிந்தால், மறுபடியும் அவர்கள் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக்காதபடி செய்துவிட வேண்டும். அப்படி ஒன்றும் நேரும் என நான் நினைக்கவில்லை. சக்கரவர்த்தியின் விருப்பம் என்றால் பேசாமல் அடங்கி விடுவார்கள். மேலும், அருள்மொழிவர்மன் நல்ல வேளையாக இலங்கையில் இருக்கிறான். அவன் இருந்தாலும் ஒருவேளை ஜனங்கள் தங்கள் குருட்டு அபிமானத்தைக் காட்ட முயல்வார்கள். ஆதித்த கரிகாலன் மீது ஜனங்கள் அவ்வளவு பிரேமை கொண்டிருக்கவில்லை. மதுராந்தகன் மீது அவர்களுடைய அபிமானத்தைத் திருப்புவது சுலபம். 'சிவ பக்தன்' உத்தம குணம் படைத்தவன்' என்று ஏற்கெனவே பெயர் வாங்கியிருக்கிறான். சுந்தர சோழரின் புதல்வர்கள் இருவரைக் காட்டிலும் உன் மருமகனுடைய முகத்தில் களை அதிகம் என்பதுதான் உனக்குத் தெரியுமே? 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று கருதும் முட்டாள் ஜனங்கள் 'மதுராந்தக சக்கரவர்த்தி வாழ்க' என்று கோஷிக்காவிட்டால்தான் ஆச்சரியமாயிருக்கும். எப்படியிருந்தாலும் நான் ஒருவன் இருக்கும்போது உனக்கு என்ன கவலை....?"

"ஆனால் வேளக்காரப் படை இருக்

கிறதே? அவர்களை எப்படிச் சமாளிப்பது?''

''வேளக்காரப் படையார் சுந்தர சோழருக்குத்தான் உயிர்ப் பலி விரதம் எடுத்தவர்களே தவிர, அவருடைய பிள்ளைகளுக்கு அல்லவே? அப்படி அவர்கள் குறுக்கிட்டாலும் உன்னுடைய கோட்டைக் காவல் படை எங்கே போயிற்று? ஒரு நாழிகைப் போதில் அவ்வளவு பேரையும் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ள வேண்டியது தானே?''

''அண்ணா! முக்கியமான எதிர்ப்பு பழையாறையிலிருந்துதான் வரும். அந்தக் கிழவியும் குமரியும் சேர்ந்து என்ன சூழ்ச்சி செய்வார்களோ, தெரியாது. அதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.....''

''தம்பி! காலாந்தகா! போயும் போயும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கா என்னைப் பயப்படச் சொல்லுகிறாய்? அவர்களுடைய தந்திர மந்திரத்துக்கெல்லாம் மாற்று என்னிடம் இருக்கிறது. கவலைப்படாதே!''

''இரண்டு பிள்ளைகளையும் தஞ்சைக்கு வரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்....''

''ஆதித்தகரிகாலன் வரமாட்டான். ஒருவேளை அருள்மொழி தந்தை கட்டளைப்படி புறப்பட்டு வருவான். வந்தால், அவனைத் தடுக்க வேண்டியதுதான்! மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிச் சிம்மாசனத்தில் சகல அதிகாரங்களுடன் ஏற்றிய பிறகுதான் அவர்கள் இருவரும் வந்தால் வரலாம். அதற்கு முன் வரக் கூடாது. இதை என்னிடம் விட்டு விடு! மற்றபடி நீ என்னமோ சிறிய விசேஷம் இங்கே நடந்ததாகச் சொன்னாயே, அது என்ன?''



''காஞ்சியிலிருந்து வாலிபன் ஒருவன் வந்தான். சக்கரவர்த்திக்கு ஓர் ஓலையும் குந்தவைக்கு ஓர் ஓலையும் கொண்டு வந்தான்....''

''அவனை என்ன செய்தாய்? ஓலைகளைப் பிடுங்கிக் கொண்டு அவனைச் சிறைப்படுத்தியிருக்கிறாய் அல்லவா?''

''இல்லை, அண்ணா! கடம்பூரில் தங்களைப் பார்த்ததாகவும், சக்கரவர்த்தியிடம் நேரில் கொடுக்கச் சொன்னதாகவும் கூறினான். அது உண்மையா?''

''ஆகா! வெறும் பொய்! கடம்பூரில் அழையாத வாலிபன் ஒருவன்—கந்தமாறனின் சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு வந்திருந்தான். ஆனால் ஓலை கொண்டு வந்திருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே! அவன் முகத்தைப் பார்த்ததுமே சந்தேகித்தேன். அவனிடம் நீ ஏமாந்து போய்விட்டாயா, என்ன?''

''ஆம் அண்ணா! ஏமாந்துதான் போய்விட்டேன். தங்கள் பெயரைச் சொன்னதால் ஏமாந்தேன்.''

''அட மூடா! ஏமாந்து என்ன செய்தாய்? ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்துவிட்டாயா? அதைப் பார்க்கக் கூட இல்லையா?''

''பார்த்தேன். அதில் ஒன்றுமில்லை. காஞ்சி பொன் மாளிகைக்கு வரும்படிதான் எழுதியிருந்தது. ஓலையைக் கொடுத்துவிட்டு, அந்த வாலிபன் ஏதோ 'அபாயம்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்....''


''பிறகாவது சந்தேகித்துச் சிறைப்படுத்தவில்லையா?''

''சந்தேகித்தேன்; ஆனால் சிறைப்படுத்தவில்லை.''

''பின்னே என்ன செய்தாய்?''


''ஊர் பார்க்க வேண்டும் என்றான். பார்த்து விட்டு வரட்டும் என்று இரண்டு ஆளையும் பின்னோடு அனுப்பினேன். அவர்களை ஏமாற்றிவிட்டு மறைந்துவிட்டான். அவனைத் தேடு

தரமுயர்ந்த ரசனை
உங்கள் குடும்பத்துக்கு...



...பின், தரம் குறைந்த டிவி எதற்கு?

உங்களைப் பொருத்தவரையில், நன்றாக உழைக்கும், நியாய விலையுள்ள டிவி-யை வாங்க விரும்புவீர்கள். ஆனால் உங்கள் குடும்பத்தினர் அப்படி இல்லையே! இது தவிர, டிவி மிக அழகாகவும், விலையுயர்ந்த தோற்றமுள்ளதாகவும் இருக்க விரும்புகிறார்கள். அந்த இரண்டையும் அளிக்கிறது CTS 606. ஆம். அது தோற்றத்திலும் சிறந்தது; உழைப்பிலும் மிகச் சிறந்தது. ஆயினும், விலையும் மிக அதிகமில்லை. எனவே, உடனே முடிவெடுங்கள். உங்கள் குடும்பத்தினரின் இன்பம்தானே உங்களுக்குக் கோடி இன்பம்!



□ கட்டுறுதியான உயர்தர பாலிஸ்டைரீன் வார்ப்படக் காபினெட் □ ஒளிகாட்டும் ப்ரோகிராம் டிஸ்ப்ளே □ தொட்டதும் இயங்கும் சானல் ப்ரோகிராம் செலக்டர் □ இலகுவாக நகரும் வால்யூம் கண்ட்ரோல் □ மறைவாக உள்ள இயக்கக் கண்ட்ரோல்கள் □ ஒலி நயத்துக்காக 2-வழி ஸ்பீக்கர் சிஸ்டம் □ இயற்கையான வண்ண ஒளிபரப்புக்கு பிளாக் ஸ்ட்ரைப் 90° இன்-லைன் பிக்சர் டியூப் □ குறைகளற்ற உயர்தர உறுப்புகள் — மேற்கு ஜெர்மனியின் ITT அளித்தது □ VCR இணைப்பு

கலர் சாலிடேர்
CTS 606


Looks better. Works even better!

A product of Hi-Beam Electronics (P) Ltd., Madras

Insight-DE-505

விஸ்ட்ரம்

ஒரு டயபடிக் உணவு



FOOD SUBSTITUTE/ SUPPLEMENT FOR DIABETIC PERSONS

TAS

நீரிழிவுக்காரர்களுக்கென்றே பிரத்யோகமாக வடிவமைக்கப்பட்டது.

சோர்வை நீக்கி, சக்தியை கொடுத்து தெம்பை ஊட்டுகின்றது

கொழுப்புச் சத்து சிறிதும் இல்லாதது

முழுவதும் தானிய, பருப்பு வகைகளால் ஆனது

செயற்கை வண்ணமோ, மணமோ, ருசியோ சேர்க்கப்படாதது இயற்கை தந்த பாதுகாப்புடன் அளிக்கப்படுகிறது

ஸ்பென்ஸர்ஸ், சிந்தாமணி, நீல்கிரீஸ் மற்றும் எல்லா மருந்துக் கடைகளிலும், டிபார்ட்மெண்டல் கடைகளிலும் கிடைக்கும்.

வதற்குத்தான் ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன். அதனால்தான் கோட்டை வாசலுக்குக்கூட வரவில்லை! நகர மக்களுக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறேன்....''

''அட சீ! நீயும் ஒரு மனிதனா? மீசை முளைக்காத ஒரு சிறு பிள்ளையிடமா ஏமாந்து போனாய்? உனக்குக் காலாந்தக கண்டன் என்று பெயர் வைத்தேனே, என் முட்டாள்தனத்தை நொந்து கொள்ள வேண்டும். உன்னைக் கோட்டைத் தளபதியாக்கினேனே? எனக்கு இது வேண்டியதுதான்! என் பெயரைச் சொல்லி ஒரு தறுதலைப் பயல் உன்னை ஏமாற்றிவிட்டான் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாயில்லையா?''

''வெறுமனே உங்கள் பெயரைச் சொன்னதோடு இல்லை. உங்கள் முத்திரை மோதிரத்தையும் காட்டினான். அதை அவனுக்கு நீங்கள் கொடுத்தீர்களா?''

''இல்லவே இல்லை! அப்படியெல்லாம் ஏமாந்துவிட நான் உன்னைப் போல் ஏமாளியா?''

''அவனிடம் முத்திரை மோதிரம் இருந்தது உண்மை. என்னிடமும் காட்டினான். கோட்டை வாசல் காவலர்களிடமும் காட்டி விட்டுத்தான் உள்ளே புகுந்தான். நீங்கள் கொடுத்திராவிட்டால், இன்னும் ஒரே ஒரு இடத்திலிருந்துதான் அதை அவன் பெற்றிருக்க முடியும்.''

''யாரைச் சொல்கிறாய்?''

''தங்களால் ஊகிக்க முடியவில்லையா? இளையராணியைத்தான் சொல்கிறேன்...''

''சீச்சீ! ஜாக்கிரதை! நாக்கை அறுத்துவிடுவேன்.''

''நாக்கை அறுத்தாலும் அறுங்கள்; தலையைக் கொய்தாலும் கொய்யுங்கள். வெகு நாளாய்ச் சொல்லவிரும்பியதை இப்போது சொல்லிவிடுகிறேன். விஷ நாகத்தை அழகாயிருக்கிறது என்று எண்ணி வீட்டில் கொண்டு வைத்து வளர்க்கிறீர்கள். அது ஒரு நாள் கடிக்கத்தான் போகிறது. நம் எல்லாரையும் நாசம் செய்யப் போகிறது! வேண்டாம்! அவளைத் துரத்திவிட்டு மறு காரியம் பாருங்கள்!''




''காலாந்தக கண்டா! வெகு நாளாக உனக்குச் சொல்ல எண்ணியிருந்த ஒரு விஷயத்தை நானும் உனக்கு இன்று சொல்லுகிறேன். வேறு எந்தக் காரியத்தைப் பற்றி வேண்டுமானாலும் உன் அபிப்ராயத்தை நீ தாராளமாய்ச் சொல்லலாம். என் காரியம் பிடிக்காவிட்டால் தைரியமாகக் கண்டித்துப் பேசலாம். ஆனால் நான் கைப்பிடித்து மணந்து கொண்டவளைப் பற்றிக் குறைவாக இனி எப்போதேனும் ஒரு வார்த்தை சொன்னாலும் சரி; உன்னை வளர்த்த இதே கையினால் உன்னைக் கொன்றுவிடுவேன். உனக்குக் கத்தி பிடிக்கச் சொல்லிக் கொடுத்த நான் உன் கத்தியைப் பிடுங்கியே உன்னை வெட்டிக் கொல்லுவேன்! ஜாக்கிரதை!

அந்த இரு சகோதரர்களும் அப்போது போட்டுக் கொண்ட ஆத்திரச் சொற்போர், சிங்கமும் சிங்கமும் மோதிப் பயங்கரமான சண்டை பிடிப்பது போலவே இருந்தது. அவர்களுடைய குரலும் சிம்ம கர்ஜனையைப் போலவே முழங்கிற்று. அவர்கள் பேசியது அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில்தான் என்றாலும், வெளியில் காத்திருந்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய குரல் விவரம் இன்னதென்று தெரியாமல் இடி முழக்கம் போல் கேட்டது. அனைவரும் 'என்ன விபரீதமோ' என்று நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

திண்ணை மாநாடு



மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின் சாவகாசமாய்த் திண்ணையில் பெண்களின் மாநாடு எப்போதும் போல் கூடியது.

வாயைத் துடைத்துக் கொண்டு திண்ணைச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அம்மா தான் முதலில் அந்தப் பிரச்னையை மீண்டும் கிளப்பினாள்.

''உம்... அப்புறம் அந்த வனஜாவோட விஷயம் என்னாச்சு?'' என்று கேட்டாள், வெற்றிலையின் காம்பைக் கிள்ளி எறிந்து கொண்டே.

''என்னத்தைச் சொல்றது... சரியான ஓடுகாலி அவ.'' — இது எங்கள் மாடி போர்ஷனில் வாடகைக்குக் குடியிருக்கும் சாந்தா மாமி.

''நேத்து முன்தினம் நடந்தது என்ன தெரியுமா?'' — பக்கத்து வீட்டு சரசு ஒரு வெடி குண்டைப் பற்ற வைத்துவிட்டுக் காத்திருந்தாள்.

''என்ன? என்ன?'' என்று ஆர்வமான குரல்கள் வெடித்தன அவளைச் சுற்றி.

''அவகிட்டேயிருந்து கடிதம் வந்ததாமே.''

''அதுதான் அவளோட அப்பன் போனானுக்கும்?''

''எவ்வளவு கமுக்கமா அமுக்கிட்டாங்க, விஷயத்தைப் பாரு'' என்றாள் அம்மா, சுண்ணாம்பை விரலில் சுண்டிக் கொண்டு.

''சொல்லேன் சரசு... என்னாச்சு?'' — ரமணி.

''என்ன சொல்றது. அதான் கடிதம் வந்ததாம். 'கடலூர்ல நான் இருக்கேன். என்னைப் பத்திக் கவலைப்பட வேண்டாம் யாரும். என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்' அப்படின்னு எழுதியிருந்தாளாமில்லே!''

நான் சட்டென்று இதிலெல்லாம் ஆர்வமில்லாமல் எழ எத்தனிக்க, அம்மா, ''இரேண்டி,'' என்று கையைப் பிடித்து இழுத்து என்னை உட்கார்த்திக் கொண்டாள்.

அதுசரி, சரசு. எப்படித் தெரியறது இதெல்லாம் உனக்கு?''

சரசு ரமணியைக் கொஞ்சம் விரோதமாய்ப் பார்த்தாள்.

''எனக்குப் பக்கத்து வீடுதானே. அங்கே சின்ன டம்ளர் நகர்த்தினால் கூடத் துல்லியமா கேட்கும். பேச்சுச் சத்தமா கேட்காது?''

''அதுசரி, அப்புறம்?''

''முதல்லே கடிதம் வந்தவுடனே வனஜாவோட அப்பா கடிதாசை எடுத்துக்கிட்டுச் சமையலறைக்கு ஓடினார். 'லக்ஷ்மி, பார்டீ, பொண்ணுகிட்டேயிருந்து கடிதாக வந்திருக்கு'ன்னு சத்தம் கேட்டது. அப்புறம் அவர் கடிதத்தைப் படிக்கப் படிக்க, அவளோட

அம்மா அழ ஆரம்பிச்சுட்டான்னு நினேக்கிறேன்... 'ஷ்... ஷ்... சத்தாதே. அழாதே'ன்னு அவர் எவ்வளவு சமாதானப்படுத்தியும் அந்த அம்மாவால தாங்க முடியலே.'

அம்மா அறைக்குள் திரும்பி, "வசுதா... அந்தப் பேன் சீப்பை எடுத்துக்கிட்டு வாம்மா. அப்படியே குடிக்க ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டா... உம்... சரசு, அப்புறம்?"

"அப்புறம், சப்புறம். கடிதாசு கிடைச்ச சூட்டோட சூடா வனஜாவோட அப்பா கடலூர் புறப்பட்டுப் போனார். தேடிக் கண்டு பிடிச்சு மகளேப் பார்த்தார். அழுதார். 'என்னம்மா இப்படி வீட்டை விட்டு ஓடி வந்து குடும்ப மானத்தைக் கப்பல் ஏத்திட்டியே'ன்னு அழுதார். பொண்ணு மசியலே."

"என்ன சொன்னளாம்?"

"என்ன சொல்லுவா? வர முடியாதுன்னு சொல்லிட்டாளாம்."

"நெஞ்சழுத்தம் ஜாஸ்திடி அவளுக்கு."

"கவனிச்சியா நீ. கொஞ்ச நாட்களாகவே அவள் சரியில்லேதான்.

தண்ணீர் கொண்டு வந்த வசுதாவைத் தன்முன் நகர்த்தி இருத்திக் கொண்டாள் அம்மா. வசுதாவின் கொண்டையை அவிழ்த்து, சிக்கெடுத்துக் கொண்டு பேசினள்.

"எல்லாம் வயசுதான் காரணம் — காதல், கத்தரிக்காய்னுட்டு! தொடைல பழுக்கற மாதிரி இரும்பால இழுத்தால் காதல் வருமா? அடுத்தவன் கூட ஓடச் சொல்லுமா? எங்க காலத்துல இதெல்லாம் நடக்குமா...? யோசிக்கக் கூட நடுங்குமே! இப்ப என்னடான்னு...? சினிமாவுக்குக் கிளம்பிப் போற மாதிரியில்ல கிளம்பி ஓடிப் போயிடுதுங்க காதல் கீதல்னுட்டு. தலையைத் தூக்கேன்டீ சனியனே... ஏன் இறுக்கமா இருக்கே, தளர்ந்து போ!"

பேச்சு ஆவேசத்தில் பாதிக்கப்பட்டு, வசுதா, "ஆ! ஸ்... ஸ்... அம்மா... முடி!" என்றாள்.

"சொல்றது சுலபம்டி காமாட்சி" என்றாள் சாந்தா மாமி. "உனக்கும் ரெண்டு பெண்கள் உண்டு கல்யாண வயசுல. எனக்கும் மூணு இருக்கு."

"ஓஹோ..." என்றாள் அம்மா ஆவேசமாய். "என் பசங்க சொக்கத் தங்கம் மாமி. இது மாதிரி எவன் பின்னலேயோ சவிக் கொண்டு ஓட மனசு வருமா அதுகளுக்கு? ஏன்? என், வளர்ப்பு அப்படி. கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிச்சு விட்டுக் கொடுக்கிற நேரத்தில் விட்டுக் கொடுத்தால் எந்தக் குழந்தைகள் கெட்டுப் போகும் சொல்லுங்கோ...?"

"அதுக்குச் சொல்லலே காமாட்சி" என்று மாமி இழுத்தாள்.

"என் பசங்க குழந்தைகள் இல்லே மாமி. இதோ, பெரியவ உஷா பேங்க்ல உத்தியோகம். கை நிறையச் சம்பளம். ஒரு நல்ல வரன் கிடைச்சா விஷயம் முடிஞ்சுடும். ரெண்டாவது வசுதா. பி.காம். ரெண்டாவது வருஷம். இன்னும் ஒரு வருஷத்துல இவளுக்கும் உத்தியோகம். நீங்க சொல்லுங்க மாமி. இவை ஓடிப் போகுமா? கட்டுப் போட்டாலும் ஓடத் தோணுது. பின்கட்டுல போய் யாருக்கும் தெரியாம ஏதாவது விஷத்தைக் குடிச்சுட்டுச் செத்துடறது ஓடிப் போறதைவிட உத்தமம்."

'விசுக் விசுக்' என்று அம்மா மீண்டும் சிக்கெடுக்க, மறுபடி பேச்சு சுவாரசியத்தில் பாதிக்கப்பட்டு, "ஸ்... முடிம்மா! மெது வாத்தான் சீவேன்!" என்றாள் வசுதா கொஞ்சம் ஆத்திரமாய்.

"வனஜாவைப் பத்தி நீ என்னக்கா நினேக்கறே?"

ஏதோ சிந்தனையில் அவளுடன் நடந்து கொண்டிருந்த நான் சுண்டி இழுக்கப்பட்டேன்.

"இப்ப அவளேப் பற்றி என்னடி பேச்சு?"

"இல்லே. அவ செய்தது சரின்னு நினேக்கிறியா?"

"தெரியலே வசுதா. எது நல்லது, எது கெட்டது, எது சரி, எது தவறு என்பதெல்

பிரசன்னா





''கொலே, கொள்ளே, கற்பழிப்பு, கள்ளச் சாராயம் இதெல்லாம் இல்லாத நல்ல 'ஊருக்கு வந்த மாற்றல் உத்தரவை, வேண்டாம் என்று சொல்லிட்டீராமே, ஏன்....?''

''வெறும் சம்பளத்தை மட்டும் வெச்சுக் காலம் தள்ள என்ஞலே முடியாது சார்.''

— சித்தமல்லி ஜெகந்நாதன்

ஜெனட் பிரவுன் எனும் பெண்மணி பிரிட்டிஷ் பிரதமர் தாட்சரைப் போல 'மிமிக்ரி' செய்வதில் வல்லவர். பி.பி.ஸி.காரர்கள் இவருக்கு மேக்கப் போட்டு தாட்சராகவே நடமாட விட்டு விடுவார்கள்! ஜெனட் ஒருநாள் பிரதமர் இல்லத்திற்கு விஜயம் செய்தார். பிரதமரைச் சந்தித்துத் தமது அன்பளிப்பாகத் தம்மைப் பற்றிய ஒரு புத்தகத்தைப் பரிசளித்தார். புத்தகத்தின் பெயர்: **'Prime Mimicher'**.

ஆதாரம்: போல்டு இந்தியா

தகவல்: இசை முத்து

''உங்க ஸ்டாலிலே சாம்பார் சாதம் தயிர் சாதம் தவிர இன்னெரு சாதமும் போட்டால் நல்லாயிருக்கும்னு நினேக்கிறேம்...''

''அப்படீங்களா! என்ன சாதம் போடலாம் சுரீங்க?''

''கல்லில்லா சாதம்!''

— பெ. கலாசாமி



லாம் அவங்கவங்க எடுக்க வேண்டிய முடிவு. மனசாட்சியின் உறுத்தல் இல்லாமல் யாரும் எந்தத் தவறையும் செய்யறதில்லே. அந்த முடிவுக்கு முன்னுல் அவனுக்குள் ஒரு போராட்டமே நடந்திருக்கணும்.''

''எல்லாரும் திட்டறுங்களே... அப்போ, அவள் செய்தது தப்புதான்னு நினேக்கத் தோண்றது!''

''நாலு பேர் சொல்றதை வைத்து ஒரு முடிவுக்கும் வரக் கூடாது வசுதா. நாக்குக்கு நரம்பு இல்லே.''

''அவ அம்மா அழுததைப் பார்த்தியோ நீ? ஒருத்தி வீட்டை விட்டுத் தன் சொந்த வாழ்க்கையை அமைச்சுக்கப் போறதால இத்தனே வேதனே மிஞ்சுமா என்ன?''

''வசுதா, சிலரோட சந்தோஷங்கள்னுல சில பேருக்கு வேறுவிதமான பாதிப்பு இருக்கும். 'மகள் போகக் கூடாது' என்பது அம்மாவின் சுயநலம். யாருடைய பாதிப்பையும் ஏற்காமல் ஓடிப்போக நினேத்தது மகளின் சுயநலம். எளியாரை வலியார் வீழ்த்துவது போல, ஒரு சுயநலம் மற்றெரு சுயநலத்தைக் கொன்று போடுகிறது. இதில் அழுகையும், வேதனேயும் அன்பின் ஆழத்தைப் பொறுத்தது.''

''யப்பா'' என்ருள் வசுதா.

''ஒண்ணு மட்டும் சொல்வேன் வசுதா. கோழைகள் காதலிக்கக் கூடாது.''

இரண்டு நாட்களுக்குப் பின் ஒரு ராத்திரி, சுமார் ஒரு மணி இருக்கும்.

''உஷா... உஷா.,.. எழுந்திரு'' என்று அம்மா என்னே உலுக்கிக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா?'' என்றேன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து.

''வசுதா... வசுதாவுக்கு...''

''என்னம்மா? என்னுச்சு சொல்லு!''

''பாத்ரூம்ல வாந்தியா எடுக்கிருடி. கேட்டால் என்னன்னு சொல்ல மாட்டேங்கிருள். மயங்கி மயங்கி விழுகிருள்!''

பாத்ரூமின் மொஸைக் தரையில் வசுதா பச்சை வாந்திக்கு நடுவே விழுந்து புரண்டு துடித்துக் கொண்டிருந்தாள்.

நெஞ்சுத் துடிப்பை யாரோ பிசைந்து அழுத்தி நிறுத்த முயற்சி செய்வது போல் திணறிப் போனேன் ஒரு கணம். மறுகணம், ''வசு'' என்று அலறிப் பாய்ந்து அவளேத் தூக்கிக் கிடத்திக் கொண்டேன்.

''அம்மா... அப்பாவைக் கூப்பிடு...''

அரவம் கேட்டு அப்பா கண்ணுடி மாட்டிக் கொண்டு வந்து பார்த்துவிட்டு விக்கித்துச் சிலேயாய் நின்ருர்.

''என்னப்பா நிக்கறீங்க. ஓடிப் போய் நீலகண்டன் தெருவில் டாக்டர் சங்கரன் வீடு இருக்கு... கூட்டிக்கிட்டு வாங்க...''

''அக்கா...'' என்ருள் வசுதா. குரல் ஹீனமாய் வந்தது. மூச்சு இழை இழையாய்... சீராக வராமல்...

''என்ன சாப்பிட்டே சொல்லுடி. எதைத் தின்னுத் தொலேச்சே?''

''அக்கா... என்னே மன்னிச்சுடு ...க்கா!''

"ஏம்மா, ஏன்? என்ன செஞ்சே சொல்லு. என்ன தப்புப் பண்ணினே!" கடவுளே... பகவானே — என்று வேண்டுவதைத் தவிர வார்த்தைகளே எழவில்லை எனக்குள். கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது.

"காத... லிக்கிறேன் இல்லையா, அதனால் அவன்..."

இடியாய் இறங்கின வார்த்தைகள்.

"காதலிக்கிறயா! அடிப்பாவி! யாரம்மா அது? என்ன செய்தான்?" நான் மௌனமாய்க் கேட்டதை அம்மா அதிர்ந்து போய்க் கத்திக் கேட்டாள்.

"ஓடிப் போயிடலாம்னு சொன்...னான்... பயம்... வனஜா மாதிரி கெட்டப் பேர்... வ...துட்டா!"

"பேசாதே வசுதா... கண்ணைத் திற. என்னைப் பாரும்மா."

"அடிப்பாவி மகளே... இந்தச் சிறுக்கி சொன்னேன்னு விஷம் குடிச்சே நீ... இதைவிட அவனைக் கூட்டிக்கிட்டு ஓடியிருக்கலாமேடி நீ... உயிரோட நீயாவது மிஞ்சியிருப்பியே... வசு... வசும்மா... வசு!" — என்று அம்மா அலறினாள்.

நடந்ததை ஏற்க முடியாமல் நான் விக்கித்துப் போய் உட்கார்ந்திருக்க, அம்மா தாங்க மாட்டாமல் சிறுகுழந்தையாய்த் தேம்பிக் கொண்டிருக்க, டாக்டர் வருவதற்குச் சொற்ப நேரத்திற்கு முன்புதான் வசுதா, என்னருமைத் தங்கை, என் கைகளில் இறந்து போனாள்.

ஆயிற்று.

வசுதா இறந்து போய் நான்கு மாதங்கள் ஆகின்றன. ஆனாலும் வீட்டில் இன்னும் அவள் ஏற்படுத்திவிட்டுப் போன மௌனமும் புழுக்கமும் தளரவில்லை.

பி. எம். ரிப்போர்ட்டில் வசுதா 'காப்பர் ஸல்பேட்' தின்று இறந்துபோனதாய்த் தெரிய வந்தது. வசுதாவைக் கூடத்தில் கிடத்தியிருந்த சொற்ப நேரமும் ரொம்ப வேதனையானது. வனஜா ஓடிப் போகாமல், தன் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றத் தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும் என்று அன்றொரு நாள் பேசிய எங்கள் வீட்டுத் திண்ணை மாநாட்டின் அங்கத்தினர்கள் எல்லாம் 'குடும்ப மானம் போனாலும் பரவாயில்லை என்று வசுதா ஓடிப் போயிருக்கலாம் என்று புது அபிப்பிராயங்கள் சொன்னதை நான் ஆச்சரியமாய்ப் பார்த்தேன்.

சொல்லப் போனால் வசுதாவின் மரணம் அம்மாவை ரொம்பத்தான் பாதித்து விட்டிருந்தது. சரியாகச் சாப்பிடாமல், தூக்கமில்லாமல் அழுதழுது இளைத்துப் போனாள். திடீரென நினைத்துக் கொண்டு என்றைக்காவது என்னிடம் சம்பந்தமில்லாமல் "வசுதா சாப்பிட்டாளா...? ட்யூஷன்லேருந்து வந்துட்டாளா...? வசுதா தூங்கிட்டாளா?" என்பாள்.

இதைவிட இன்னொரு விஷயம் என்னை உறுத்திக் கொண்டேயிருக்கிறது.

இப்பொழுதெல்லாம் எங்கள் வீட்டுத் திண்ணை மத்தியான வேளைகளில் காலியாகவே கிடக்கிறது!

4

சங்கரனுக்கு மாயவரம் பிடிக்கவில்லை. பன்றிகளும், மாட்டு வண்டிகளும் மாரைத் திறந்து போட்டு நடக்கும் ஆண்களும் தெருவெல்லாம் வெற்றிலைக் காவித் துப்பலும், கோவில் சுவரோரம் ஒன்றுக்கிருப்பதும், வரப்பு முழுவதும் வழித்துக் கொண்டு உட்காரும் ஜனங்களும், எத்தனை அடித்தாலும் வாங்கிக் கொள்கிற காங்கிரஸ் கட்சியும், முரட்டுக் சுதரும் தெருப் புழுதியில் வைத்து விற்கப்படும் கோதுமை ஹல்வாவும், முந்திரிப் பகோடாவும், வடாமும் அருவருப்பாய் இருந்தன.

சங்கரனுக்கு ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ பிடிக்கும். மில்டன் பிடிக்கும். கீட்ஸ், வோர்ட்ஸ்வொர்த் கவிதைகள் பிடிக்கும். கால்சராய் பிடிக்கும். சாக்ஸ் போடாமல் பூட்ஸும் சட்டையை 'இன்' பண்ணி பெல்ட் போட்டு பேண்ட்டும், பின்னால் கழுத்து வளைவில் கர்ச்சீப்பும் எண்ணெய் தடவிப் படிய வாரிய கிராப்பும் கல்லூரிக்குப் போக என்று வைத்திருந்த ஒரே ஒரு கரு நீல கோட்டும் பிடிக்கும்.

டாஃபடில்ஸ் என்ற பூ பற்றி வோர்ட்ஸ்வொர்த் எழுதியிருக்கிறான். 'ஐ வாண்டர்ட் லோன்லி அஸ் எ க்ளவுட்' என்று ஒரு கவிதை எழுதியிருக்கிறான். மாயவரம் பூச் சந்தையில் எவ்வளவு தேடியும் டாஃபடில்ஸ் கிடைக்கவில்லை. அது பற்றி யாருக்கும் தெரியவில்லை. சங்கரனுக்கு அந்தப் பூ பார்க்க முடியாதது வருத்தமாய் இருந்தது.

அது கிடைக்காதபோது மேகம் மாதிரி அலைந்து திரிய வேண்டும் என்கிற ஆசை பெருகிவிட்டது. வோர்ட்ஸ்வொர்த் பார்த்த அதே சூரியன். அதே நிலா என்று கற்பனை வந்துவிட்டது. இங்கிலாந்தில் சூரியன் எப்படி இருக்கும். நிலா எப்படி. அங்கும் வானம் நீலம்தானா? சாம்பல் என்கிறானே கீட்ஸ். சாம்பல் வானம் எது?

"என்னடா பண்றே?"

"பி.ஏ. பரீட்சை கொடுத்திருக்கேன் சார்."

"மேற்கொண்டு....?"

"தூர தேசம் போய்ப் படிக்கணும்னு ஆசை இருக்கு."

"பனாரஸா?"

பனாரஸ்தான் அப்போது தூரதேசம்.

"இல்லே சார்.... இன்னும் தூரமா.... இங்க்லெண்ட், பின்லாண்ட் போகணும்."

"பிராமணன் கடல் தாண்டிப் போகப் படாது."

"ஏன் சார்?"

"பாவம்."

"ஏன் சார்?"

"ஒழுக்கக் கேடு வரும். ஆசாரம் கெட்டுப் போகும். சந்தி பண்ணுகிறாயா?"

"பண்றேன்...." பொய் சொன்னான். பொத்தி உட்கார்ந்து உள்வாங்கி மூச்சு விட்டுப் பிராண வாயுவைச் சீராக்கி, புத்தியை நிலைப்படுத்த, ப்ரொம் என்ற சங்கொலியும் இருட்டும் கூர்ந்து போக முயன்ற போதெல்லாம் இடறி விட்டிருக்கிறது. 'இரவில் என் இடத்தைச் சுற்றும் ஓநாய்களிடமிருந்து தேவதைகளே என்னைக் காப்பாற்றுங்கள்' என்கிற வாக்கியம் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது.

மாயவரத்தில் ஏது ஓநாய்?

இந்த ஜபம் காட்டில் வசிக்கிறவனுக்கு, நாட்டில் வசிக்கிறவனுக்கல்ல. திடீரென்று ஒருநாள் இருட்டில் ஓநாய் தெரிந்துவிட்டது. அடடே.... மனசுதான் ஓநாய். அலைகிற ஓநாய். பசியுடன் அலைகிற ஓநாய். காமப் பசி பிடித்து அலையும் ஓநாய்.

காமம் நல்லதா, கெட்டதா.....?

அந்த இருபது வயதுக் குழந்தை



சொல்லித் தர ஆள் இல்லாமல் தவித்தது.

காமம் கெட்டதா, நல்லதா....?

கெட்டதுதான்.

அப்போது ஏன் என்னிடம் இருக்கிறது!

பூர்வ ஜென்ம வினை.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

சிவன் காமனை, நெற்றிக் கண் திறந்து நெருப்பில் வதம் பண்ணியது போல் செய்ய வேண்டும்.

என் நெற்றிக் கண் எங்கே?

உள்ளே.... நெற்றிக்கு உள்ளே....

கண் மூடிப் பல மாதங்கள் தேடினான். புரிபடவில்லை.

"பரீட்சை பாஸாயிடுத்து.... இப்ப என்ன

பண்றே?"

"சும்மா இருக்கேன் மாமா."

"சகோதரிகளுக்குக் கல்யாணம் ஆச் சோன்னே...."

"நாலு பேருக்கும் ஆயிடுத்து."

"என்ன கேட்பார் உங்கப்பா?"

"அவரைத்தான் கேட்கணும்."

"உத்தேசமா நீ சொல்லேன். என்ன வேணும் உனக்கு?"

"கீட்ஸ், மில்டன் தெரிஞ்ச பொண்ணு வேணும்."

"போடா பேக்கு" கேட்டவர் துண்டை உதறி அவமானப்படுத்தினார்.

அவன் பெண்ணைப் பார்க்க மறுத்துவிட்டான்.



அப்பா அவனை லட்சியமே செய்யவில்லை. போய் நிச்சயம் செய்து வந்துவிட்டார். கத்தினான். புத்தகங்களைக் கிழித்துப் போட்டான்.

"நான் பண்ணி வச்ச கல்யாணம் ஒண்ணு கூட சோடை போனதில்லே. என்னை எதிர்த்தா பேசறே? படவா.... பேசாமல் தாலியைக் கட்டு."

"முடியாது."

"அப்ப வெளியே போடா."

நான்கு கால் சராய்கள், இரண்டு மல் வேட்டி, இரண்டு முழுக்கைச் சட்டை, ஒரு அல்பாகா கோட்டு, மூன்று கர்ச்சீப், எட்டு மரப் பித்தான்கள், பி.ஏ. சர்ட்டிபிகேட் எடுத்து வைத்துக் கொண்டு இரவோடு இரவாகச் சென்னைக்கு ரயிலேறினான். கடுக்கனையும் இடுப்பு வெள்ளிக் கயிற்றையும் விற்றான். எஸ்.எஸ். ரஜுலா ஏறிச் சிங்கப்பூர் போனான்.

"எதுக்குச் சிங்கப்பூர் போறே ஐயர்?"

"தெரியலே ராவுத்தரே."

"வீட்டில் கோவமா?"

"கல்யாணம் பேசறாங்க, ராவுத்தரே!"

"இதுக்கா கோவம்?"

"எனக்கு ஊர் சுத்தணும். ராவுத்தர். மேகம் மாதிரி அலையணும்."

"எதுக்கப்பேன்."

"உலகம் எவ்வளவு பெரிசுன்னு தெரிஞ்சுக்கணும்."

"தெரிஞ்சு....?"

"அப்புறம் ஊர் வரணும்."

"வந்து....."

"அப்பத்தான் பொருந்தி என்றால் வாழ முடியும் ராவுத்தர். செத்துப் போறதுக்குள்ளே ஊர் உலகம் முழுக்கப் பார்த்துடணும். எல்லா மனுஷங்களையும் ஒருதரமாவது பார்த்துட்டுச் சாகணும். அடால்ஃப் ஹிட்லர் ரூஸ்வெல்ட், முஸோலினி, ஸ்டாலின் எல்லாரையும் பார்க்கணும்."

"காந்தி பாத்திருக்கியா நீ?"

"வந்து.... அவரையும் பார்க்கணும். மாயவரம்தான் உலகம்னு எனக்கு இருக்க முடியலே ராவுத்தர்."

வெற்றிலைக் கொடிக்கால் ராவுத்தருக்கு மலேயா, பினாங்கில் மர வியாபாரம். துணி வியாபாரம். எட்டு மாதம் வெளியூர் பயணம். கப்பல் மேல்தளத்தில் ஸ்நேகிதம்.

"மேல பளபளன்னு தெரியுதே ஒரு நட்சத்திரம்."

"ஆமா.... அது லியஸ். சிவபெருமான்."

"அங்கே போகணும்னு தோணலியா உனக்கு?"

சங்கரன் மௌனமாய் அந்தச் சுடரைப் பார்த்தபடி இருந்தான்.

"அலையறதுக்கு முடிவே கிடையாது ஐயரே. நான் நாலு ஊரு தண்ணி குடிச்சவன். உதட்டுக்குக் கீழே தாடி முளைச்சதுலேர்ந்து ஊர் சுத்தறவன். இப்ப தலை நரைச்சு உதிர்ந்து போச்சு. ஒன்று சொல்றேன். கேட்டுக்க. வீடு சுகம். வீடுதான் சுகம். என் அனுபோகம் இது.

"ஆனால், சங்கர ஐயரே.... வீடு சுகம்கறது வீட்டுக்குள்ளேயே இருக்கிறவனுக்குத் தெரியாது. வெளியே போய் வெந்தும் வேகாததுமா திங்கறவனுக்குத்தான் தெரியும். நாலு பேர் விரட்டி விரட்டி இடம் மாறினவனுக்குத்தான் தெரியும். நாலு வருஷத்துல உனக்கு மாயவரம் வரமாட்டமான்னு ஆயிடும், பாரேன். இரண்டு வார்த்தை தமிழ் கேட்டால் நெஞ்சு பொங்கிடும்.

"இஸ்லாத்துல இருக்கிறவனுக்கு அரபி தான் தாய் பாஷை. கடவுளோட பேசற மொழி. ஆனா என்னோட பேச என் மன

பாலகுமாரன்

சோட பேசத் தமிழ்தான்யா பாஷை. என்னால தமிழை வெறுக்க முடியாது தம்பி. தமிழும் தனிர் வெத்தலையும் மாயவரமும் என் கூடவே இருக்கும்.... ஒரு வாய் வெத்தலை போடறியளா?"

சங்கரன் மறுத்துவிட்டான்.

ராவுத்தர் சிபாரிசால் சிங்கப்பூர் ராபின்ஸ் ஹோட்டலில் வேலை கிடைத்தது. வரவேற்பில் உட்கார்ந்து பேரேட்டில் ஹோட்டலுக்கு வந்தவர் பெயர் குறித்துக் கொள்ளும் வேலை. வெளியேறுபவர்களுக்குக் கணக்குத் தீர்க்கும் வேலை.

சிங்கப்பூர் முழுக்க மாட்சிமை தாங்கிய பிரிட்டிஷ் பேரரசின் ராணுவம் குவிக்கப்பட்டிருந்தது. ஜப்பானுக்குப் பயந்து யுத்த முஸ்தீபுகள் நடந்து கொண்டிருந்தன.

அந்த ஹோட்டலில் ஆறு மாதம் வேலை பார்த்தது ஒரு குட்டி உலகத்தைக் கண்ணாடியில் பார்த்த அனுபவம் ஏற்பட்டது.

சிகரெட் குடிக்கிற பெண்கள். கையைத் தொட்டு நன்றி சொல்கிற பெண்கள். குடித்துவிட்டு மேலே சரியும் பெண்கள் என்று வாய் பிளந்து பார்க்க முடிந்தது.

"குடிக்கக் கற்றுக் கொள். மது இறைவன் கொடுத்த வரம். மறுக்காதே. மதுவுக்கு மரியாதை கொடு. ஒரு பிரசாதம் போல் நிதானமாய் அருந்த உடம்பு பளபளப்பாகும். மனசு வீர்யம் கொள்ளும். உன்னுடன் நீ பேசுவது, உனக்குப் புலப்படும். குடிப்பது தவறல்ல. ஆனால் அது உன்னைக் குடிக்கும்படி விடாதே!"

பிரிட்டிஷ் சோல்ஜர் சொல்லிக் கொடுத்தான்.

"இதுவரை பெண்களைத் தொட்டதேயில்லையா... எந்தப் பெண்ணையுமா? உண்மையாகவா.... என் தலையில் அடித்துச் சத்தியம் செய்வாயா — இந்தியனே...." பினாங்குப் பெண் அதிசயப்பட்டாள். அவளை அழைத்துக் கொண்டு வந்தவன் அதிகக் குடியால் ஹோட்டல் அறையில் குப்புற விழுந்து கிடந்தான்.

"எதனால் இந்த வைராக்கியம்?"

"விலை மாதரோடு கூடுவது பாபம்."

"நான் விலை மாது என்று யார் சொன்னார்கள் உனக்கு?"

"எதற்கு இந்த நடுநிசியில் ஹோட்டலில் இருக்கிறீர்கள்?"

"பசி தெரியுமா உனக்கு?"

"விரதமிருக்கும்போது அனுபவித்திருக்கிறேன்."

"வேண்டுதலுக்கு வேதனை அனுபவிப்பதுதான் விரதம். ஒன்று வேண்டி மற்றது துறப்பது எளிது. பசி திணிக்கப்பட்டிருக்கிறதா உன் மீது?"

"இல்லை."

"எனக்குத் திணிக்கப்பட்டது. என் குடும்பத்தின் மீது திணிக்கப்பட்டது."

"கூலித் தொழில் செய்யலாமே."

"போதாது. பசி தீராது."

"சொகுசுக்கு ஆசைப்பட்டு விபசாரியானாய்."

"உடையைப் பார்த்துவிட்டுச் சொல்கிறாயா? இது தொழிலுக்குப் போட்டுக் கொண்ட உடை. வேஷம். உண்மையைத் தெரிந்து கொள்ள என் வீட்டுக்கு வா."

பௌத்தர்கள். ஓலைக் குடிசையும் மூங்கில் தடுக்கும் மரக் கூஜாவும், மண் சட்டியும் சிரங்கும் சொறியுமாய் இருந்தது வீடு.

"வீட்டுக்கே ஆள் அழைத்து வந்து விட்டாயாடி நாயே!" அவள் அம்மா காறி உமிழ்ந்தாள். விவரம் சொன்னதும் வரவேற்றாள். கஞ்சா குடித்து நெஞ்சு வறண்ட தகப்பன். தறுதலை சகோதரர்கள்.

"பிரான்ஸில், ஆஸ்திரியாவில், போலந்தில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. நாஜிப் படைகள் முன்னேறுகின்றன. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் பேரரசை சிதற அடிக்க ஹிட்லர் கிளம்பிவிட்டான். மேற்கே ஜெர்மனி, கிழக்கே ஜப்பான். இடுக்கிப் போட்டு ஆங்கிலேயர்களைத் தாக்குகிறார்கள். பிரிட்டிஷாருக்கு வாழ்வா சாவா பிரச்னை. தங்கள் காலனி ஆதிக்க எல்லாப் பொருள்களும் யுத்தத்துக்கு வேண்டும். உடை, உணவு, இரும்பு எல்லாம் வேண்டும். கூடுதல் வரி, கூலிப் படை என்று யுத்தத்துக்குப் பிடுங்கிறார்கள். என் குடும்பம் சிதறியது. விவசாயம் செய்ய முடியாது. வியாபாரம் லாபமில்லை. விபசாரம்தான் வழி என்று வந்தேன்.

"பிரிட்டிஷ்காரனுக்குப் பேராசை. ஹிட்லருக்கு அதைவிடப் பேராசை. உன் வோர்ட்ஸ் வொர்த் ஆங்கிலேயனுக்கே மறந்துவிட்டது. கவிதைகள் கேட்க ரேடியோ இல்லை. அது எப்போதும் சர்ச்சில் பேச்சை ஒலி பரப்புகிறது. உன் ஹோட்டலில் உட்கார்ந்து உலகம் பார்க்காதே. சிங்கப்பூர் அழிவைப் பார். தெருக்களில் பார். கள்ளச் சாராயம், விபசாரம், பண வீக்கம், கொள்ளை, கொலை என்று ஜனங்கள் அலைவதைப் பார்."

இன்னொரு பலகணி திறந்தது. ஹிட்லர் பற்றி உலகம் கவலை கொண்டது புரிந்தது. பினாங்கு பெண் அரசியல் பேசினாள். கவிதைகள் பாடினாள். கோதுமைப் பொங்கலும், ரொட்டி உப்புமாவும் கொண்டு வந்து கொடுத்தாள். ஹோட்டலுக்கு வந்த ஆளில் பணப் பசை உள்ள ஆளை அடையாளம் காட்டச் சொன்னாள்.

"அமெரிக்கன் வந்தால் எனக்கு உடனே தகவல் அனுப்பு. பிரிட்டிஷ் ஸோல்ஜரை விட அமெரிக்கன் இரக்கமுள்ளவன். அழுதால் கூடக் காசு கொடுப்பவன்." காரணம் சொன்னாள்.

சங்கரன் அவளுக்கு உதவி செய்தான். கமிஷன் தரட்டுமா என்று கேட்டபோது கை கூப்பினான்.

ஆள் யாரும் தகையாதபோது ஹோட்டல் லாபியில் பார் ஜன்னலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். விடிய விடிய பேசுவார்கள்.

ஹோட்டல் நிர்வாகம் சம்பளம் கொடுக்க முடியாமல் சண்டித்தனம் செய்தது. சம்

ப்ளம் குறைவாக்கிற்று. எதிர்த்தவர்களை விட்டுக்கு அனுப்பியது. ஓர் இந்தியனுக்கு வேலை கொடுத்ததே பெரிது என்று ஏளனம் செய்தது.

அப்போதுதான் ஜெனரல் ப்ராண்டண்டை பிளுங்கு பெண், சங்கரனுக்கு அறிமுகம் செய்தாள். அமெரிக்கத் தரைப் படையைச் சேர்ந்தவன். ஜப்பானியனை எதிர்த்துப் போராட யுத்த தளவாடங்கள் பற்றி எடுத்துச் சொல்ல பிரிட்டிஷ் அரசுக்கு உதவி செய்ய வந்த அமெரிக்கன். எட்டு நாட்கள் ரகசிய கூட்டம் ஹோட்டல் மேல் மாடியில் நடந்தது.

அவனைக்கவனிக்கத்தனியே ஆள் போடப்பட்டது. அந்த ஆள் சங்கரன். அமெரிக்கன் ஊருக்குப் போகும்போது டிப்ஸ் தர முயல, சங்கரன் மறுத்துவிட்டான். 'வேறு என்ன வேண்டும்?' என்று கேட்க அவனோடு அவன் உதவியாளாய் வருவதாக விருப்பம் தெரிவித்தான்.

''யுத்தம் நடக்கிறது ஷாங்கி. நான் எந்த ஊரில் எப்போது இருப்பேன் என்று எனக்கே தெரியாது.''

''நானும் வருகிறேன்.''

''எதற்கு?''

''எனக்கு உலகம் சுற்ற வேண்டும்.''

''நடுவே விட மாட்டேன்.''

''நானும் போக மாட்டேன்!''

''வெரிகுட். வா.'' விஸா, பாஸ்போர்ட் எதுவும் தேவையில்லை. எடுபிடி வேலைக்கு ஆள் கிடைக்காத நேரம். நம்பிக்கையான வேலையாட்கள் அரிதான யுத்த காலம். பெர்ஸனல் அஸிஸ்டெண்ட் - ஜெனரல் ப்ராண்டண்ட் போட்டோ ஒட்டி, அங்க அடையாளம் தெரிவித்து, அடையாளக் கார்டு போதும். அதற்கு ஏக மதிப்பு இருந்தது.

சங்கரன் பேர்ள் ஹார்பரில் வந்து இறங்கினான்.

அவன் பேர்ள் ஹார்பரில் வந்து இறங்கிய ஏழாவது மாதம் பேர்ள் ஹார்பர் சுக்குச் சுக்காய்ச் சிதறிற்று. கண்ணெதிரே விரல் சொடுக்கும் நேரத்தில் நூற்றுக்கணக்கான உயிர்கள் மடியும் கோரம் புரிந்தது. எந்த முன்னறிவிப்பும் இன்றி இருநூறு விமானப் பருந்துகள் சிவிலியன்ஸ் உட்பட தாக்கிக் கொன்ற வேதனை துக்கம் கொடுத்தது - துக்கம் கோபமாயிற்று. சங்கரன் 'எனக்கு ஒரு துப்பாக்கிக் கொடுங்கள்' என்று ஜெனரலிடம் கதறினான்.

அமெரிக்கா ஜப்பானுடன், அதன் தோழர்களுடன் போர் என்று அறிவித்தது. சங்கரன் பேர்ள் ஹார்பரிலிருந்து அந்த அமெரிக்க ஜெனரலுடன் வாஷிங்டனுக்குப் போனான். யுத்தக் காற்று அவனைப் பல இடங்களுக்குத் தூக்கிப் போயிற்று.

(தொடரும்)

நடைமுறையில் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிற சரித்திரத்தைப் பார்த்து யாராவது எந்தப் படிப்பினையாவது பெறுகிறார்களா என்று பார்த்தால், அதுதான் இல்லை! செங்கிஸ்கான், தைமூர், கஜினி, மாலிக்காஃபூர் போலப் பல பேர் அவ்வப்போது தோன்றித் தேசங்களைச் சூறையாடி ஹதாஹதம் செய்திருக்கிறார்கள் என்று சரித்திரத்திலிருந்து தெரிகிறது. தெரிந்து கொண்டதால் மட்டும் இப்படிப்பட்ட வெறிப் போக்குகளை நிறுத்த முடிந்திருக்கிறதா என்ன? இவர்கள் மாதிரியே ஒரு ஹிட்லரும் முஸோலினியும் வந்து மறுபடி ஹதாஹதம் செய்கிறார்கள். இன்னும் கிட்டத்தில் பிரத்யக்ஷமாகவே பார்க்கிறோம் — ஒரு லஞ்சம், 'கரப்ஷன்' வேண்டியவர்களுக்குப் பட்சபாதம் காட்டுவது, வேலை கொடுப்பது என்றெல்லாம் ஒரு ராஜாங்கத்தார் பண்ணினால் அதற்கு ஜனங்களின் ஆதரவுபோய் விடுகிறது என்று எலெக்ஷனில் தெரிகிறது. அப்புறம் வேறு சிலர் ராஜாங்கத்தை அமைக்கிறார்கள். ஆனால் படிப்பினை ஒன்றும் பெற்றதாகத் தெரியக் காணோம். அதே தோஷங்களை இவர்களும் செய்ததாக ஏற்பட்டு, அடுத்த எலெக்ஷனில் அதே கதி இவர்களுக்கும் உண்டாகிறது. ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே இப்படி ஏற்படுகிறது. ஆகையால் History repeats itself என்று தெரிந்து கொண்டாலும் அதிலிருந்து நல்ல பாடம் எதையும் நாம் கற்றுக் கொண்டு விடுவதில்லை என்று தெரிகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



தீரர் சத்தியமூர்த்தியின் நூறாவது பிறந்த நாள், வரும் ஆகஸ்டு மாதத்தில் சிறப்பாக நாடெங்கும் கொண்டாடப்பட விருக்கிறது. அவரைப் பற்றிய சில நினைவுகளை இங்கு கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் டி. செங்கல்வராயன்...



நேசத்தையும் மகள் லக்ஷ்மியையும் விட்டால் சத்தியமூர்த்தி மிக அதிகமாக நேசித்தது சங்கீதத்தை.

தனி நபர் சத்தியாக்கிரகம் காந்திஜியின் ஆணைப்படி அமைதியான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அன்றைக்குச் சத்தியமூர்த்தியின் முறை. தடையை மீறி அவர் சிறைசெல்லப் போகிறார். சத்தியமூர்த்தியின் தியாகராய நகர் இல்லத்தில் எல்லோருமாய் அவரை வழியனுப்பக் கூடியிருந்தார்கள். புறப்பட ஒரு மணி நேரமே பாக்கி இருந்தது. சத்தியமூர்த்தி என்ன செய்தார் தெரியுமா? வழியனுப்ப வந்திருந்தவர்களில் ஒருவரான வயலின் மேதை பாப்பா வெங்கட்ராமய்யாவைப் பார்த்தார். ''மறுபடி உங்கள் இசையை எப்போது கேட்கப் போகிறேனோ? சற்று நேரம் வாசிக்கலாமே'' என்றார். இசையில் மெய்மறந்து போனார்!

''சுதந்திரத்தை நாம் பாடிக் கொண்டே பெறுவோம்!'' என்பது சத்தியமூர்த்தியின் உறுதி. இதிலிருந்து அவருக்கு இசையிலிருந்த நாட்டம், கடமைகளைச் செய்வதில் அவரது அணுகுமுறை ஆகிய இரண்டுமே புலப்படும்.

துளைக் கேள்விகள் கேட்டுத் துளைத்து எடுப்பதில் சத்தியமூர்த்தி மகாநிபுணர்.

''ஆட்டாவா ஒப்பந்தம்'' பற்றி பார்லிமெண்டில் பேச வேண்டும். புலாபாய் தேசாய் இவரை அந்தப் பொறுப்பை ஏற்கக் கேட்டுக் கொண்டார். சத்தியமூர்த்தி ஒப்புக் கொண்டார். எதையும் அரைகுறையாகச் செய்யும் பழக்கம் சத்தியமூர்த்தியிடம் கிடையாது. விஷயஞானத்துடன் பேச வேண்டுமே? அப்போது சென்னையில் பிரபலமாக விளங்கிய பொருளாதார நிபுணர்கள் நால்வரின் பெயரைக் குறிப்பிட்டு, ''அவர்களை இந்த ஏழைப் பிராமணன் வீட்டில் காலைச் சிற்றுண்டிக்கு வரச் சொல்லி அழைப்புக் கொடு'' என்றார்.

''அது என்ன ஏழைப் பிராமணன் விருந்து?'' என்று கேட்டு வைத்தேன்.

ஆமாம்! இங்கே என்ன, இட்டிலியும், தோசையும்தானே கிடைக்கும்!'' என்று சொல்லிச் சிரித்தார்.

சத்தியமூர்த்தியின் கட்டளையை நிறைவேற்றினேன். அழைக்கப்பட்ட நால்வரும் விளுடி பிசகாமல் வந்தார்கள். பி. ஜே. தாமஸ், ஜான் மத்தாய், பி. வி. நாராயணய்யங்கார், எல். என். கோவிந்தராவ். சிற்றுண்டியோடு ஆட்டாவா ஒப்பந்தம் பற்றியும் பேச்சு வளர்ந்தது. சாதக பாதகங்களைப் பற்றி விரிவாக அவர்கள் கருத்துச் சொன்னார்கள்.

பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியை

ஆளும் தரப்பினர் அவரை 'சப்ளிமெண்டரி சத்தியமூர்த்தி' என்றே அழைப்பார்கள்!

ஒரு சமயம் ஸர் ஜேம்ஸ் கிரிக் என்பவர் சத்தியமூர்த்தியை மட்டம் தட்டுவதாக நினைத்துக்கொண்டு, ''மிஸ்டர் சத்தியமூர்த்தி மிகவும் விலையுயர்ந்தவர். அவர் கேட்கிற ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்க அரசுக்கு எழுநூற்று இருபத்தைந்து ரூபாய் செலவாகிறது.'' என்றார்.

சத்தியமூர்த்தி விடுவாரா? ''அதாவது எழுநூற்றைம்பது ரூபாய் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகி விடாமல் இந்தியாவுக்கே திரும்பக் கிடைக்கிறது என்கிறீர்கள்! அப்படியானால் நான் இன்னும் நிறையக் கேள்விகள் கேட்க வேண்டியதுதான்!'' என்றார்.

சில தினங்கள் சென்று, பார்லிமெண்டில் பேச்சைத் தொடங்கினார் சத்தியமூர்த்தி. சர்க்கார் தரப்புக்கு ஆதரவான சமாசாரங்களாகச் சொல்லிப் பேசிக் கொண்டே போனார். அரசுத் தரப்பு அங்கத்தினரிடையே ஒரே வியப்பு! கைத்தட்டல்! புலாபாய் தேசாய் உள்படக் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவருக்கும் முகத்தில் ஈயாடவில்லை.

சிறிது நேரம் இப்படிப் பேசிய பிறகு சத்தியமூர்த்தி, ''இவ்வளவுதான்... இதற்கு மேல் சாதகமாக எதுவுமே இல்லை...'' என்று கூறிவிட்டு, ''இனிப் பாதகங்களைப் பார்க்கலாம்'' என்று ஆரம்பித்தார். பாதகங்களை ஒவ்வொன்றாக அடுக்கி மசோதாவை எதிர்த்து முழங்கினார். எதிரணிக்காரர்கள்

சொல்லக் கூடிய வாதங்களையும் தாமே சொல்லி அதற்கு மறுப்பும் கூறி அவர் களைச் செயலிழந்து போகச் செய்வதுஎன்பது சாமானியமான ஆற்றல் அல்ல. சத்தியமூர்த்தி அதில் நிகரற்றவர்.

காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக ஆனபோது ஒரு வேடிக்கை நடந்தது. காமராஜ் தம்மிடம் தயாரானவர் என்பதைக் கூடப் பொருட்படுத்தாமல், தாமே காங்கிரஸின் காரியதரிசியாக இருப்பதாகக் கூறிவிட்டார் சத்தியமூர்த்தி.

காரியதரிசி என்கிற முறையில் ஒரு கடிதம் எழுதி, 'தலைவர் காமராஜின்' கையெழுத்துக்கு அனுப்பினார். நான்தான் அதைக் கொண்டு போனேன்.

காமராஜ் பதறினார். "இது என்னய்யா வம்பாப் போச்சு. அவர் எழுதி அதுல நான் கையெழுத்துப் போடறதா?" என்று யோசிக்கலானார்.

"இப்படிச் செய்யலாமே! இனிமேல் மாமூலான கடிதங்களில் காரியதரிசியே கையெழுத்துப் போட்டாப் போதும்னு காரியக் கமிட்டியிலே தீர்மானம் போட்டுடுவோம்..." என்றேன் நான். அப்படியே தீர்மானம் நிறைவேறியது.

ஜார்ஜ் டவுனில் சினிமா சென்ட்ரல் என்று இருந்தது. அங்கே நடைபெற்ற கூட்டம். ஆயிரக்கணக்கில் ஜனங்கள். சத்தியமூர்த்தியின் ஏற்பாட்டில் சரோஜினி நாயுடு, ராஜாஜி, நாகேசுவரராவ் பந்துலு, எல்லாரும் பேசிய பிறகு சத்தியமூர்த்தியும் பேசினார். பிறகு என்னைக் கூப்பிட்டு "வோட் ஆஃப் தாங்க்ஸ், நீ சொல்லு..." என்றார்.

குழுக்களாகப் பிரிந்து கூட்டங்களில் பேசி வந்தோம். கங்கை கொண்டான் மண்டபத்தில் கடைசிக் கூட்டத்தில் இரு குழுவினரும் சேர்ந்து கொள்வது என்று ஏற்பாடு. "நான் ஒன்பது மணிக்கே வந்து விடுவேன்" என்று சொல்லியிருந்தார் சத்தியமூர்த்தி. நான் பேசிக் கொண்டே இருந்தேன். மணி, ஒன்பது, ஒன்பதரை, பத்து கூட ஆகிவிட்டது. அப்புறம்தான் வந்தார்.

"என்ன இப்படிப் பண்ணிவிட்டீர்களே? நீங்கள் வரும் வரை என் பேச்சை வளர்த்தும்படியாகி விட்டதே" என்றேன்.

"நான் ஒன்பதுக்கு முன்னாலேயே வந்து விட்டேன். நீ எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்கிறேன்னு பார்க்கணும்னு அங்கே ஓர் ஓரமா உட்கார்ந்திருந்தேன்" என்று சொல்லி விட்டு, "இப்போ நீ தேறிட்டே! பேச்சாளன் என்று பட்டம் பெறலாம்" என்றார்!

உலுக்கியவர்!



• தீரர் சத்தியமூர்த்தி

எனக்கு அதுவரை மேடையில் பேசிப் பழக்கமே இல்லை.

ஆனாலும் ஐந்து நிமிட நன்றி உரையை இருபது நிமிஷமாக இழுத்து முழக்கி விட்டேன்.

கூட்டம் முடிந்து எல்லோரும் புறப்பட்ட போது, என்னை அழைத்துத் தோள்மேல் உரிமையோடு கைபோட்டு மறுநாள் காலையே என்னை அவருக்கு உதவியாளராக வேலைக்கு வரச் சொல்லிவிட்டார். தினமும் காலையில் ஏழு மணிக்குப் போய்விட வேண்டும். அவர் சொல்கிற வரை பின்னோடு இருந்தாக வேண்டும்.

தேர்தல் பிரசாரத்துக்காக இரண்டு

பார்லிமெண்டில் கேள்வி நேரம். சபாநாயகர், சத்தியமூர்த்தியைக் கேள்வி கேட்க அழைத்துவிட்டார். கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய ஆளும் தரப்பு அங்கத்தினர் அவையில் இல்லை. தமக்குப் பதிலாகக் காரியதரிசியை அனுப்பியிருந்தார்.

எழுத்து மூலமான கேள்வி என்றால் பொறுப்பிலுள்ள அங்கத்தினர் அவையிலிருக்க வேண்டும் என்கிற விதிமுறையை நினைவூட்டினார் சத்தியமூர்த்தி. சபாநாயகருக்கு வேறுவழியில்லாமல் போனது. அங்கத்தினர் அழைக்கப்பட்டார். வேண்டா வெறுப்பாக அவைக்கு வந்தார் அந்த ஆளும் தரப்பு அங்கத்தினர். அலட்சியமாகக் கால்

மேல் காலைப் போட்டுக் கொண்டு அமர்ந்தார். சபாநாயகர், 'கேள்வி கேட்கலாம்' என்று சொன்னார்.

சத்தியமூர்த்தி கம்பீரமாக எழுந்து, "இப்போது கனம் அங்கத்தினர் அவைக்கு வந்து விட்டார். அவரை வரவழைத்து விட்டேன். எனக்கு அதுவே போதும். நான் கேள்வி கேட்கப் போவதில்லை!" என்றார்

ஆணவக்கார அங்கத்தினரின் முகம் சுண்டிப் போனது. எதிர்த் தரப்பினரின் ஆனந்தம் கரைபுரண்டது!

சென்னை நகர வெடிகுண்டுச் சதி வழக்கு என்று ஒன்று நடைபெற்றது. உயர்நீதிமன்றத்தில் காங்கிரஸ்காரர்களுக்காக சத்தியமூர்த்தி வாதாடுகிறார். முன்னுரையாகத் தொடங்கி ஒரு முக்கால் மணி நேரம் பேசிவிட்டார்.

நீதிபதி பொறுமை இன்றி இடைமறித்தார்: "உங்களுக்கு ஒன்றை நினைவூட்டலாமா? கடற்கரை இங்கிருந்து வெகுதூரத்தில் இருக்கிறது..."

காங்கிரஸ் கூட்டங்கள் அப்போது பீச்சில் நடப்பது வழக்கம்தானே! நீதிபதி அதை நினைவூட்டி இது சொற்பொழிவுப் பிரசார மேடை அல்ல என்று சொல்லாமல் சொன்னார்.

சத்தியமூர்த்தி சற்றும் சளைக்காமல், "கனம் நீதிபதி அவர்களுக்கு நான் ஒன்றை நினைவூட்டலாமா? சில நேரங்களில் கடல் கொந்தளித்து ஊருக்குள் வெகுதூரம் வந்து விடுவதுண்டு!" என்று கூறி அதில் ஏகப்பட்ட உள் அர்த்தங்களைப் பொதித்து வைத்தார்!

சென்னை மாகாண மேலவைத் தேர்தல் நடைபெறவிருந்தது. பட்டதாரிகள் தொகுதியில் நிற்க சத்தியமூர்த்தி வேட்பாளராகப் பதிவு செய்திருந்தார்.

அந்த நேரத்தில் ராஜாஜியும் கே. ஸ்ரீனிவாஸனும் வீட்டுக்கு வந்தார்கள்.

"சத்தியமூர்த்தி! காங்கிரஸ் மேலிடம் ராஜாஜி நிற்க வேண்டும் என்று விரும்புகிறது..." என்றார் ஸ்ரீனிவாஸன். மறுபேச்சு இல்லாமல் விலகிக் கொள்வதாகச் சொன்னார் சத்தியமூர்த்தி.

அந்தத் தேர்தலில் நிற்க முடியாமல் போனது அவருக்கு வருத்தம்தான். அதற்காகக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறவில்லை. "எனக்குத் தேர்தல் டிக்கெட்தானே கிடைக்கவில்லை. ஆனால் இருக்கவே இருக்கிறது பிளாட்ஃபாரம் டிக்கெட்..." என்று சொல்லிப் பொதுக்கூட்ட மேடைகளில் முழு மூச்சாகப் பிரசாரம் பண்ணிக் காங்கிரஸின் வெற்றிக்குப் பாடுபட்டார்.

பேட்டி: **சுப்ர பாலன்**



"என்னங்க இது! கம்ப்யூட்டருக்குப் பக்கத்துல ஒரு குட்டி கம்ப்யூட்டர்?"

"தனக்கு ஒரு உதவியாளர் வேணுமின்னு தோணதோணத்தது. அதான்!"

— மணியன் தர்மலிங்கம்.

"ஏதாவது வேலை கொடுங்கள்: தொழிலகத்தின் குப்பைகளை அகற்றும் வேலையாக இருந்தால் கூடப் போதும்" என்று கெஞ்சினான் அந்தச் சிறுவன்.

வாரம் இரண்டரை டாலர் சம்பளத்தில் அவனுக்கு வேலை கொடுத்தார் நிர்வாகி.

அந்தச் சிறுவன்தான் மோட்டார் தொழிலில் கோடி கோடியாய்ப் பணம் சம்பாதித்த ஹென்றி போர்டு!

— எஸ். முகம்மது ஆகப்.





நடிகர்: பழைய பாக்கியைப் பைசல் செய்துட்டீங்கன்னா புதுப் படத்தில் நடிக்க சம்மதிக்கிறேன்!

தயாரிப்பாளர்: நீங்க புதுப் படத்தில் நடிக்கவில்லையென்றால் உங்க பழைய பாக்கியைப் பைசல் செய்ய சம்மதிக்கிறேன்!

— நல்லாலம் காசிதாசன்

சித்திரைப் புத்தாண்டில் வாருங்கள்—
வசந்தகால அன்பளிப்புகளைப் பெறுங்கள்!

இவை எங்களது நன்றிக்கு அடையாளமாகவே அளிக்கிறோம்.

ஸ்ரீராம் அங்கத்தினர்கள், எங்களிடம் உள்ள ஆழ்ந்த நம்பிக்கையின் காரணமாக, தொடர்ந்து ஸ்ரீராம் நிறுவனங்களில் டெபாசிட் செய்து வருகிறார்கள். உங்களது நம்பிக்கையின் அடிப்படையில் ஸ்ரீராம் அகில இந்திய அளவில் வளர்ந்துள்ளது. பம்பாய், டில்லி, கல்கத்தா, அகமதாபாத்... புனா என பல புதிய அலுவலகங்களைத் துவக்கியுள்ளது.

தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாட, மே மாதம் 14ம் தேதி வரை புதிய பல டெபாசிட் திட்டங்களை அளிக்கிறோம்.


பிக்ஸெட் டெபாசிட் மற்றும் சிறப்புத்திட்டம் (குறைந்த பட்சம்-ரூ. 3,000)


டெபாசிட் காலம்	மாதா மாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒருமுறை வட்டி பெற	டெபாசிட் முதிர்வடையும் போது வட்டி பெற
1 ஆண்டு	14.0%	14.5%	15.0%
2 ஆண்டுகள்	14.0%	14.5%	16.5%
3 ஆண்டுகள்	14.0%	15.0%	18.5%

இன்னும் ஒரு சிறப்புத் திட்டம் உங்கள் டெபாசிட் 57 மாதங்களில் இரட்டிப்பாகும்!

அன்பளிப்புகள்:

ரூ. 5,000 அல்லது அதற்கு மேல் பிக்ஸெட் டெபாசிட் செய்தால் தெய்வீக 10 கிராம் வெள்ளிப் பதக்கம் அல்லது "குழந்தைகள் அறிவுக் களஞ்சியம்" **(Children's Encyclopedia of Knowledge)** அன்பளிப்பு.





ரெக்கரிங் டெபாசிட் திட்டம்:

எளிதாக மாதந்தோறும் ரூ *100* வீதம் *36* மாதங்களுக்கு டெபாசிட் செய்தால் முடிவில் ரூ *4494* பெறலாம். இதற்கு அன்பளிப்பு **Macmillan Students Dictionary.**



ரூ. 500 மினி டெபாசிட்:

ரூ. 500 மட்டும் டெபாசிட் செய்தால் போதும். ஒவ்வொரு மாதமும் **அமுதசுரபி** மாத இதழ், மற்றும் **தீபாவளி மலர், வசந்த மலர்** ஆகியவை அன்பளிப்பாகக் கிடைக்கும். அத்துடன் ரூ. 40 மதிப்புள்ள **அமுத மொழி, அமுதநாவல்கள்** ஆகியவையும் அன்பளிப்பாக உடனே அனுப்பி வைக்கப்படும்.



விரைந்து செயல்படுங்கள்! அன்பளிப்புகள் மே மாதம் 14ம் தேதி வரை மட்டுமே!

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

(A unit of, and Agents for, Shriram Group Companies, Madras)

SHRIRAM GROUP COMPANIES MADRAS

● நிர்வாக அலுவலகம்: 54, வடக்கு உஸ்மான் சாலை, சென்னை-17. போன்: 446688/441715 கிளைகள்: சென்னை: ஜார்ஜ் டவுன் ● அடையாறு ● அண்ணா நகர் ● மைலாப்பூர் ● மவுண்ட் ரோடு எக்ஸ்டென்ஷன் கவுண்ட்டர்: ● 78, தெற்கு உஸ்மான் ரோடு. ● 165, கச்சேரி ரோடு. செகந்திராபாத்: 4, சர்தார் படேல் ரோடு, போன்: 75226 நெல்லூர்: 3/9, ஸ்டோன் ஹவுஸ்பேட், போன்: 6210 பெங்களூர்: 142, K.H. ரோடு, போன்: 223637 ● மல்லேஸ்வரம் சர்க்கிள் மைசூர்: 645, சாமராஜா டபிள் ரோடு, போன்: 34766 புது டில்லி: 103, ஸ்கிப்பர் கார்னர், 88, நேரு பிளேஸ், புது டில்லி-19, போன்: 6444150. பம்பாய்: 811, துல்சியானி சேம்பர்.212, நரிமான் பாயிண்ட், பம்பாய்-21, போன்: 241113. கல்கத்தா: 601, சென்டர்பாயிண்ட், 28/2 ஷேக்ஸ்பியர் சரானி, கல்கத்தா-17, போன்: 432725

ADWAVE/SI/3303

ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள், சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.


வேங்கை வாசல்; ஏழைகளின் சொர்க்க வாசல்!



* கால்நடை மருத்துவ மையம்



* செங்கல் சூளை



* எட்டும் உயரத்தில் கரும்பலகை



* டாக்டர் தேவனேசன்

அது ஒரு மழைக்கால மாலை நேரம். ஐந்து மணிக்கெல்லாம் நள்ளிரவைப் போல் மையிருட்டு. எதிரே ஆள் வருவது தெரியாத அளவிற்கு அடைமழை. பேராசிரியர் சந்திரன் தேவனேசனின் வீட்டு வாசற்கதவை யாரோ தட்டினார்கள். பேராசிரியர் வெளியூர் போயிருந்தார். தயக்கத்துடன் கதவைத் திறந்த அவர் மனைவி பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த ஏழைக் குடியானவன் ஒருவன் தொப்பலாக நனைந்துபோய் நிற்பதைப் பார்த்தார். அவன் கன்னத்தில் மழை நீரோடு கண்ணீரும் வழிந்தோடியது. புயலும் மழையும் தன் குடிசை வீட்டின் கூரையைக் காவு கொண்டதைத்துக்கம் பொங்கச் சொன்னான் அவன்.

கணவன் ஊரில் இல்லாததால் ஏதும் செய்ய இயலாத நிலையில் இருந்த அந்த அம்மையார் தமது கால் கொலுசுகளில் ஒன்றைக் கழற்றி அந்தக் குடியானவனிடம் கொடுத்தனுப்பினார்.

பேராசிரியர் ஊர் திரும்பியதும் மனைவியின் ஒரு கால் கொலுசு இல்லாததைக் கவனித்தார், விசாரித்தார்; செய்தி அறிந்ததும் சிந்தனையில் ஆழ்ந்து போனார்... 'ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை ஏழைகள்? எல்லோரும் இந்தக் குடியானவனைப் போல் கூரையிழந்து தவித்திருப்பார்களோ?

அவர்கள் எல்லோருக்குமே இப்படி ஒரு கால் கொலுசை அவிழ்த்துத் தருவதன் மூலமோ வேறு பொருளையோ பணத்தையோ தருவதன் மூலமோ அவர்களுடைய பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியுமா?' மனைவியுடன் தம் சிந்தனைகளைப் பகிர்ந்து

* 22' x 16' வீடு.





* ஜோதி தேவநேசன்

தொண்டார். தாம்பரம், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றியதால் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து கல்லூரியில் வேலை செய்ய வந்த பல ஊழியர்களிடம் அவருக்குப் பழக்கம் இருந்தது. அவர்களுடன் பேசிக் கிராமவாசிகளின் பிரச்னைகளைப் பற்றிக் கேட்டறிந்தார். அக்கிராமங்களுக்கே போய் நேரிலும் பார்க்கலானார்.

விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் சிறு விவசாயிகளுக்கு உபதொழில்கள் மூலம் உபரி வருமானம் கிடைக்கச் செய்தால் தான் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளேனும் பூர்த்தியாகும் என்பதுதான் டாக்டர் தேவனேசன் கண்டறிந்த முடிவு.

கிராமங்களுக்கு அரசாங்கம் பல தன்னிறைவுத் திட்டங்களை வகுத்திருந்தாலும் அவற்றைச் செயல்படுத்துவதில் தாமதமும் மெத்தனமும் இருந்தது. பரம்பரை பரம்பரையாகச் சில கட்டுப்பாடுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பழகிப் போயிருந்த கிராமவாசிகள் கல்வி அறிவு வளர்ச்சி இன்மையால் அவற்றிலிருந்து விடுபட்டு வந்து தங்கள் உரிமைகளைக் கேட்டுப் பெற முன்வரவில்லை.



* துளசி, விஜயாவுடன் குப்பு

அவர்களை மெள்ளத் தட்டியெழுப்பி, தன்னிறைவு நோக்கி நடைபோட உதவும் நோக்கத்தோடு ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள் டாக்டர் தேவனேசன் தம்பதி. ஓர் ஏழை விவசாயியின் வீட்டுக் கூரை பறிபோனதால் எழுந்த சிந்தனைச் சங்கிலியின் முடிவாக இந்த அமைப்பு இருந்ததால் Roofs for the Roofless என்ற பெயரை அதற்கு வைத்தார்கள். உண்மையில் இந்த அமைப்பின் நோக்கம் வீடு கட்டித் தருவதோ, வீடுகட்டப் பொருளாதார உதவி பெற்றுத் தருவதோ அல்ல. கிராமவாசிகளுடன் உரையாடி, கலந்தாலோசித்து, திட்டங்கள் வகுத்து அவற்றை அவர்களை நிறைவேற்றிக் கொள்ளக் கிரியா ஊக்கியாக இருந்து உதவுவதே. இந்தக் குறிக்கோளுடன் வேங்கைவாசல் என்ற கிராமத்தை (பறங்கி மலை பஞ்சாயத்து யூனியன்) முதன் முதலில் அணுகினார்கள்.

வேங்கைவாசல் மக்கள் கறவை மாடுகள் வாங்க விரும்பினார்கள். பெற வழி காட்டியது ரூஃப்ஸ்.

ஸ்ரீனிவாசன் என்ற இளைஞர் 1981 இல் இந்த அமைப்பு ஆரம்பித்தது முதல் முழு ஈடுபாட்டுடன் இதில் பணியாற்றி வருகிறார். வேங்கைவாசலில் சுகாதார மையத்திற்கு அடிக்கல் நாட்ட அப்போதைய தமிழக கவர்னரின் மனைவி சாந்தி சாதிக் அலியை அழைத்திருந்தது ரூஃப்ஸ். அந்த விழாவில் ஸ்ரீனிவாசனைப் பேசச் சொல்லியிருந்தார் டாக்டர் தேவனேசன். கவர்னர் மனைவியின் முன்னிலையில் கிராமவாசிகள் தங்களுக்கு முறையாகச் சேர வேண்டிய கடனுதவியைப் பெறவே எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதைப் பற்றி விரிவாகப் பேசினார் ஸ்ரீனிவாசன். 'யார் யாரிடம் லஞ்சம் கேட்கப்பட்டதோ அவர்களெல்லாம் கை உயர்த்துங்கள்' என்றார். கூடியிருந்த அவ்வளவு கிராமவாசிகளும் கைதூக்கினார்கள்!

மறுநாளே வேங்கைவாசல் மீது விசேஷ கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டனர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள். உடைந்த பம்ப்செட்டு உடனே ரிப்பேர் செய்யப்பட்டது. இந்தச் சம்பவம், அக்கிராம மக்களுக்குத் தங்கள் உரிமைகளைப் போராடிப் பெறும் துணிவைத் தந்தது.



* கஸ்தூரி

* வெங்கடேசன்





* டாக்டர் திருச்செல்வம்



ால்நடைத் தீவனம் வளர்க்கப்படும் பண்ணை

இ. ஓ. பி. யில் கடனுதவி பெற்று கறவை மாடுகள் வாங்கிய நாற்பது விவசாயிகள், கூட்டுறவு முறையில் பால்வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடைந்த நிலையில் கறவைகளுக்குத் தீவனம் தேவைப்பட்டது. கிராமத்துப் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஊர்ப் பிரமுகரை அந்நிலத்தைக் கால்நடைத் தீவனம் பயிரிடுவதற்குத் தரும்படி கேட்ட போது அவர் மறுத்துவிட்டார். ஒருநாள் அதிகாலையில் துணிந்து அந்நிலத்தை உழுது விட்டனர் கிராமவாசிகள். வெங்கடேசன் என்ற இளைஞர் முன்நடத்திச் செல்ல, ஒற்றுமையோடு ஊரே ஒன்றுகூடி விட்டதால் ஊர்ப் பிரமுகரும் அரசியல் செல்வாக்குப் படைத்த அவருடைய ஓரிரு ஆதரவாளர்களும் ஒன்றும் செய்து கொள்ள முடியவில்லை. இப்போது அந்த நிலத்தில் பல வகைத் தீவனப் பயிர்களை விளைவித்து, மலிவு விலைக்கு விற்று வருகிறார்கள். ரூஃப்ஸ் உதவியுடன் கிராமவாசிகளே இதனை நடத்தி வருகிறார்கள்.

அடுத்த கட்டமாக கால்நடை மருத்துவ மையம் அமைத்துத் தர உதவியது ரூஃப்ஸ். டாக்டர் திருச்செல்வம் என்பவரின் தலைமையில் இந்த மையம் சிறப்பாக இயங்கி வருகிறது.

"நான் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் இல்லை. அதனால் விடுமுறை நாட்களில் அவசரக் கேஸ்களைக் கவனிக்க உள்ளூர் இளைஞர் பிரகாசத்தைப் பழக்கி வருகிறேன். நாளடைவில் அவரே முழுப் பொறுப்பையும் ஏற்று, இந்த மையத்தை நடத்துவார்" என்றார் டாக்டர் திருச்செல்வம். தனியார் மருத்துவமனையில் ஒவ்வொரு நோயாளி பற்றியும் குறிப்புகள் அடங்கிய அட்டைகளைத் தயாரித்து அகர வரிசைப்படுத்தி வைப்பது போல் இந்தக் கால்நடை மருத்துவ மையத்திலும் மிருகங்களுக்குப் பதிவேடுகள் தயாரித்து வைத்துள்ளார் டாக்டர் திருச்செல்வம்.

எந்தத் திட்டத்திலும் ஊர் மக்களையே ஈடுபடுத்துவதில் மிகத் தீவிரமாய் இருக்கிறது ரூஃப்ஸ். உதாரணமாக, அரசின் RLEGP திட்டத்தின்கீழ் கடனுதவி பெற்று வீடுகள் கட்டுவோர் தாமே செங்கல் சூளை அமைத்து அவ்வீடுகளுக்குத் தேவையான செங்



* ஸ்ரீனிவாசன்



* இரவுப் பள்ளியில்



"வருஷம்பூராவும் இந்தக்காரை ஓட்டிக்கிட்டுத்தான் இருக்கேன். ரிப்பேருக்குன்னு ஒரு பைசா கூடக் கொடுத்ததில்லே சார்!"

"மெக்கானிக்கூடச் சொன்னான் . காசே தர்றதில்லேன்னு!"

— உம்மணாம் மூஞ்சி

கற்களை உற்பத்தி செய்து கொள்ளத் திட்டம் வகுத்துத் தந்து உதவியது ரூஃப்ஸ். செங்கற்களை வெளியிலிருந்து வாங்காமல் தாங்களே தயாரித்ததால் கணிசமான தொகை மிச்சமானது. இதன் பயனாக இவர்கள் கட்டிக் கொண்ட வீடுகளின் அளவு சற்றுப் பெரிதாக அமைந்தது. அரசு 12' X 17' அடிக்கு வீடு கட்ட அளித்த தொகையில் 22' X 16' அளவு வீடு கட்டினார்கள்.

இவர்களது செங்கல் சூளையில் பழங்காலத்து முறைப்படி ஏற்றம் கொண்டு தண்ணீர் இறைக்கப்படுகிறது. இயன்ற இடத்திலெல்லாம் மனித சக்தியைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புக்களை அளிக்கும் நோக்கமே இதற்குக் காரணம்.

AWAL என்று சுருக்கமாக அழைக்கப்படும் Association of Women Agricultural Labourers என்ற மகளிர் அமைப்பு ஒன்றை நிறுவ உதவியுள்ளது ரூஃப்ஸ். இந்த அமைப்பினரும் நவீன விவசாய முறைகளைக் கையாளாமல் பாரம்பரிய முறையில் எருது பூட்டி உழுதே நிலத்தைப் பயிரிடுகிறார்கள். இவர்களுக்கு நிலம் பெறவும் அதில் கிணறு வெட்டவும் பம்ப் செட் அமைக்கவும் புதுதில்லியில் உள்ள கனடா தேசத்தின் தூதரகம் உதவியுள்ளது. சங்க உறுப்பினர்கள் குப்பு என்பவரைத் தலைவியாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். குப்புவுடன் இருந்த துளசி, விஜயா என்ற இரு பெண்களும் தங்களுக்குள் அடிக்கடி சச்சரவுகள் வந்தாலும் தாங்களே அவற்றைத் தீர்த்துக் கொள்வதாகச் சொன்னார்கள். இன்னும் சிறிது காலம் அவர்களுக்குக் கணக்குகள் எழுதக் கற்றுத் தந்துவிட்டு, ரூஃப்ஸ் அவர்களை முற்றிலும் தனியாக இயங்கவிட்டுவிட்டு விலகிக் கொள்ளும் என்றார் ஸ்ரீனிவாசன்.

வேங்கைவாசலில் ரூஃப்ஸ் உதவியுடன் நடந்து வரும். குழந்தைகள் காப்பகம் ஓர் இனிய ஆச்சரியம். கீற்றுக் கூரை வேய்ந்த சிறிய கட்டடம். அதன் சுவர்களில் அலங்காரமாக ஒட்டப்‌''' 'டிருந்தன, குழந்தைகள் வரைந்த மழலை ஓவியங்கள். தரை மட்டத்திலிருந்து சுமார் ஒன்றரை அடி உயரத்திற்கு ஒரு பக்கச் சுவரைக் கரும்பலகையாக மாற்றியிருந்தனர். குழந்தைகள் கைக்கு எட்டிய உயரத்தில் இது இருந்தபடியால் சாக்குகளைக் கொண்டு ஆசை தீரத் தங்கள் கற்பனைகளைக் கெல்லாம் வடிகால் தந்து கொண்டிருந்த குழந்தைகளைப் பார்க்கவே சந்தோஷமாக இருந்தது. மிகச் சிறிய குழந்தைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள இந்தக் காப்பகம் தவிர, பகலில் வேலைக்குப் போகும் குழந்தைகள் பயில்வதற்கு இரவுப் பள்ளியும் சிறப்பாக இயங்கி வருகிறது. காப்பகத்திலும் சரி, இரவுப் பள்ளியிலும் சரி, நவீன முறை சாரா கல்வித் திட்டமே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஏராளமான கல்வி உபகரணங்களைத் தயாரித்து அளிப்பதில் உதவி வரும் சுஜாதா என்பவர், ரூஃப்ஸின் சென்னை அலுவலகத்தில் பணியாற்றுகிறார். "குழந்தைகள் விளையாட்டு மூலமே எளிய கணக்குகள் போடவும் எழுதப் படிக்கவும் கற்றுக் கொள்கின்றனர். இந்தப் பயிற்சி அவர்களுடைய பயத்தைப் போக்கித் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகிறது" என்றார் சுஜாதா.

வேங்கைவாசலில் ஆரம்பித்த நற்பணிகள் இப்போது சுற்றுவட்டாரக் கிராமங்களிலும் பரவியுள்ளன. சுமார் பத்து கிராமங்கள் ரூஃப்ஸ் உதவியுடன் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அவற்றுள் ஒன்றான இந்திரா நகரில் ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. அதன் தலைவி கஸ்தூரி, சங்க உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர். ரூஃப்ஸின் உதவியை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்தார் அவர். வேறொருவரின் தறியில் சொற்பக் கூலிக்கு வேலை செய்து வந்த காலம் மாறிப் போய் இப்போது சுமார் நூறு அங்கத்தினர்கள் தங்களுக்குச் சொந்தமான தறிகளில் நெய்து, கூட்டுறவு முறையில் விற்பனை செய்து லாபகரமாகத் தொழில் நடத்தி வருவதைச் சொன்னார் கஸ்தூரி.

இந்திரா நகருக்கு மின் இணைப்புக் கிடைத்த கதை மிகவும் சுவாரஸ்யமானது: தமிழக அரசு, கிராமங்களுக்கு நூறு சதவிகித மின் இணைப்புக் கொடுத்துவிட்டதாக மார் தட்டிக் கொண்டிருந்தது. இந்நிலையில், மிக நாகரிகமான சென்னை நகருக்கு வெகு அருகே இருக்கும் இந்திரா நகர் இருள் சூழ்ந்தே இருந்தது. இந்திரா நகர் கிராமவாசிகள் பலமுறை மின் துறை அலுவலகத்தில் முறையிட்டும் பயனில்லாமல் இருந்தது.

ரூஃப்ஸைச் சேர்ந்த ஸ்ரீனிவாசன் இந்திரா நகர் வாசிகள் சார்பில் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டார். ரசீது வழங்கப்படாமல் கிராம வாசிகளிடம் அவ்வப்போது சிறு சிறு தொகைகள் வசூலிக்கப்பட்டதைத் தட்டிக் கேட்டார். இனி எந்தத் தொகையும் செலுத்த வேண்டாம் என்றும்



ஸாஃப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன்.



இந்திரா நகர் மக்களிடம் சொன்னார். முறையான கோரிக்கைகளுக்கு மதிப்பில்லாமல் போகவே ஸ்ரீனிவாசன் ஒரு நாடகம் ஆடத் தீர்மானித்தார். மின் துறைச் செயலர் விஜயராகவனிடம் சென்று இந்திரா நகர் கிராமத்துக்கு மின் இணைப்பைத் துவக்கி வைக்கும் விழாவிற்குத் தலைமை தாங்க அழைத்து, தேதியும் நிச்சயித்தார்! முதலில் மின் இணைப்பு இல்லாமல் ஒரு கிராமம் சென்னைக்கு வெகு அருகே இருப்பதை அறிந்து அதிர்ந்த விஜயராகவன், பிறகு விழாவிற்குத் தலைமை தாங்க ஒப்புக் கொண்டார். இதற்குப் பிறகு டி. ஈ. அலுவலகத்திற்குச் சென்ற ஸ்ரீனிவாசன் இந்திரா நகருக்கு மின் இணைப்பு வழங்கும் விழாவுக்கு ஏற்பாடுகள் செய்தாகி விட்டது என்றும் இன்னும் பதினைந்து தினங்களுக்குள் இணைப்புக் கிடைக்காவிட்டால் மின்துறைத் தலைவர் நிகழ்ச்சிகளை ரத்து செய்யவோ ஒத்திப் போடவோ வேண்டியிருக்கும் என்றும் விளக்கினார். நிலைமையை உணர்ந்த அதிகாரிகள் வேறு வழியின்றிப் பத்து தினங்கள் இரவு பகலாக வேலை செய்து மின் இணைப்பு தர வேண்டியதாயிற்று! விழாவும் கோலாகலமாக நடந்தேறியது! அவ்விழாவில் பெருமைகளைத் தட்டிக் கொண்டு போக முயன்ற அரசியல்வாதியின் கதை வேறு விஷயம்!

ஸ்ரீனிவாசன் சொன்னார்: "ஒவ்வொரு திட்டத்தைச் செயலாற்றும் போதும் அரசியல் மற்றும் அரசாங்க அமைப்புக்களிடமிருந்து அதற்கு முட்டுக்கட்டைகளும் எதிர்ப்பும் இருக்கும். காரணம், எந்த அளவிற்கு ஒரு திட்டம் துரிதமாக நிறைவேறுகிறதோ அந்த அளவிற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பணம் பண்ணும் சந்தர்ப்பம் குறைகிறது என்பதுதான். இதனால் எங்களுக்கும் பல அரசியல், அரசாங்க அமைப்புக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருந்தன. ஆனால் இப்போதெல்லாம் எங்கள் செயல்முறைகளைப் பற்றியும் அவை அடைந்த வெற்றிகளைப் பற்றியும் கேள்விப்பட்டும், நேரில் பார்த்தும் அறிந்துள்ள அரசாங்க அதிகாரிகள், எங்களுடன் இணைந்து தங்கள் திட்டங்களைச் செயல்படுத்தத் தாங்களாகவே முன்வருகின்றனர்.

"அரசியல் சக்திகளின் அட்டகாசங்களைச் சமாளிப்பதுதான் கஷ்டம். காலம் காலமாக நிலப் பிரபுத்துவ அமைப்பில் அடிமைச் சேவகம் செய்து வந்த கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி அவர்களது உரிமைகளை உணர்த்தி ஒரு கட்டத்தில் வெற்றியும் பெற்று விடலாம்; ஆனால் அரசியல்வாதிகளின் பிடியிலிருந்து இவர்களை விடுவித்துச் சுயமாகச் சிந்திக்கச் செய்வதுதான் மிகச் சிரமமான காரியம். அனுபவங்கள்தான் இவர்களுக்கு உண்மை நிலையை உணர்த்த முடியும்."

ரூம்ப்ஸுக்கு அடிக்கல் நாட்டிய டாக்டர் சந்திரன் தேவனேசன் காலமாகி விட்டார். ஆனால் அவர் மனைவியும், ஸ்ரீனிவாசன், சுஜாதா போன்ற இன்னும் பல இளைஞர்களும் நற்பணியைத் தொடர்கின்றனர். பல உள்நாட்டு, அயல்நாட்டு அமைப்புக்களிலிருந்து, ரூம்ப்ஸுக்கு நிதியுதவியும் கிடைத்து வருகிறது.

நாங்கள் வெங்கைவாசலுக்குப் போயிருந்த போது எதிர்பாராத விதமாகப் பலத்த மழை பெய்தது. அந்தச் சமயத்தில் நாங்கள் நின்றிருந்த பால்வாடியின் கூரையைச் சந்தேகத்துடன் நிமிர்ந்து பார்த்தோம். உறுதியுடன் ரூம்ப்ஸின் உண்மைத் தொண்டிற்கு அது சான்று கூறியது. அதன்கீழ் குழந்தைகள் சந்தோஷம் கொப்பளித்த குரல்களில் பேசி விளையாடிக் கொண்டிருந்தன.

— சீதா ரவி

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்

அடுத்த இதழில்...



"காப்பாற்றுங்கள் பொம்மலாட்டக் கலையை!"

—சிறப்புக் கட்டுரை

விரைந்திடுவீர்! **பயனடைவீர்!**

முழுமையான பாதுகாப்புக்கு உறைவிடம்

தமிழ்நாடு சீட்டுக் கழகம்

பொதுமக்கள் நன்மைக்காகத் தமிழ்நாடு அரசு மாதாந்திரச் சீட்டுக்களை நடத்துகிறது.

மாதத் தவணைத் தொகை	:	ரூ. 100 முதல் 1250 வரை.
சீட்டுத் தொகை	:	ரூ. 3000 முதல் 50,000 வரை.

சிறப்பியல்புகள்

1. சீட்டில் சேர அனுமதிக் கட்டணம் கிடையாது.
2. சீட்டுப் பணம் பெற ஆவணம் எழுதக் கட்டணம் வசூலிப்பதில்லை.
3. சீட்டில் எப்பொழுது வேண்டுமானாலும் சேரலாம்.
4. உறுப்பினர்கள் நலன் கருதி தள்ளுத் தொகை 30%க்கு மிகாமல் ஏலம் நடத்தப்படுகிறது.
5. இதுவரை 6500க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்து எமது பணியைச் சிறக்கச் செய்துள்ளனர்; பயன் அடைந்துள்ளனர்.

முழு விவரங்களுக்கு அணுகுக:

தமிழ்நாடு சீட்டுக் கழகம்,
32/2, ரங்கநாதன் தெரு,
மாம்பலம் இரயில் நிலையம் அருகில்,
தி. நகர், சென்னை — 600 017.

கிளை: 8, வேலாயுதம் தெரு (வள்ளுவர் கோட்டம் அருகில்),
நுங்கம்பாக்கம்,
சென்னை — 600 034.

DIPR No: 1017/MS/87/22.4.87/MA.


நட்சத்திரத் தேர்வு!
கதை: கே. ஜெயலக்ஷ்மி படம்: ஜினு
அம்மா, சுரேஷிடம் ஒரு புகைப்படத்தைக் காட்டி...
இவளைப் பிடிச்சிருக்கா சுரேஷ்?
என்ன நட்சத்திரம்?
மகம்
நான்தான் மூலத்தில் பிறந்த பெண்ணைப் பார்க்கச் சொல்லியிருந்தேனே அம்மா!
சுரேஷின் முடிவுக்கு ஒரு காரணம் உண்டு. அவன் தங்கை ராதிகாவுக்கு மூல நட்சத்திரம்...
அம்மா, ராதிகாவுக்குக் கல்யாணம் முடிக்க எவ்வளவு சிரமப் பட்டோம்! அதனால் தானே அவள் கழுத்தில் தாலி ஏறினகையோடு நான் இப்படி ஒரு சபதம் எடுத்தேன்?
அது சரிடா, ஆனா உனக்கு வர ஜாதகங்களில் எதுவும் மூலமாக அமையலியே?
அதுக்காக என் சபதத்தைக் கைவிட முடியாதும்மா!
சில காலம் சென்று...
சுரேஷ்! ஒரு மூல நட்சத்திர ஜாதகம் வந்திருக்கு. பொண்ணு பார்க்கச் சுமார் தான்...


பாதகமில்லை; கல்பனான்னு பெயர் அழகா இருக்கு. இவளையே முடிச்சுடு. இவள் பெற்றோர் என்ன பாடு பட்டாங்களோ; இன்றைக்காவது அவங்க கஷ்டம் தீரட்டும்!
நிச்சயதார்த்த ஏற்பாடுகள் நடக்க, ஒரு நாள் கல்பனைக் காணச் சென்றான் சுரேஷ்...
இந்தத் தெருவில் தானே கல்பனா இருக்கா? ஒரு ஸர்ப்ரைஸ் விசிட்...
காலிங் பெல்லை அழுத்தப் போன போது...
என்ன கல்பனா, உன் அப்பா உனக்குக் கலெக்டர், டாக்டர், இன்ஜினியர், ஆடிட்டர்னு தேடிக்கொண்டிருந்தார். கடைசியில் வெறும் பி.காமுக்கா கழுத்தை நீட்டப் போறே?
எல்லாம் என் துரதிர்ஷ்டம் பிரியா! மூலத்தில் பிறந்து தொலைச்சுட்டேனே! மெத்தப்படிச்சு, கை நிறைய சம்பாதிக்கிறவங்க என்னை ஒதுக்கறாங்க. கடைசியில் வேறு வழியில்லாமே...
ஓசைப்படுத்தாமல் திரும்பினான் சுரேஷ். வீட்டை அடைந்ததும்...
அம்மா! எனக்கு மூலநட்சத்திரம் வேண்டவே வேண்டாம். அந்த மகம் நட்சத்திரத்தையே முடிச்சுடு!



மக்கள் என் பக்கம்

சந்திரமண்டலத்திற்கு நாம் சரம் சரமாக ராக்கெட் விட்டு அந்தச் சந்திரனிலேயே குடியேறும் காலம் வந்தால் கூட இந்த வகை சினிமா டெக்னிக்குகள் மட்டும் மாறவே மாறாதோ?

இப்போதெல்லாம் சினிமாப் படங்கள் கூட இன்றைய அரசியலைத் தாக்குத் தாக்கு என்று தாக்கத் தொடங்கிவிட்டன. அந்த வரிசையில் 'மக்கள் என் பக்கம்' இன்னொரு படம்.

கடத்தல் மன்னனாக சத்யராஜ். எடுத்த எடுப்பில் அவருடைய ஆட்கள் போலீஸில் மாட்டிக் கொள்ள, அவரும் உள்ளே போய் விடும் நிலைமை வர, எதிர்க் கட்சி வக்கீலின் ஜூனியர் அம்பிகாவை மடக்கி, அவரிடமிருந்து முக்கியமான தஸ்தாவேஜுகளை சத்யராஜ் க்ரூப் கவர்ந்து கொள்ள, சத்யராஜ் சிறைக்குப் போகாமல் தப்பிக்கிறார். அம்பிகா வேலையை இழக்கிறார்.

அம்பிகா என்றால் வழக்கம் போல் டூயட் சகிதம் கதாநாயகனைக் காதலிக்கும் அம்பிகா இல்லை. ஒரு பையனுக்குத் தாயாக அம்பிகா. வேலை போய்விட்டதும் குழந்தையின் படிப்புக்கு ஃபீஸ் கட்ட முடியாமல் தவிக்க, சத்யராஜ் அவருக்கு உதவி செய்கிறார். எப்படி? அம்பிகாவின் குழந்தை கடத்தப்பட, அந்தக் குழந்தையை மீட்டு வருவதற்காகச் சென்று, சண்டை சாகசங்கள் புரிந்து டப் டப் என்று சுட்டு.... அவ்வளவுதான்! சத்யராஜ் என்றாலே பட்டாசாய் வெடித்த அம்பிகா, அப்புறம் சத்யராஜிற்காகக் கோர்ட்டில் வாதாடத் தொடங்குகிறார்.

ராஜேஷ்தான் அரசியல்வாதி. ஒரு பக்கம் லஞ்சம் வாங்க மாட்டேன் என்கிறார். சாராயக்கடை ஒழிப்புப்போராட்டம் நடத்துகிறார். இன்னொரு பக்கம் எப்படாவென்றால் துணை முதல்வர் ஆவதற்கு சாம, தான, பேத தண்டங்களைப் பயன்படுத்துகிறார். அதனால் காரெக்டரே கொஞ்சம் குழப்பமாய் அமைந்துவிட்டது.

சிவப்புக் கார் வந்து நிற்கிறது. படா ஸ்டைலாக சத்யராஜ் இறங்குகிறார். ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கிறார். கோர்ட்டுக்கு உள்ளே போகிறார். ஜனங்கள் 'பட பட பட' என்று கைதட்டுகிறார்கள். சத்யராஜ் தனக்கென்று வைத்திருக்கும் சில முத்திரைகளை அங்கங்கே தூவியிருக்கிறார்."

ரகுவரனும், நிழல்கள் ரவியும் சத்யராஜின் அம்புகள். கொடுத்த வேலையைக் கச்சிதமாகச் செய்திருக்கிறார்கள்.

வக்கீல் நாகேஷிற்கு வேலையே இல்லை. படத்தில் அவர் வருவதும், நிற்பதும், பேசுவதும், ஜால்ரா அடிப்பதும் மனத்தில் பதியாததாலோ என்னவோ, அவர் உயிரை விடுவதும் கூட மனத்தில் பதியமாட்டேன் என்கிறது.

ராஜேஷும் அம்பிகாவும் காதலிக்க, திடீரென்று மழை பெய்ய, திடீரென்று அலங்காரம் செய்யப்பட்ட ஒரு குடிசை தென்படுமாம்; குடிசைக்கு முன்னால் நெருப்பு வளர்த்துக் கொண்டு முக்கால் நிர்வாண ஜெயமாலினி (குமட்டல்!) ஆடுவாராம். கூட இன்னொர் ஆசாமி ஜெயமாலினிக்குச் சுளுக்கெடுப்பாராம். உடனே அம்பிகா ராஜேஷிடம் தன்னை இழப்பாராம். சந்திரமண்டலத்திற்கு நாம் சரம் சரமாக ராக்கெட் விட்டு அந்தச் சந்திரனிலேயே குடியேறும் காலம் வந்தால்கூட இந்த வகை சினிமா டெக்னிக்குகள் மட்டும் மாறவே மாறாதோ?

அந்தக் கடைசி சீனில் சத்யராஜ் அத்தனை பேரை மிஷின் கன்னால் சாகடிப்பது மிகை. அப்படியும் எதிரி ராஜேஷ் தப்பி விடுகிறாரே! கொஞ்சம் மூளையை உபயோகித்துச் செயல் பட்டிருக்கக் கூடாது?

படம் தொடங்கிச் சிறிது நேரம் ரேடியோ டிராமா. அப்புறம் இடைவேளைவரை ஜிகு ஜிகுவென்று ஊருக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ். இண்டர்வெல்லுக்கு மேல் லொடங், லொடக்!

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)


எல்லோரும்...
..எல்லோரும்...
..எல்லோரும்...
எல்லோருமே
விரும்புவது
நியூட்ரின்
ட்விங்க்
Twink
SOFT DRINK CONCENTRATE
Orange
ஆரஞ்சு
லெமன்
மேங்கோ
பைனாப்பிள்
கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸன்ட்ரேட்
nutrine
சுவைகளும் புதுமை, சுவைத்திட இனிமை
ACIL/090/87-Tam



மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸூப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் – அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு